# புலர்காலையின் வலி

இயல்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# புலர்காலையின் வலி

## இயல்வாணன்

292717

தாயதி

தாயதி வெளியீடு - 14

14298 CC
PL(CC)
292717 (CC)
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CC
894.811301

புலர்காலையின் வலி
(சிறுகதைகள்)
ஆசிரியர்: இயல்வாணன்

*Pularkaalayin Vali*
*(Short Stories)*
*Author: Iyalvaanan*
*©S.Srikumaran*

*First Edition - August 2022*

*Book & Cover Design: rashmy*

*Published by - Thayathy*
*+41 793343522*
*thayathy12@gmail.com*

*Price: SLR. 650*
*INR. 220*

*Distribution in India:*
*Bharathi Puthakalayam*
*No:7, Elango Salai*
*Teynampet*
*Chennai- 600018*
*Phone: 044 24332924*

ISBN: 978-624-98471-6-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயல்வாணன் (1971)**

இயற்பெயர் ஸ்ரீகுமரன். இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் சுன்னாகம் இவரது பிறப்பிடமும் வாழிடமும். பள்ளிக் கல்வித்துறையில் அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தி எழுத்து, நேர்காணல், சிறுவர் இலக்கியம், புகைப்படத்துறை, பத்திரிகைத்துறை என விரிந்த தளத்தில் செயற்படுபவர். `சுவடுகள்` (நாவல் - 1992), `அற்றுப் போன அழகு` (கட்டுரைகள் - 2000), `செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்` (சிறுவர் பத்திகள் - 2008), `பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்` (சிறுவர் நவீனம் - 2017) என்பன நூலாக வெளிவந்துள்ளன.

மனைவி சிவரஞ்சினி, பிள்ளைகள் ஸ்ரீபிரியன், சிவஇனியன், சிவசங்கவி

முகவரி: பத்மபதி, முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

மின்னஞ்சல்: iyalvaanan@gmail.com

கைபேசி: 0779050037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்:

க.தணிகாசலம்
சி.கருணாகரன்
புதுவை இரத்தினதுரை
அமரர் ஆ.சி.முருகுப்பிள்ளை
அமரர் க.பாலநடராஜன் ஐயர்
அமரர் ம.வ.கானமயில்நாதன்
கா.குமாரதாசன்
கி.செல்மர் எமில்
க.சௌந்தரராஜன் ஐயர்
சி.ரமேஷ்
ப.தயாளன்
தானா விஷ்ணு
தில்லை
றஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானரதன் (வை.சச்சிதானந்தசிவம்)
இளையவன் (க.பாலநடராஜன் ஐயர்)
ஆகியோருக்கு சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

**சிறுகதை** சார்ந்து எனது பங்களிப்பு மிகக் குறைவானது. 1990 முதல் நீண்ட கால இடைவெளிக்குள் இவ்வளவு சிறுகதைகளையே எழுத முடிந்துள்ளது. அந்தந்தக் காலத்தையும் அந்தந்தக் கால மனநிலையையும் பார்வை மாறுபாட்டையும் இந்தக் கதைகள் பிரதிபலிக்கின்றன.

படிக்கின்ற காலத்திலேயே ஒரு பத்திரிகையாளனாகப் பணியாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்படிப் பணியாற்றுகின்ற போது வாரமலருக்கு எழுதுவதில் இருந்து சிறுகதை உலகுக்குள் பிரவேசித்தேன். 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆந் திகதி எனது முதலாவது சிறுகதை உள்ளத்து உறுதி ஈழநாட்டில் வெளியானது. அடுத்த வாரம் ஜூன் 10ஆந் திகதி நான் பணியாற்றிய முரசொலி பத்திரிகையில் அமைதியைத் தேடி என்ற சிறுகதை வெளிவந்தது. பத்மமகன் என்ற புனைபெயரில் இக்கதைகளை எழுதினேன். ஆரம்பக் கதைகளான அவற்றை இந்நூலில் சேர்க்கவில்லை.

ஜூன் 11இல் ஆரம்பித்த யுத்தம் பத்திரிகைகளின் வாரமலர்களை நிறுத்தியதுடன் பொருளாதாரத் தடை காரணமாக அப்பியாசப் புத்தகத் தாள், பிறவுண் தாள், மணிலா தாள், பைல் கவர்களில் பத்திரிகைகளை அச்சிடும் நிலையை ஏற்படுத்தியது. அத்தோடு எனது சிறுகதை அவாவும் குன்றிப் போனது.

பின்னர்தான் சிறுகதைகள் தொடர்பான வாசிப்பு அனுபவம் மேம்பட்டது. நிதர்சனம் நிறுவனம் 1991இல் ஒரு சிறுகதைப் பட்டறையை நடத்தியது. அதில் கோலம் என்ற சிறுகதையை எழுதினேன். பிரசுரமாகாமலே இருந்த அதனை 2008இல்தான் பிரசுரிக்க முடிந்தது. இடையில் வெளிச்சத்தில் கருணாகரனின் தூண்டுதலில் நான்கு சிறுகதைகளை எழுதினேன். தாயகத்தில் இரண்டு சிறுகதைகள் வெளிவந்தன. 1996 இடப்பெயர்வின் பின் ஈழநாட்டில் ஒரு சிறுகதை எழுதினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளத் திரும்பி வந்து, அச்சமும் நெருக்கடிகளும் மிக்க காலத்தில் சஞ்சீவியில் இரு சிறுகதைகளை எழுதினேன். எழுத்துக்கள் விளைவித்த நெருக்கடிகள் காரணமாக நீண்டகாலம் எழுதாமலே இருந்து விட்டேன். அதன் பின்னான இருபது வருடங்களில் இரண்டு சிறுகதைகளையே எழுதியுள்ளேன்.

இவற்றை ஒரு தொகுப்பாக்குவது கூட 'அந்த' நெருக்கடிகள் சார்ந்த அச்சத்தாலேயே தள்ளிப் போனது. இவற்றைத் தொகுப்பாக்குமாறு கருணாகரன், சி.ரமேஷ், தானா விஷ்னு, ப.தயாளன் ஆகியோர் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தனர். ஆயினும், நான் அக்கறையற்று இருந்தேன்.

தாயதியால் வெளியிடுவதற்காக சிறுகதைகளைத் தாருங்கள் என்று கவிஞர் தில்லை கேட்ட போது அதை ஒரு சந்தர்ப்பமாகக் கருதிச் சம்மதித்தேன். அவரது முயற்சியால் இது நூலாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு எனது நன்றிகள். இந்தச் சிறுகதைகளை வெளியிட்ட வெளிச்சம், வெள்ளிமலை, தாயகம், கலைமுகம், அறத் தமிழ் ஞானம் சஞ்சிகைகளுக்கும், ஈழநாடு, தினக்குரல், சஞ்சீவி ஆகிய பத்திரிகைகளுக்கும், அதன் ஆசிரியர்களுக்கும் நன்றிகள். நூலையும் அட்டையையும் அழகாக வடிவமைப்புச் செய்த றஷ்மி, அணிந்துரை வழங்கிய கருணாகரன், மெய்ப்புத் திருத்திய ப. தயாளன், சி.ரமேஷ் ஆகியோருக்கும் நன்றிகள்.

**இயல்வாணன்**

23-12-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்வாணனின் சிறுகதைகள்

**இயல்வாணனின்** இந்தக் கதைகளில் பெரும்பாலானவற்றை இவை எழுதப்பட்ட காலத்திலேயே படித்திருக்கிறேன். அப்பொழுது உண்டாகிய புரிதலும் மனநிலையும் வேறு. இப்பொழுது மீளப் படிக்கும் போது உண்டாகும் புரிதலும் மனநிலையும் வேறு. பிந்திய வாசிப்பு முன்னர் உணராத மேலும் ஒரு கோணத்தையும் வேறான புரிதலையும் தருகிறது. இதற்குக் காரணம், இவை யுத்த காலகட்டத்தை மையப்படுத்திய கதைகளாக இருப்பதாகும். அதனால் யுத்தச் (கால) சூழலே முதுமையடைகிறது. யுத்தத்தின் குணமே அதுதான். எல்லாவற்றையும் பின் தள்ளிவிட்டுத் தன்னை எல்லாவற்றிலும் நிறுவி நிற்பது. இதனால் அந்த சூழலும் அந்த நெருக்குவாரங்களில் சிக்கிய வாழ்க்கையும் அதன் அனுபவமும் யுத்தத்தை எதிர்கொள்ளும் சமூகத்தின் உளநிலையும் இந்தக் கதைகளில் தீவிரமடைந்துள்ளன. இதன் நிமித்தம், யுத்தத்தை எதிர்கொண்ட தமிழ்ச் சமூகத்தின் மனநிலையில் இந்தக் கதைகளில் பெரும்பாலானவை எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தை நடத்தும் தரப்பு அல்லது அதை ஆதரிக்கும் தரப்பின் உளநிலை வேறு. அதை எதிர்கொள்ளும் தரப்பின் உளநிலை வேறு. இதை இன்னும் லேசாகச் சொல்வதென்றால், ஒடுக்குகின்ற தரப்பின் உளநிலைக்கும் ஒடுக்குமுறைக்கு எதிரான தரப்பின் உளநிலைக்கும் இடையிலுள்ள வேறுபாடு இது. யுத்தத்தை அல்லது ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும் தரப்பு தவிர்க்க முடியாமல் எதிர் யுத்தத்தை அல்லது எதிர் வன்முறையை ஆதரிக்க வேண்டி நேர்கிறது. அதன் விருப்புக்கும் இயல்பு நிலைக்கும் அப்பால் தவிர்க்க முடியாமல் நிகழும் விபத்து இது. விபத்து என்று ஏன் இங்கே இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், எதிர்பாராமல் நிகழ்வதாக இது நேர்கிறது என்பதாலும் தவிர்க்க முடியாமல் அமைகிறது என்பதாலும்.

திட்டமிட்டு ஒன்றை ஆதரிப்பதும் ஏற்பதும் வேறு. எதிர்பார்க்காமலே ஒன்றை எதிர்கொள்ள நேர்வது வேறு. அப்படி எதிர்கொள்ளும்போது அதன் போக்கில் நாம் அடிபட்டோ இழுபட்டோ செல்ல வேண்டி நேர்ந்து விடுகிறது. இந்தக் கதைகளில் உள்ள பல நிகழ்ச்சிகளும் அவற்றோடு இணைந்திருக்கும் மனிதர்களும் இவ்வாறான எதிர்பார்த்திராத விபத்தில் சிக்கி, அதை எதிர் கொள்ள நேரிடுவதை உணர முடிகிறது. அப்போதைய பாடுகளைப் பேசுவதில் கரிசனை கொண்டிருக்கிறார் இயல்வாணன்.

யுத்தத்தை எதிர்கொண்ட தமிழ்ச் சமூகத்தின் கண்ணோட்டத்தின்படி இதிலே வருகின்ற கதை மாந்தர்களை விடவும் அந்தக் கால நிலவரங்களே அழுத்தம் பெறுகின்றன. யுத்தம் முடிந்த பின், இன்னும் அந்தக் காலக் கதைகளை – நிலவரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் நினைவு மீட்டலாகச் சொல்வதை நேரிலே பார்க்கலாம். இதை விட இலக்கியமாக வெளிப்படுவதும் கூட. யுத்தத்திற்குப் பிந்தி வந்த ஈழத்தமிழர்களின் புனைவு மற்றும் புனைவு சாராத எழுத்துகளில் - வெளிப்பாடுகளில் - இதனை மேலும் அவதானிக்கலாம். யுத்தச் சூழலுக்கு அப்பாலிருந்தவர்களையும் கூட இது விட்டு வைக்கவில்லை. ஷோபாசக்தி, தெய்வீகன், அ.இரவி, சயந்தன் போன்றோரின் கதைகள் தொடக்கம் கற்பகம் யசோதராவின் நீத்தார் பாடல், என் மகள் கேள்வி கேட்பவள் மற்றும் சேரனின் காடாற்று கவிதைகள் வரையில் இது நிகழ்ந்துள்ளது. மேலும் தொடர்ந்து கொண்டுமுள்ளது. அந்தளவுக்கு அது அவர்களுடைய மனதில் ஆழப் பதிந்துள்ளன. இதனால்தான் அந்தக் காலம் கடந்து போனாலும் நினைவிலிருந்து அது எளிதாக அழியமுடியாமல், கடந்து செல்ல முடியாமல் அதே வெம்மையோடும் குருதி மணக்கும் ரணத்தோடும் உள்ளது. பலரிடத்திலே அது ஒரு பழியுணர்ச்சியாக தேங்கிக் கிடப்பதும் சமயங்களில் உயிர்த்துச் சந்நதமாடுவதும் இதனாலேயே. ஆனால் இதைக் கடக்க வேண்டும். (சிலர் கடந்துள்ளனர்). இங்கு அந்த நிலவரங்களின் வழியாகவே கதை மாந்தர்களையும் அவர்களுடைய கதைகளையும் அறிகிறோம். அதற்காக இவை யுத்தம் முடிந்த பின்னர் சொல்லப்படும் கதைகளல்ல. யுத்தத்தின் போது எழுதப்பட்ட – சொல்லப்பட்ட கதைகள்.

1990 களில் இலங்கையின் வடக்குப் பகுதியின் நிலவரங்களை – குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டுச் சூழலின் நிலவரங்களை மையப்படுத்திச் சொல்லப்படும் கதைகள் இவை. அது ஈழப்போராட்டம் போராக வளர்ச்சியடைந்திருந்த காலகட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் நெருக்குவாரங்களால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த சூழல். ஆகவே யுத்தம் உண்டாக்கிய இடப்பெயர்வுகள், அதன்காரணமாக புதிய இடங்களில் வாழ நேரிட்ட அகதி வாழ்க்கை, அதன் இடர்பாடுகள், அதன்போது நிகழும் சாதி, சமூக, பொருளாதார நெருக்குவாரங்கள், இவை உண்டாக்கும் மன அழுத்தம் இப்படி அந்தக் காலம் விரிகிறது. ஏறக்குறைய அந்தக் கால இலக்கிய அறிக்கையாக.

இதில் ஒரு கதை. 'இன்னும் அதே'. 1990களில் வடக்குக் கிழக்கில் நடந்த யுத்தத்தை எதிர்கொள்ளும்போது அதற்கு முந்திய இரண்டாம் உலக யுத்த காலத்தில் இலங்கைச் சூழல், அதிலும் யாழ்ப்பாண நிலவரம், அதிலும் தன்னுடைய வாழ்க்கை அனுபவம் எத்தகையதாக இருந்தது என்று ஒரு முதியவர் கூறும் கதை – அனுபவம். இது முக்கியமானது. இரண்டு யுத்தங்களையும் ஒப்பிடுகிறது. அந்த நெருக்கடியிலும் அது, அந்த ஒப்பிடுகை ஒரு சுவாரசியத்தை அளிக்கிறது. கூடவே பல உண்மைகளையும் உணர்த்துகிறது. முந்திய, பிந்திய இரண்டு வாசிப்பிலும் இதை உணர்கிறேன். காலம் மாறினாலும் உலகத்தின் போக்குகளில் மாற்றங்கள் நிகழ்ந்தாலும் யுத்தம் பற்றிய அதிகாரத் தரப்பினரின் சிந்தனை, விருப்பு எதுவும் மாறவில்லை. அது எந்த அதிகாரத் தரப்பாக இருந்தாலும். அது வெவ்வேறு ரூபங்களில் ஏதோ வழியில் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதில் சாமானிய மனிதர்களின் பாடுகள் எவ்வாறிருக்கின்றன? அவர்கள் எப்படி நிர்க்கதியாக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் உணர்த்துகிறார் இயல்வாணன். இது போல ஒவ்வொரு கதையிலும் வெவ்வேறு அனுபவப் பிராந்தியங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது யுத்தம் முடிந்து விட்டது. இது யுத்தத்திற்குப் பிந்திய காலம். இரண்டும் நேரெதிர் வாழ்க்கை முறையைக் கொண்டவை. நேரெதிர் அனுபவத்தைக் கொண்டவை. யுத்தத்தின் படிப்பினைகள் ஏற்படுத்திய புரிதலும் சிந்தனையும் இந்தப் பிந்திய காலத்தில் செல்வாக்குச் செலுத்துவது. இது யுத்த கால மனநிலைக்கும் யுத்தம் முடிந்த பின்னான மனநிலைக்கும் (புரிதலுக்கும்) இடையிலான வேறுபாட்டினால் நிகழ்வது. இதுவே மேலும் ஒரு கோணத்தை அல்லது பல கோணங்களைப் பிந்திய வாசிப்பில் உண்டாக்குகிறது - அறியக் கூடியதாக இருக்கிறது.

ஆனாலும் சிலருக்கு அப்படியான மாற்று அனுபவம், மாற்றுப் புரிதல், மாற்றுச் சிந்தனை நேராமல் போகலாம். அது அவர்களுடைய அறம், அனுபவம், அறிவு, புரிதல் போன்றவற்றைப் பொறுத்தது. ஆனால் கதைகள் சுட்டும் வரலாற்றுப் பின்புலத்தோடு வாசிப்புச் செய்யும் போது நிச்சயமாக மாறுபட்டதொரு புரிதலும் அனுபவமும் ஏற்பட்டே தீரும். போரில் அல்லது போருக்காக என்னதான் பெரிய பெரிய விலைகளைக் கொடுத்தாலும் மனித வாழ்க்கைக்கு நிகரானதாக அது அமையாது. எத்தகைய பெரிய, அருமையான தியாகங்களைச் செய்தாலும் மிஞ்சும் வாழ்க்கை என்பது அளிக்கப்பட்ட தியாகத்துக்கு நிகராக அமைவதில்லை. வேண்டுமானால் இவற்றின் ஊடே செல்வாக்குச் செலுத்தும் அரசியல் அதிகாரத் தரப்புகள் இதன் மூலம் ஊட்டத்தைப் பெறலாம். அல்லது நன்மைகளை அனுபவிக்கலாம். சாதாரணர்களின் வாழ்க்கைக்கு எந்தப் பொசிப்பும் கிட்டுவதில்லை. இதுவே உண்மை. யதார்த்தம். இதுவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதை இன்று நேரடியாக - சாட்சி பூர்வமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகவே இந்தக் கதைகள் (போருக்குப்) பிந்திய வாசிப்பில் வேறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதலை ஏற்படுத்துகின்றன என்று கூறுகிறேன். அப்படிப் பார்த்தால் இந்தக் கதைகளுக்கான அன்றைய மதிப்பீடு வேறு. இன்றைய மதிப்பீடு வேறு. இதை வாசகரின் மனம் உணர்ந்து கொள்ளும் போது இவற்றின் பெறுமானம் குறித்த கேள்வியும் அது உண்டாக்கும் சிந்தனையும் மேலெழும். அந்த வகையில் இவற்றின் முக்கியத்துவம் அமைகிறது.

இவற்றை மீள வாசிக்கும்போது அல்லது புதிதாக ஒருவர் இந்தக் கதைகளுடன் அறிமுகமாகும்போது (நம்முடைய) கடந்த காலத்தின் சில கதவுகள் திறபடுகின்றன. அதன் வழியே நம் நினைவுகள் பின்னோக்கிச் செல்கின்றன. அதிலே நாம் வாழ்ந்த, அறிந்த வாழ்க்கை மீளக் காண்பிக்கப்படுகிறது. காலச் சித்திரத்தைத் தம்முள் கொண்டுள்ள இந்தக் கதைகளில் வரலாற்றின் முகம் தீர்க்கமாகப் பதிவாகியுள்ளது. சமகாலம் மட்டுமல்ல, கடந்த காலம், எதிர்காலம் என முக்காலமும் திறந்து பார்க்கப்படுகிறது. முக்காலத்தையும் திறந்து பேசுவதினூடாக முக்காலத்தின் ஊடும் ஒரு பயணம் நிகழ்கிறது. இந்தப் பயணத்தில் காலம், இடம், பொருள், ஏவல் என்பவற்றோடு மனிதர்களின் நடத்தைக் கோலங்களையும் பார்க்க முடிகிறது. இங்கே நிகழும் நிகழ்ச்சிகள் நம் வாழ்விலும் அதன் அருகிலும் நிகழ்ந்தவை. நிகழ்ந்து கொண்டிருப்பவை. இத்தனை சாத்தியங்களை இந்தக் கதைகளில் வெற்றிகரமாக நிகழ்த்துகிறார் இயல்வாணன். மகிழ்ச்சி. வாழ்த்து.

- **கருணாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிமப்படுத்தப்பட்ட வாழ்வெனும் துயர்

**ஈழத்து** இனப்பிரச்சினை என்றால் போரில் பங்கேற்பதும், அதற்கு ஆதரவாக இருப்பதும் என்று மட்டுமே நினைக்க வேண்டியதில்லை. இதற்கு அப்பால் இந்தப் போர்க்காலத்தைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் எப்படி எதிர்கொண்டனர் என்பதும் நாம் புரிந்துகொள்ள முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

ஒரு புறம் போரில் பங்கேற்கும் மனிதர்கள், அரசியல் கருத்தின் அடியாகப் போரை ஆதரிப்பவர்கள், போரின் நியாயங்களையும், தேவைகளையும் மக்கள் மயப்படுத்துபவர்கள் என்று இயங்கிக் கொண்டிருக்கும்போது, மறுபுறம் போராட்டத்தை அழித்தொழிக்கக் கடுமையான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் அரசும், அவர்களின் கட்டளைகளை மாத்திரமன்றி, தமக்குத் தெரிந்ததும் சூழலுக்கேற்றதுமான அனைத்தையும் குற்றவுணர்ச்சியின்றி செய்து முடிக்கும் இராணுவங்களின் "கடமைகள்" தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது, அவற்றையே ஊடகங்கள் செய்திகளாகவும் போர் நிலத்தின் வாழ்வாகவும் முன்வைத்துக் கொண்டிருக்கும் போது, அன்றாட உணவுக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும், தங்கள் குடும்பங்களின் வயிற்றுப் பசிக்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வதென்றே தெரியாமல் அல்லல் பட்ட கிராமத்து மக்களின் அலைக்கழிப்பை வெளிப்படுத்துவதில் இயல்வாணனின் சிறுகதைகள் அக்கறை கொள்கின்றன.

இந்தப் போரின் நெருக்கடிக்கு நடுவே, அன்புக்காக ஏங்கும் மனிதர்கள் இருக்கின்றனர். பயிர் பச்சைகள் செய்து உணவுத் தேவைகளைத் தீர்க்கின்றனர். இடம் பெயர்ந்த தருணங்களில் கூட புது வருடத்தைக் கொண்டாடுகின்றனர். புது வருடத்திற்காக ஆடைகளை உடுக்கின்றனர். போரும் அதன் நியாயங்களும் ஒரு புறமிருந்தாலும், இயல்பான வாழ்வும், மனித உணர்ச்சிகளின் தேவைகளும், அவர்களிடம் முதன்மையான வகிபாகமாக மாறித்தான் இருந்திருக்கிறது. போரின் தீவிரமான உணர்வெழுச்சியின் அக்கறைக்குமப்பால் அன்றாட வாழ்வைப் பற்றிய தேடல்களையும், தேவைகளையும் நோக்கி கிராம மக்களின் வாழ்வு உந்தித் தள்ளப்பட்டிருக்கின்றது என்பதை இயல்வாணனின் சிறுகதைகளின் மூலம் நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு மனிதனின் சேகரமாக இருக்கும் நினைவுகள் என்பது, முதலாவதாகச் சந்திக்கும் குழந்தைப் பருவ அனுபவங்களாலும், அறியும் ஆவலும், கிளர்ந்தெழும் ஆசைகளும் கொண்ட இளமைப்பருவங்களின் சம்பவங்களாலுமே நிறைந்திருக்கும். இயல்வாணனின் சிறுகதைகள் எங்கிலும், குழந்தைப் பருவமும், இளமைப்பருவமும் போரின் நியாயங்களையோ, தேவைகளையோ கவனத்திற்கொள்ளாமல் போர்க்காலத்தில் கிராமத்துச் சாதாரண மக்களின் வாழ்வும், அவற்றின் தேவைகளும் நிறைந்த சம்பவங்களே உயிர்ப்போடு இருக்கின்றன. அந்த தேவைகளை நிறைவு செய்ய அந்த மக்கள் என்னதான் செய்தார்கள் என்பதை மிக நுணுக்கமாகப் பதிவு செய்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொகுப்பிலுள்ள மிகச் சிறந்ததும் முக்கியமானதுமான கதைகளாக "புலர்காலையின் வலி, முடவன் நடை, இன்னும் அதே" போன்றவற்றையே சொல்ல முடியும். "இன்னும் அதே" என்ற கதை இரண்டாம் உலகப் போர், அந்தப் போரோடு தொடர்பற்ற நாட்டில், அந்தப் போரோடு சிறிதும் தொடர்பற்ற ஒரு கிராமத்தில் என்ன வகை அனுபவங்களையும், விளைவுகளையும் உருவாக்கின என்பதைப் பதிவு செய்வதனூடாக முற்றிலும் புதியதொரு அனுபவ வெளியைத் திறக்கிறது. அந்தக் கதையின் சம்பவங்கள் சமகால போரின் நிகழ்வுகளோடு இணைந்த கலப்பான அனுபவங்களைக் கிளர்த்துகின்றன. எனினும், அதைக் கதை சொல்லுதலின் ஆற்றலோடு இணைத்துப் புரிந்து கொள்வதைவிட அறியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொள்ளுகிறது என்ற வகையில் முக்கியமான ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், "புலர்காலையின் வலி" மற்றும் "முடவன் நடை" போன்ற கதைகள், கதை சொல்லுதலின் ஆற்றலோடு கதைச் சம்பவங்களையும் இணைத்து கவனத்திற்குரிய கதைகளாக மாறி நிற்கின்றன.

இரசாயன உரம், களை நாசினிகள் ஊருக்குள் வரும் போது, அவற்றைப் பயன்படுத்தி உருவாக்கும் பயிர்களை உண்டு பறவைகள் இறப்பதை மிகச் சிறிய ஒரு இடத்தில் குறிப்பிட்டாலும், போரினதும், வாழ்வாதாரப் பிரச்சினைகளின் சுமைகளாலும் பெரும் துயரத்திற்குள் ஆழ்ந்திருந்த போதும், தவிர்க்க முடியாத இடப்பெயர்வையும், அதன் அசௌகரியங்களையும் எதிர்கொண்ட போதும் அதற்குள்ளேயே ஒரு பறவைக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கும் மனமும் அந்தக் கிராமத்து மக்களிடம் இருந்தது என்பதைக் கவித்துவமாகச் சொல்கிறது. செண்பகம் என்ற பறவையை, அப்பறவையுடன் கிராமத்து மக்களுக்கிருந்த பல தரப்பட்ட உறவுகளை நெகிழும் வகையில் முன்வைக்கிறது. காதல் மனதில் உணரப்படும்போதும், இடம் பெயரும் போதும், புதிய உரம் ஊருக்கு வரும்போதும், இப்படி கிராமத்து மக்களின் அன்றாட வாழ்வின் சம்பவங்கள் தொடங்கி, இயல்பூக்க உணர்வுகள் மேலெழும் அனைத்துத் தருணங்களிலும் அவர்களோடு பறவைகள் எப்படி நெருங்கியிருந்தன என்பதை இந்தக் கதை சொல்கிறது.

இடம்பெயர்ந்து வேறொரு பகுதியில் இருக்கின்ற போது, அது துயரமாக இருந்த போதும், யாருமே இல்லாத ஊரில் பனைமரங்களின் கீழே செண்பகம் நிம்மதியாக வாழும் அல்லது வாழ வேண்டும் எனப் பறவைக்காக இரக்கப்படும் கிராமத்து மக்களின் மனநிலையை வெளிப்படுத்தி நிற்கிறது. போருக்குள் வாழ்ந்த போதும் கூட ஒரு பறவைக்காக ஏங்கும் மனம் கிராமத்து வாழ்வின் பிரிக்க முடியாத அடையாளமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கதையை இயல்வாணனின் மிகச் சிறந்த கதைகளில் ஒன்று என்றே கூற முடியும்.

"முடவன் நடை" என்ற சிறுகதை அதன் அமைப்பில் முக்கியமானது மாத்திரமல்ல, அது கொண்டிருக்கும் சம்பவங்களும் முக்கியமானவை. ஏழு மைல் தொலைவிலிருக்கும் ஒரு கிராமத்திலிருந்து, நகரத்திற்குச் சென்று, அங்கிருந்து பருத்தித்துறையை அடைந்து திரும்பி வரும் ஒருவர் வழி நெடுக தான் கண்டதும், சந்தித்ததுமான சம்பவங்களின் கோர்வைதான் இந்தக் கதை. கிராமத்திலிருந்து சைக்கிளில் சென்று, பின்னர்

292717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வண்டியில் பயணித்து, அதே மாதிரி வீடு திரும்புவது என்பது கதையின் அமைப்பு. வீட்டை விட்டு வெளியேறிய ஒருவர் வீடு வரும்வரை தாய் ஏங்குவது என்பது கதையின் கடைசி வரியாக இருந்தாலும், இராணுவக்கெடுபிடி, மக்களை நடக்க வைத்து அலைக்கழிக்கும் இராணுவக் காவலரண்கள், தனியார் பஸ் உரிமையாளர்களின் பயணக் கட்டணக் கொள்ளை என பல சம்பவங்கள் பயணத்தின் போது ஜன்னலுக்கு வெளியே காணும் காட்சிகள் போல வேகமாகக் கடந்து செல்கின்றன.

ஈழத்தில் பொண்ணும், புலம் பெயர் நாட்டில் மாப்பிள்ளையுமாகத் தொலைபேசியிலேயே குடும்பம் நடக்கிறது. அந்த தொலைபேசிக் காதலை நிகழ்த்துவதற்கு ஆடையலங்காரங்களுடன் நகரத்திற்கு ஏறி இறங்கும் பெண்கள், இராணுவத்தை கண்டால் அழும் குழந்தை என பல சம்பவங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால், இறுதிவரை எதற்காகக் கதையின் பிரதான கதாபாத்திரம் நகரத்திற்குச் சென்றான் என்பதைச் சொல்லாமலே விட்டு வாசகரின் ஊகத்தை தூண்டும் சிறந்ததொரு கதை. பயணத்தில் காட்சிகள் கடந்து செல்லும் வேகத்திற்கேற்ப, கதைச் சம்பவங்களையும் கடந்து செல்ல வைத்து கதைக்கான சிறந்த அமைப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் இயல்வாணன்.

ஈழத்து வாழ்க்கை என்பது போராலானது என்ற கதைகளுக்கு மாறாக, போருக்குள்ளும் கிராமத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள், சாதாரண மனிதர்கள் அன்றாட வாழ்வுக்காகப் போராடினர்; ஏங்கினர் என்பதை இயல்வாணனின் கதைகள் நம்மிடம் முன்வைக்கின்றன. அவர்கள் ஏங்கிய வாழ்வும், வாழ்வதற்காகச் செய்த வேலைகளும் மனித நேயமிக்கதும், விரோதங்களும், ஈகோக்களுமற்ற மனமும் போர்க்காலத்தில் நகரத்திற்கு முற்றிலும் புறம்பான ஒரு வாழ்வில் மையம் கொண்டிருந்தது என்பதை இயல்வாணனின் கதைகள் நம்மிடம் சொல்கின்றன. அந்த வகையில் ஈழத்துக் கதைச் சூழலில் புதியதொரு அனுபவ வெளியை நமக்குத் தருகின்றன.

இந்த தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியதோடு இயல்வாணனின் இந்தத்தொகுப்பு வெளிவருவதில் அக்கறை காட்டிய கவிஞர் கருணாகரன் மற்றும் தாயதி இந்த தொகுப்பை கொண்டுவருவதில் ஒத்துழைப்பு தந்த தம்பி இயல்வாணன் இருவருக்கும் பேரன்பும் நன்றியும்.

தொகுப்பை மகிழ்ச்சியுடன் வடிவமைத்த றஷ்மி, தாயதி வெளியீடுகளுடன் தொடர்ச்சியாக அதே அன்புடன் பயணிக்கும் சிராஜ் (பாரதி புத்தகாலயம், இந்தியா) மற்றும் தாயதியோடு பயணிக்கும் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**- தில்லை**

**'தாயதி' சமூக செயலூக்கத்திற்கான முன்னோடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. புலர்காலையின் வலி | 21
2. இன்னும் அதே | 29
3. பயிரில் புழு | 37
4. பந்தயக் குதிரை | 43
5. தாகம் | 51
6. சரிவு | 57
7. முடவன் நடை | 65
8. வெளிக்கும் | 72
9. புகை | 79
10. முடிந்த ஒரு இரவும் முடியாத ஒரு பகலும் | 85
11. தவிப்பு | 97
12. தாயினும் நல்ல | 100
13. கோலம் | 104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலர்காலையின் வலி

குயில்களின் கூக்குரல்கள், சேவல்களின் கூவல்கள், குருவிகளின் கீச்சொலிகள், கிளிகள், மைனாக்கள் இன்னும் ஏதேதோ பறவைகளின் குரலொலிகள். இந்தப் பூபாளராகத்திற்கு காது கொடுக்கும் சுகானுபவம்.. அப்பப்பா! இந்தக் கூட்டிசையை ஒரு நாளேனும் பதிவு செய்து வைக்க வேண்டும். இந்த இசைக்காக எனது மனதையும் காதுகளையும் திறந்து வைத்தேன். ஒவ்வொன்றின் இசையும் ஒன்று சேர்ந்து புதியதொரு இசையாக இழைந்து வருகிறது.

இது என்ன புதிய ஒலி... ஓ.. செண்பகத்தின் சத்தம். ஒகு.. உகு.. என மத்தளம் இசைப்பது போல. ஏனைய ஒலிகளுக்கு தாளம் போடுவது போல.

செண்பகத்தைப் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது.

அதன் ஒலியைக்கூட அண்மையில் கேட்டதாக ஞாபகமில்லை. யுத்தத்தின் சத்ததுக்கு முன்னால் தாம் எம்மாத்திரம் என்றெண்ணி எங்கேனும் சென்று விட்டனவா?

முன்பெல்லாம் எங்கள் வீட்டில் பனை ஓலையை குத்திச்சாத்தி அமைத்த வேலியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்குகளுக்குள் நுழைந்து புழுக்களைத் தேடிக்கொண்டிருக்கும் இந்தச் செண்பகங்கள். ஓலைக்கு ஓலை தாவி புழுக்களையும் பூச்சிகளையும் கொத்திக் கொண்டு நிலத்துக்கு வந்து அவற்றை உண்ணும். மீண்டும் வேலி இடுக்குகளுக்குள் நுழையும்.

கறுத்த உடலும் மண்ணிறச்சிறகும் சிவந்த கண்களுமாக தத்தித் தத்தித் திரியும் செண்பகம். ஒரு உற்சாகத்தையோ, மகிழ்ச்சியையோ வெளிக்காட்டாச் சுபாவம் அதற்கு. அடிக்கடி உடலைச் சிலிர்த்துக் கொள்ளும். அதன் அழகு ரசிக்கக் கூடியதல்ல. தாவிப் பறப்பதோ, நடப்பதோ கூட அழகானதல்ல. அடிக்கடி டீசல் இயந்திரம் போல ர்க்ஸ் என ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும்.

எங்கள் வீட்டில் பெரியதொரு முருங்கை மரம் நின்றது. வசந்த காலத்தில் முருங்கையிலும் பூக்களும் காய்களும் தொங்கும். அழகான வண்ணத்துப் பூச்சிகளெல்லாம் சுழன்று வரும். அப்போதுதான் முருங்கை மரத்தில் மயிர்கொட்டிகளெல்லாம் தலை காட்டும். இரவெல்லாம் இலைகளை அரித்துத் தின்று விட்டு, சூரிய ஒளியைக் கண்டதும் தப்பி ஓடி வந்து, அடிமரத்தில் குவிந்து கொள்ளும். பார்க்கச் சாம்பல் நிறத் தேன்கூடு போல இருக்கும்.

மயிர்கொட்டிகள் என்றாலே அம்மாவுக்கு ஆகாது. உலகத்திலே மிகக் கூடாதவற்றுள் ஒன்றாகவே அவர் மயிர்கொட்டிகளைக் கருதினார். தனது தாயாரின் கண் பார்வை போனதற்கு மயிர்கொட்டியின் மயிர் கருவிழிக்குள் குத்தியதுதான் காரணம் என்று அடிக்கடி சொல்லுவார். மயிர்கொட்டிகள் குவிந்திருக்கும் இடத்தில் மண்ணெண்ணெயை ஊற்றி ஓலைகளில் தீ மூட்டி எரித்து விடுவார். நெளிந்து தப்பி ஓடும் புழுக்களை எல்லாம் விட்டு வைக்கமாட்டார். தேடித்தேடி தடி ஒன்றினால் தட்டி எரி நெருப்பில் இடுவார்.

அம்மா பொரித்துத்தரும் இறாலைப் பார்க்கும் போதெல்லாம் எரிந்து சுருண்டிருக்கும் மயிர்கொட்டிகள்தான் ஞாபகத்திற்கு வரும். அதனால் நீண்ட காலமாக நான் இறால் சாப்பிடுவதில்லை. அப்போதெல்லாம் இந்தச் செண்பகங்களும் முருங்கை மரத்தடியில் அதிகமாகக் காணப்படும். அம்மாவின் வேலைகளை இலகுவாக்குவது போல அவை மயிர்கொட்டிகளைப் பிடித்து தின்று விடும். மயிர்கொட்டி உடலில் பட்டால் உண்டாகும் சுனைப்பை நானே அறிவேன். எத்தனையோ நாள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்டு அவஸ்தைப் பட்டிருக்கிறேன். வெங்காயமோ, சுடுசாம்பலோ தேய்த்தும் கூட அதன் நமைச்சல் தீராது.

அடிக்காலில் பட்டால் போதும். எங்கு தேய்த்தும் குணப்படாது. கத்தியை நெருப்பில் சூடு காட்டி, அதனைச் சொறியும் இடத்தில் வைத்து எடுத்தால் தான் குணமாகும். இந்தச் செண்பகங்களுக்குச் சொறிவு உண்டாவதில்லையா? இப்படி அலாதியாய்ச் சுவைத்து உண்கிறதே!

செண்பகங்களைக் கண்டால் அம்மா கடவுளைக் கண்டது போல பார்ப்பார்.

"வா... வா.. இந்தச் சனியன்களைப் பிடிச்சுத் திண்டு விடு" என்று தன் பாட்டில் சொல்லிக் கொள்வார்.

அக்காலத்தில் ஒரு சினிமாப்பாடலும் வந்தது. செண்பகத்தைக் காணும் போதெல்லாம் அதை உரத்துப் பாடுவேன். செண்பகமே செண்பகமே தென் பொதிகை சந்தனமே.. என்று அப்பாடல். ஒரு முறை கிணற்றுக் கட்டிலிருந்து பாடிக் கொண்டிருந்த போது செல்வி வந்தாள்.

"நல்லாய் பாடிறியே, நீ ஏன் சங்கீதம் படிக்கக் கூடாது?" என்று கேட்டாள்.

எனக்கு பாட வராது. கொஞ்சம் குரலை உயர்த்தினால் கோழி போல கேரத் தொடங்கி விடும். ஆட்களுக்கு முன்னால் பாடும் வெட்கத்தில்தான் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதில்லை. செண்பகத்தைப் பார்த்த புளுகத்தில் பாடி இப்படி வம்பாகி விட்டது.

"என்னடா ராசு.. சித்திரத்தை விட்டு சங்கீதத்துக்கு மாறனடா.. நான் உனக்கு சொல்லித் தாறன்."

"சேச்சே.. எனக்குப் பாட வராது செல்வி... சும்மா செண்பகத்தைப் பார்த்துப் பாடினேன்.. அவ்வளவுதான்!"

"பொய்.. உன்னைப் போல நானே பாடமாட்டன். மற்றது உந்தப் பாட்டு செண்பகப் பூவைப்பற்றியது. பறவையைப் பற்றியதல்ல.."

"செண்பகப்பூ ..அப்படி ஒரு பூ இருக்குதோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓ..வடிவான பூவாம். இல்லையென்டால் உந்த வடிவில்லாத பறவையை ஆரும் பாடுவானே? அடைக்கோழி மாதிரி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு... சே” அவள் வாயை சுழித்துச் சொன்னபோது உண்மை என்றுதான் தோன்றியது. அது அழகான பறவையில்லைத்தான்.

செல்வி கூட அப்படித்தான்! கறுப்பாக எண்ணெய் வழியும் தலையுடன், கோழி முட்டைக்கண்களும், மண்வெட்டிப் பற்களுமாக. கறுப்பை மறைக்க அடிக்கடி மஞ்சளில் குளித்திருப்பாள். முன்னோக்கிய பற்களை மறைக்க வலிந்து சொண்டை மூடுவதுதான் ஆக அசிங்கம். ஆனாலும், செண்பகம் போலவே செல்வியையும் பிடித்திருந்தது.

இப்போது செல்வியும் இல்லை. இருக்கிறாளோ தெரியவில்லை. இந்த பதினைந்து வருடத்தில் சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறி வண்டுருட்டிய மல உருண்டைகள் போல ஊரூராக அலைக்கழிந்து சிதறி அழிந்துதான் போனோம்.

என்னைப் போலவே செல்வியும் ஏழெட்டு இடமாக அலைந்து எங்காவது ஒரு ஊரின் மூலையில் இடம்பெயர்ந்து வாழக்கூடும். இல்லையேல் புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் இருக்கலாம். சிலவேளை யுத்தத்தில் காணமற் போன, இறந்து போன இலட்சக்கணக்கானோரில் அவளும் அடங்கியிருக்கலாம். போராளியாகக் கூட மாறியிருக்கலாம்.

செல்வி தொடர்ந்து அரியண்டப்படுத்தி ஒருவாறாக என்னைச் சங்கீதத்துக்கு மாற்றி விட்டாள். மெல்ல மெல்ல இசையில் ஒரு பிரேமையை என்னுள் ஏற்றியவளும் அவளே. குயில் கூவும் போது எதிர்க்குரல் கொடுத்துப் பாடுவதில் அவளுக்கு அலாதி பிரியம். நான் கூட பலமுறை அவ்வாறு குயிலோடும் சேர்ந்து கூவியிருக்கிறேன்.

பாடசாலையில் மற்ற மாணவருடன் நான் சண்டையிடும் போதெல்லாம், அவளே என்னைச் சாந்தப்படுத்தி விலக்கி விடுவாள்.

“கோபப்படாதேடா..கோபப்பட்டால் நரம்பு வியாதி வருமாம். வயித்துப் புண் கூட வருமாம்” என்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் வரும் போது ஒவ்வொரு ஆணியை மரத்தில் அறையுமாறும், கோபத்தை அடக்கும் போது அவற்றைக் கழற்றுமாறும் அவள் ஆலோசனை கூறினாள். சில நாள்கள் நான் அவ்வாறு செய்துமிருக்கிறேன். இப்படியாக என்னிடமிருந்த கோப உணர்ச்சியை மெல்ல மெல்லக் கொன்றொழித்து விட்டாள், மயிர்கொட்டியை அழிக்கும் செண்பகம் போல.

ஒரு நாள் நானும் செல்வியும் பாடசாலை விட்டு வரும் போது செண்பகம் ஒன்று பாதையில் நசியுண்டு இறந்து கிடந்தது. பாதையைக் கடக்கும் போது அவதானமில்லாவிட்டால் இப்படித்தான் இறக்க நேரிடும் என்று செல்வி சொன்னாள்.

தத்தித் தத்தி ஓடும் செண்பகம் லொறியின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நசிந்து போயிருக்க வேண்டும். இந்த எரு ஏற்றும் லொறிகளுக்கு அவசரந்தான்! குஞ்சரப்பாவைக்கூட ஒரு முறை முட்டி மோதப் பார்த்தது. நல்ல வேளை, கடுகுநாவற் பற்றைக்குள் வீழ்ந்து சிராய்ப்புக் காயங்களுடன் தப்பி விட்டார்.

குஞ்சரப்பாவுக்கு செண்பகத்தில் பற்று உண்டு. கூடவே காகங்கள், கொக்குகள், மைனாக்களிலும். பயிர்களுக்கு எருவோ, குப்பையோ இடும் போது இவை கூட்டம் கூட்டமாக வரும். புழுக்களையும், கறையான்களையும் தின்று தீர்க்கும். இவை வருவது பயிருக்கு நல்லது என்பார் குஞ்சரப்பா.

“இதுகள் எங்கடை சிநேகிதர் மாதிரி. சிநேகிதர் எண்டா ஒருதருக்கொருதர் உதவ வேணும். அப்படித்தான் கமக்காரரும் இதுகளும்.” என்றும் சொல்லுவார்.

குஞ்சரப்பா உரமோ, மருந்துகளோ பாவித்து பயிர் வளர்த்ததில்லை. உள்ளிச்சாறும் வேப்பிலைச்சாறுந்தான் அவரது மருந்துகள். புற்களைப் பிடுங்கி அழித்து விட்டால் பயிருக்கு ஆபத்து இல்லை என்பது அவரது வாதம்.

எங்கள் ஊரில் ஆழக்கிணறுகள். சூத்திரத்தில் வளைய வரும் மாடுகள் மூலமே நீர் பாய்ச்சப்படும். குஞ்சரப்பாவின் தோட்டத்திலும் சூத்திரம் இருந்தது.

மாடுகளைப் பூட்டி, இரண்டு மூன்று முறை வளைய வருவார். பிறகு சால்வைத் துண்டை ஆசனத்தில் போட்டு விட்டு நீர் பாய்ச்சத் தொடங்கி விடுவார். மாடுகள் வளைய வந்து கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தோட்டத்தில் நிறைய செண்பகங்களையும் கொக்குகளையும் காணலாம். புழுக்களை உண்டு களைத்த கொக்குகள் வளைய வரும் மாடுகளின் மீது அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருக்கும்.

உரப்பாவனை வந்த போது குஞ்சரப்பா அதனை எதிர்த்தார். `தண்ணீர் நஞ்சாகப்போகுது. மரக்கறிகளைத் திண்டு மக்கள் வயிறு வெடித்துச் சாகப் போகிறார்கள்` என்றெல்லாம் கத்தினார்.

எங்கள் ஊரில் செல்லக்குட்டிதான் முதலில் உரத்தைப் பாவித்தார். மரவள்ளிக் கிழங்குகள் உரத்தில் திளைத்து தொடையளவு இருந்தன. மற்ற மரக்கறிகளும் அப்படித்தான். அதற்காக அவருக்கு விவசாய மன்னன் பட்டமும் கிடைத்தது.

செல்லக்குட்டி குஞ்சரப்பாவை "பழைய பஞ்சாங்கம்" என்றே அழைத்தார். பலரும் அவரைப் போலவே ஏசினர்.

"விசர்க் கிழவன்.. கட்டையில போற வயதில திட்டிக் கொண்டு திரியுது" என்றுதான் செல்லக்குட்டி தனது எரிச்சலை வெளிப்படுத்தினார். அதன் பிறகு, மெல்ல மெல்ல உரமும் மருந்துகளும் அநேகமான தோட்டங்களுக்கு வந்து விட்டன.

செண்பகங்களும் மைனாக்களும், காகங்களும் வீழ்ந்து இறப்பது அதிகரித்தது. அதிலும் முந்திரிகைத் தோட்டங்கள் வந்த பின்னர் இத் தொகை மேலும் கூடியது.

"துலைவான்கள்.. நன்றி கெட்டவன்கள்.. இந்தப் பச்சைப் பறவையளைக் கொல்லுறான்கள்.. உவங்கள் நல்லாய் இருக்க மாட்டாங்கள்" குஞ்சரப்பா ஆத்திரம் மிகுந்து பல தடவை கத்தியிருக்கிறார்.

கொஞ்சக் காலத்தில் எங்கள் பகுதியில் யுத்தம் தொடங்கியது. அடிக்கடி குண்டுகளும் ஷெல்களும் வெடித்தன. துப்பாக்கிகளும் முழங்கின. இராணுவத்தினரும் போராளிகளும் திடீர் திடீர் என மோதிக் கொண்டனர். சத்தம் கேட்டு ஓடுவதும் அது அடங்கியதும் மீண்டும் வருவதுமாகப் பொழுது கழிந்தது.

"சீ... சீரழிஞ்ச வாழ்க்கை" குஞ்சரப்பா சலித்துப் பேசினார். திடீரென்று ஒரு நாள் அட்டாளைப் பலகையில் சாய்ந்து தூங்கியவர் அப்படியே இறந்து போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாரித்தவளையின் மரணமாகவே செல்லக் குட்டியும் வேறு பலரும் இதனைக் கருதினர். அவரது உடலை எரித்து விட்டு வந்த மறுநாளே நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

அன்று அதிகாலையிலே ஷெல்கள் வீழ்ந்து வெடித்துக் கிலி கொள்ளச் செய்தன. படுக்கையிலிருந்து துடித்தெழுந்து ஊர் முழுவதுமாய்க் கலவரப்பட்டு ஓடினோம். அம்மன் கோயிலடியில் போய் நின்றோம்.

செல்வி கூட அங்கு நின்றிருந்தாள். கலவரத்தோடு மிரளும் விழிகளை உருட்டியபடி இருந்தாள். கடைசித் தங்கையை இடுப்பில் தூக்கி வைத்தபடி அங்குமிங்கும் திரிந்தாள். எனக்கோ தூக்கக் கலக்கம். ஆலமர வேரில் சாய்ந்தபடி உறங்கி விட்டேன்.

கிராமத்தை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் வானொலியில் அறிவிப்பதாகச் சொன்னார்கள். ஹெலிகொப்டரில் இருந்து வெளியேறக் கோரும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. தருமு அதனை பொறுக்கி வந்து ஆலாபனை பண்ணினான்.

சண்டை ஓய்ந்திருந்த வேளை வீட்டிற்கு வந்து அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது மீண்டும் ஷெல்கள் வெடித்தன. எடுத்த பொருட்களுடன் மீளும் போது சடாரென வெடித்த ஷெல் செவிப்பறையில் மோதி ங்... ங்... என அறைந்து கொண்டிருந்தது. முத்தர் வீட்டுப் பனை வளவில் அதன் புகையும் மணமும். அந்த அகால வேளையிலும் குயிலொன்று ஒற்றைக் குரலில் கத்திக் கொண்டிருந்தது.

ஒருவாறாகத் தப்பி ஓடி வந்து, ஒவ்வொரு இடமாக அலைந்து ஒவ்வொரு சண்டைகளுக்குள்ளும் அகப்பட்டு... இந்தப் பத்தாவது வீட்டில் வாழ வேண்டியதாயிற்று. அந்த நாளில் இருந்து செல்வியைக் காணவில்லை. செண்பகங்களைக் கூட பார்த்த ஞாபகமில்லை. வேறு பலவற்றைக் கூட மீண்டும் பார்க்கக் கிடைக்கவில்லை.

வார இறுதி நாள்களில் நாங்கள் ஓட்டும் சூத்திரம், கண்ணப்பரின் லாவகமான கயிறிழுப்பில் மூசியோடும் செங்காரிக் காளையும், அதன் பின்னால் ஓடும் ஒற்றைத் திருக்கல் வண்டியும், உடையார் வீட்டு மூலையில் சிறிய மண்ணிறமான தண்ணிக் குட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்களைக் குலை குலையாகத் தரும் மரம்... இன்னும் இன்னும். கூடவே நினைவில் மட்டும் நிற்கும் மனிதர்கள்.

எங்களின் ஊருக்குப் போகவே முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் அதற்குள், இனிமேல் போகலாமென்ற நம்பிக்கையும் பொய்த்து விட்டது. எங்கள் வீடுகளை உருத் தெரியாதவாறு பற்றைகள் மூடியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

குஞ்சரப்பாவின் துருப்பிடித்த சூத்திரத்தில் கூட கொவ்வைக் கொடிகள் படர்ந்திருக்கக் கூடும். செல்வியைப் போல பார்வையிலிருந்து மறைந்த பலருள்ளும் எங்காவது ஒரு மூலையில் உயிருடனிருக்கும் ஒவ்வொருவரும் என்னைப் போல இப்படி இருந்து தனது கிராமத்தை நினைக்க கூடுமோ?

எங்கள் கிராமமோ? அது என்றோ இல்லாமல் போய் விட்டது. கோழியிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட இறகு போல நாங்கள் அதிலிருந்து விலகி விட்டோம். அதை மறக்க வேண்டியதுதான். முடியாவிடினும் அதுதான் நியதி. யாராவது அருள் கூரும் வரை அதுதான் நிலைமை. அதை விடுவோம்.

சோம்பலை முறித்து பாயில் எழுந்து உட்கார்ந்த போது தலை கனத்தது. தூரத்தே செண்பகத்தின் மத்தளவோசை தேய்ந்து ஒலிக்கிறது. இந்தச் செண்பகங்கள் எனது ஊரின் பனை மரங்களுக்குக் கீழே விழுந்து குவிந்திருக்கும் ஓலைகளைக் கிளறி, புழுக்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கக் கூடுமோ?

0

(தினக்குரல் - பூபாளராகங்கள் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.(2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் அதே

புகையிரதப் பாதையைக் குறுக்காக வெட்டும் மதகில் தம்பரப்பா அமர்ந்திருந்தார். ஒரு காலை மதகின் கீழாகத் தொங்க விட்டபடி, மறுகாலை மடித்தவாறு மதகில் குனிந்து நிமிர்ந்து கத்தி தீட்டிக் கொண்டிருந்தார். பக்கத்தில் சரை ஒன்றில் கொஞ்சம் செங்கட்டித்தூள் இருந்தது. என்னைக் கண்ட தம்பரப்பா திரும்பிப் பார்த்ததோடு தனது வேலையில் தொடர்ந்தும் ஈடுபட்டார்.

"அப்பு"- அதே நிலையில் திரும்பிப் பார்த்தார்.

"காலிலை மம்பட்டி கொத்தி விட்டுது. எனக்குக் கொஞ்சம் சேர்வை தருவீங்களே..."

"எங்கை... பெரிய காயமே"

"சேச்சே... இந்தா, அடிக்காலிலை நீளத்துக்கு இழுத்து விட்டிட்டுது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ம்... சேர்வை இறுகிப்போச்சுது. காச்சித்தான் போடவேணும். இரன், கொட்டிலுக்குப் போவம்... காயம் கொஞ்சம் பலப்பு கண்டியோ, மரமஞ்சளும் அவிச்சுக் குடி...”

அவர் வேலையில் ஆழ்ந்தார். நிமிர்ந்தும் குனிந்தும் முன்னும் பின்னுமாய் உடம்பை ஆட்டியும் அவர் கத்தி தீட்டுவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஹெலிகொப்ரர் ஒன்று உறுமியபடி பறந்தது.

“எங்கை எதைக் கொத்தப் போறானோ..?” தம்பரப்பா அது போகும் திசையைப் பார்த்துச் சொன்னார்.

“இந்த எண்பது வரியத்திலை எத்தினையைக் கண்டிட்டம்... ம்.. வெள்ளைக்காரன், யப்பான்காரன், இந்தியன், சிங்களவன்...” தனது தளர் மேனியைத் தடவிக் கொண்டார் அவர்.

“உந்தக் குண்டு வீச்சுகளையெல்லாம் அந்தக் காலத்திலை கண்டிருக்க மாட்டியள், என்ன அப்பு” என்றேன் நான்.

“ஏனில்லையடா மோனே... நாப்பத்திரண்டாம் ஆண்டே இதுகள் இலங்கையிலை நடந்திட்டுது”

கத்தி தீட்டிய கைகள் விடுபட்டன. வானையளந்தார். பின் என்னைப் பார்த்தார்.

“அப்ப எனக்கு முப்பது வயசிருக்கும்... பங்குனி மாதம். எனக்கப்ப மூண்டாவது பிள்ளை பிறந்திருக்கு. வீட்டிலை மனுசிக்குப் பத்தியம் அரைச்சுக் குடுக்கிறதுக்காண்டி என்ரை ஆச்சி வந்திருந்தவ. நாங்கள் றெயில் பாதைக்குக் கிழக்காலை, அந்தா தெரியுதே.. அந்தத் தோட்டந்தான் செய்தனாங்கள். பட்டை இறப்பு, விடியக்காலமை ரண்டு மணிக்கே போயிடுவம். துலா மிதிக்கத் தொடங்கினா, தண்ணி பாஞ்சு முடிய காலமை பத்து மணிக்கு மேலை போயிடும்.”

“இப்பிடித்தான் ஒரு காலமை. சூரியன் நல்லா மேலை வந்தாப் பிறகு கிராம சபையிலையிருந்து அழைப்பு வந்துது. நான் இறைப்பை அரை குறையில விட்டிட்டு, துலாவிலையிருந்து இறங்கி, பட்டையிலை அள்ளின தண்ணியிலை முகத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவிப் போட்டு வீட்டை போனன். ஆச்சி பழஞ்சோத்தை எடுத்துத் தந்து கொண்டு, "கறிக்கடையிலை பத்தியத்துக்கு குஞ்சு மீன் வாங்கி வா" எண்டா. நான் அவவை ஏசிப்போட்டு சாப்பிடாமலே வேட்டியைக் கட்டிக்கொண்டு சால்வையையும் தூக்கித் தோளிலை போட்டபடி கிராம சபைக்குப் போனன். அது எங்கட வீட்டிலை இருந்து அரைக்கட்டை தூரத்திலை மருதனாமடத்திலை இருந்தது."

"உள்ளுக்கை கிராம சபைத் தலைவரும் கிராமப் பிரதிநிதியளும் விதானைமாரும் வேறை சிலரும் இருந்தினை. எங்கட கிராமப் பிரதிநிதியாய் நவரத்தினம் இருந்தார். என்னைக் கண்டோடனை தனக்கருகிலை வந்திருக்கச் சொன்னார். போயிருந்தன். கொஞ்ச நேரத்திலை அரசாங்கக் கந்தோரிலையிருந்து மூண்டு பேர் வந்தினை."

"வந்தவையிலை கண்ணாடியோடை வந்தவர் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கி விட்டுதெண்டும், அது இப்ப ஆசியாவின்ரை கிழக்குப் பக்கத்தாலை எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கெண்டும் சொன்னார். யப்பான் படையள் பினாங் துறைமுகத்தைக் குண்டு வீசித் தகர்த்துப் போட்டுதுகளெண்டும் அந்தத் தாக்கம் இலங்கையையும் பாதிக்கும் எண்டதாலை ஆள்பதி சேர் அன்ட்றூ கல்டிகொட் அதுக்கான நடவடிக்கையை எடுத்துள்ளாரெண்டும் அவர் சொன்னார்.

அரசாங்க ஏஜெண்டு மூலமாய் ஆள்பதியாலை எல்லா இலங்கைப் பிரசையளுக்கும் அறிவிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டிருக்கிறதெண்டும், நாடு முழுக்கலும் பின்னேரம் ஆறு மணியிலையிருந்து காலமை ஆறு மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறதெண்டும், இந்த நேரத்திலை பொதுமக்கள் வீடுகளிலை இருக்கிறது நல்லதெண்டும், இதுகளை விதானைமாரும் கிராமச் சங்கப் பிரதிநிதியளும் சனங்களுக்கு அறிவிக்க வேண்டுமெண்டும் அவர் சொன்னார்.

"மற்றவர் எழும்பி, யப்பான் படையளின்ரை தாக்குதலிலை இருந்து இலங்கையைப் பாதுகாக்கிறதுக்காண்டி பிரிட்டிஷ் பேரரசிலை இருந்து சேர் யெவ்றிலேற்றன் பிரபு கொழும்புக்கு வந்துள்ளார். அவர்தான் சகல அலுவலுகளுக்கும் பொறுப்பாய் பிரிட்டிஷ் அரசாங்கத்தாலை அனுப்பப்பட்டிருக்கிறார். ஆகாயப்படை, தரைப்படை, கப்பல்ப்படை மூண்டுக்கும் அவர்தான் தளபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டு படையும் அவருக்குக் கீழைதான் இயங்கும். ஆள்பதியும் மந்திரிமாரும் அவற்றை வழிப்படுத்தலுக்குக் கீழைதான் யுத்தம் முடியிற வரைக்கும் கடமை புரிவினை எண்டு சொன்னார்"

"அவர் மக்களைப் பாதுகாப்பாய் இருக்கச் சொன்னதாய்ச் சொல்லிப் போட்டு பதுங்குகுழியள் அமைக்கிறது, விமானத் தாக்குதலிலை இருந்து மக்களைப் பாதுகாக்கிறது பற்றிச் சொல்லிப் பயிற்சியளும் வழங்கப்படுமெண்டார்"

"அதோடை கூட்டம் முடிஞ்சுது. கூட்டம் முடிஞ்சு வீட்டை வந்தா ஆச்சி பேசுறா. புள்ளயப் பெத்தா மட்டும் போதுமோ... அதுகள் காத்தையோ குடிக்கிறது எண்டு அறம் புறமான பேச்சு. அதோடை ஓடிப்போய் மீன் வாங்கியந்தனான், அதை விடு..."

"அதுக்குப் பிறகு ஒரு பத்துப் பதினைஞ்சு நாள் கழிய, யப்பான்காரன் நாசகாரிப் பிளேனாலை கொழும்பிலை குண்டு போட்டிட்டான் எண்டு செய்தி வந்தது. கொழும்பு துறைமுகத்தடியிலை குண்டு விழுந்து ரண்டு சரக்குக் கப்பல்களும் கட்டடங்களும் நாசமானதாம்"

"உடனை எங்களைக் கூப்பிட்டினம்"

"கிராம சபையிலை, அரசாங்கப் பிரதிநிதி கந்தோர் ஆக்கள் வந்திருந்தினை. யுத்தம் வந்தால் யுத்தத்திலை மக்களைப் பாதுகாக்கிறதுக்கெண்டு. ஏ.ஆர்.பி எண்ட குழுவை அமைச்சினை. ஒவ்வொரு கிராமப் பிரதிநிதியளுக்கும் கீழை ஒவ்வொரு குழு. எங்கடை கிராமத்திலை நானும் இன்னும் நாலு பேரும்."

"நாங்கள் ஊரிலை பதுங்குகுழியள் வெட்டுறது... மணியடிக்கிறது... அபாய ஒலி எழுப்பிறது போன்ற வேலையளைச் செய்ய வேணுமெண்டு சொல்லிச்சினை. நாங்கள் எங்களுக்கும் கீழை தொண்டர்கள் சில பேரையும் சேத்திருந்தம்."

"ஏதாவது அசம்பாவிதம் எண்டால் கிராமக் கந்தோரிலை இருக்கிற பெரிய குழல் அபாய ஒலியை எழுப்பும். ப... ப... எண்டு அது பிலத்து ஒலிக்கத் தொடங்க, ஒவ்வொரு கிராமத்திலையும் உயரமான மரங்களிலை கட்டியிருக்கிற மணியள் அடிக்கும். அப்ப சின்னக் குழலொண்டும் தந்திருந்தவை. அதையும் ஊதிக் கொண்டு போகவேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டவுடனை சனங்கள் எல்லாரும் பதுங்கு குழியுக்கை இருக்கவேணும். அடுத்த சத்தம் வரும் வரைக்கும் எழும்பக் கூடாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னட்டை ஒரு குழலைத் தந்திருந்தினை. மண்ணெண்ணெய் வண்டில்காரன் கொண்டு திரியுறது போலை, வாய் அகண்டதாய் கூம்பு போலை இருக்கும். வாயிலை வைக்கிற பக்கம் ஒடுங்கிச் சின்னனாய் இருக்கும்.

அதை ஊதிக்கொண்டு வீட்டிலையிருந்து கிழக்காலையும் மேற்காலையும் வடக்காலையுமாய் ஒரு மைல் தூரம் போகவேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டிட்டு சனங்கள் பதுங்குகுழியளுக்கை பதுங்குவினை. ஊதி முடிய கிராமக் கந்தோருக்குப் போகவேணும். அவை பிறகு எப்ப ஊதவேணுமெண்டு சொல்லுவினை. அதுக்குப் பிறகு திரும்பவும் எல்லா இடமும் ஊதவேணும். அப்பிடி ஊதினாப் பிறகுதான் சனங்கள் பதுங்கு குழியளை விட்டு எழும்பும். இப்பிடியெல்லாம் ஏற்பாடு நடக்கேக்கை யப்பான் நாசகாரி திருகோணமலையிலை குண்டு போட்டிட்டுது. வெள்ளைக்காரன்ரை கேமிஸ், வம்பயர் எண்ட ரண்டு யுத்தக் கப்பலுவள் கடலுக்கை மூழ்கிச்சுது. சீனன்வாடியிலை இருந்த எண்ணைக்குதமும் தீப்பிடிச்சு எரிஞ்சிச்சுது.

"இதோடை எல்லா இடத்திலையும் பதுங்குகுழி வெட்ட வேணுமெண்ட உத்தரவு வந்தது. நாங்களும் தொண்டர்களுமாய்ச் சேர்ந்து ஊரிலையும் கறிக்கடையிலையும் பள்ளிக்கூடங்களிலையும் பதுங்குகுழியளை வெட்டினம். அது மேனை, ரண்டு பக்கமும் வாசலுள்ளதாய் 'பானா' வடிவிலை இருக்கும்."

"எங்கடை கோவில் மணியையும் கழட்டி வந்து, ஊருக்கு நடுவிலை இருக்கிற உயரமான வேப்ப மரத்திலை கட்டினம். அந்த மணிக்கு ஒருத்தர் பொறுப்பு."

"ஊரிலை அப்ப ஒரு பறட்டை இலுப்பை மரம் நின்றது. அதுக்குப் பக்கத்திலை விளையாட்டு மைதானம். நாங்கள் தாச்சி மறிக்கிறதும் வெளவால் கொடி கட்டுறதும் அதிலை தான். அந்த மரத்துக்குக் கீழை வைச்சு எங்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. நாங்கள் ஒரு பத்துப் பேர். அரசாங்கப் பிரதிநிதி கந்தோரிலையிருந்து வந்த ஒருதர்தான் பயிற்சி தந்தவர். குண்டு வீச்சாலை வீடுகள் இடிஞ்சா அதுகளுக்கை இருந்து ஆக்களை வெளியாலை எடுக்கிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயங்களுக்குக் கட்டுப் போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது, பள்ளிக்கூடப் பிள்ளையளுக்குப் பயிற்சி குடுக்கிறது - இதுகளைப் பற்றி பயிற்சி தந்தார்.

"இப்பவும் சிரிப்பாயிருக்கு... ஹ... ஹ... ஹ... ஹ... ஹ... பயிற்சி முடிஞ்சாப் பிறகு ஒவ்வொருதரையும் பாத்து நீ என்ன செய்யப் போறாயெண்டு அவர் கேட்டார். எல்லாரும் ஒவ்வொண்டைச் சொல்லிச்சினை. உன்ரை கொப்புவின்ரை தேப்பன்ரை தம்பியார் முருகேசு... அவர் சொன்னார் எரிஞ்ச வீட்டிலை எஞ்சினதைப் பொறுக்கிறனெண்டு. வந்தவர் விழுந்து விழுந்து சிரிச்சார்."

"அதுக்குப் பிறகு பள்ளிக்கூடங்களுக்குப் போய், குண்டு வீச்சிலை இருந்து எப்பிடிப் பாதுகாக்கிறதெண்டு பயிற்சி குடுத்தம். பிள்ளையளுக்குப் பஞ்சும் தடித்துண்டும் குடுத்தனாங்கள். பிளேன் சத்தம் கேட்டால் காதிலை பஞ்சை அடைஞ்சு கொண்டு, வாயிலை தடித்துண்டை வைச்சுக் கடிச்சுக் கொண்டு நிலத்திலை குப்புற விழுந்து படுக்க வேணும்; அல்லாட்டி பதுங்குகுழியுக்கை போயிருக்க வேணுமெண்டு சொல்லி பயிற்சியும் குடுத்தம். அதோடை பள்ளிக்கூடங்களிலையும் மணியள் கட்டினம்."

"இப்பிடி நாங்கள் றெடியாய் இருக்கேக்கை காங்கேசன்துறைக்கும் குண்டு போடப்போறானெண்ட கதை அடிபட்டுது. உந்தா உந்தப் பவஸ்ரேசன் அப்ப இருக்கேல்லை. முந்தி உது வெட்டுக்காடு சுடலை. பத்தையாய் இருந்த இடமெல்லாத்தையும் திருத்திப் போட்டு பிரிட்டிசு ஆமியள் வந்திருந்தினை. காங்கேசன்துறைக்கும் அடி விழலாம் எண்டதாலை வெட்டுக்காடு காம்பிலை ஆமியள் குமிக்கப்பட்டது. கொஞ்ச நாளிலை நூற்றுக்கணக்கா ஆகிவிட்டுது"

"பூனைக் கண்ணோடை தொப்பியும் போட்டுக் கொண்டு வெள்ளைக்காரக் கொமாண்டர் நிப்பான். அவனுக்குக் கீழை வேறயும் வெள்ளைக்கார ஆமியள் இருந்தினை. அதோடை நீக்ரோக் காப்பிலியளும் பஞ்சாபியளும் கூர்க்கா, நேபாளியளும் இருந்தினை. இடைக்கிடை தோட்டப்பக்கம் வருவாங்கள். நாங்கள் பட்டையிலை இறைக்கிறதைப் பாப்பங்கள். பக்கத்துத் தோட்டத்திலை சூத்திர இறைப்பு. அதிலை போய்க் குளிப்பங்கள். சில நேரம் இளனி கேட்டு, வாங்கிக் குடிப்பான்கள். ஆனா அவங்கடை பேச்சு எங்களுக்கும், எங்கடை பேச்சு அவன்களுக்கும் விளங்காது. எங்களுக்குச் சவுக்காரம், சீக்ரெட் தருவன்கள். வேண்டாமெண்டால் சிரித்து விட்டுப் போவான்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு நாள் பின்னேரம் நான் மனிசியையும் பிள்ளையளையும் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தன். திடீரெண்டு மணிச்சத்தம் கேட்டுது. அது கேட்டதுதான் தாமதம் நான் குழலைத் தூக்கி விட்டன். வீட்டுக்காரரை கொட்டிலுக்குப் பக்கத்திலை வெட்டியிருந்த பதுங்குகுழியுக்கை போயிருக்கச் சொல்லிப் போட்டு, சைக்கிளிலை ஏறி ஊதிக் கொண்டு போனன்”

“குழல் சத்தத்தைக் கேட்டு ஒவ்வொரு குறிச்சியிலையும் மணியள் அடிக்கப்பட்டுது. சனமெல்லாம் விழுந்து கட்டி பதுங்குகுழியளுக்கை பதுங்கிச்சுது. கொஞ்ச நேரம் போக எனக்குப் பின்னாலை “தம்பர்... தம்பர்...” எண்ட குரல் கேக்குது. திரும்பிப் பாத்தன். ஒராள் தலை தெறிக்க ஓடி வருகுது. சைக்கிளை நிப்பாட்டிப் போட்டுப் பாத்தா, சின்னப்பு ஓடி வாறான். அவன்தான் மணிக்குப் பொறுப்பு”

வந்தவன் “தம்பராணை நான் அடிக்கேல்லை. உந்த விசர்ச் செல்லத்துரையன்தான் அடிச்சவன். இப்ப என்ன செய்யிறது?” எண்டான். சரி! பிழைச்சுப் போட்டுது. நீ போ எண்டு போட்டு, அவடத்திலை நிண்டு ஒரு சுருட்டை மூட்டினன். ஆறுதலா சுருட்டைக் குடிச்சுப் போட்டு, வந்த வழியாலை திரும்ப ஊதிக் கொண்டு போனன். ரண்டாம் ஊதலுக்குப் பிறகுதான் சனங்கள் வெளிய வந்துதுகள். அடுத்தடுத்த நாள்தான் சனங்களுக்கு உண்மை தெரிஞ்சுது.

தம்பரப்பா வானைப் பார்த்தார். இயக்கமற்று - விமானக் குண்டுகளால் சிதைந்திருந்த மின் உற்பத்தி நிலையத்தைப் பார்த்தார். பெருமூச்சுடன் என்னைப் பார்த்தார். பின்னர், வேகமாகக் கத்தியைத் தீட்டினார். தீட்டியதை எடுத்து மறுகையினால் துடைத்து விட்டுப் பார்த்தார். வெள்ளியாய் அது ஒளிர்ந்தது.

எழுந்தார். புகையிரதப் பாதைக்குக் குறுக்காக இறங்கிய மண்பாதையால் நடந்தார். அவரின் பின் நான். குண்டொன்றின் ஒலி அதிர்வுடன் எழுந்தது.

“என்ரை வாழ்நாளிலை இப்பிடி எத்தினையைக் கண்டிட்டன். அண்டைய பதுங்குகுழி வாழ்க்கை இண்டைக்கும் தொடருது. வெள்ளையனுக்குக் கீழை இருந்ததை விட சிங்களவனுக்குக் கீழை எவ்வளவு கஸ்டத்தை அனுபவிச்சிட்டம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிலுக்குள் நுழைந்தவர் சேர்வை முட்டியை வெளியே எடுத்து வந்து பார்த்தார். அது இறுகிக் கிடந்தது.

"என்ரை வீட்டை நான்தான் ஆளவேணும். அதுவரையிலை இந்தப் பிரச்சனை முடியாது மேனை" அவர் உள்ளே போனார்.

தம்பரப்பாவின் கீதையை நான் உணர்ந்து கொண்டேன். ஹெலிகொப்ரர் பலாலிப் பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்தது.

*0*

*(வெளிச்சம் பங்குனி 1994)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிரில் புழு

உறக்கமும் விழிப்புமற்ற மயக்க நிலை என்னில் பரவியிருந்தது. கண் முன்னால் பெயர் தெரியாத ஏதேதோ தினிசுகள் வந்து போயின. ஒளியும் இருளும் போக்குக் காட்ட, அவை பயமுறுத்தின.

இரும்புக் கம்பிகள் கத்திகளாகவும் துப்பாக்கி -களாகவும் கணநேரத்தில் மாற்றமெடுத்தன. வேண்டுமென்றே என்னை நோக்கிக் குறி பார்த்தன, குத்தத் தலைப் பட்டன.

என்னில் வியர்வை அரும்பியது. முகம் தெரியாத இருட்டுப் போர்வைக்குள் பயப் பீதியுடன் நின்றேன். ஓவென்று அலற வார்த்தை வரவில்லை.

“மகனே”

எங்கிருந்து கேட்கிறது இந்தக் கனிந்த குரல். வாழ்வில் நான் கேட்காதவற்றில் இதுவுமொன்று. அப்பாவின் வாய்க்குச் சர்க்கரை கிடைக்கட்டும். எங்கே மீண்டுமொரு முறை கேட்கமாட்டாதா? ஒரு முறை...

ஒரே முறை...

“மகனே”

“அப்பா”

“எப்படியிருக்கிறாய் மகனே?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா எவ்வளவு இதமாக வருடுகிறார். மரத்துப் போகாத அவரது கைகளின் மென்மைதான் என்னே!

ஆ... ஏனிப்படிச் செய்கிறார்? எனது குரல்வளை நசுங்கிப் பிய்கிறது. மூச்சு முட்டுகிறது. உயிர் இழந்து விடுவது போல பயம் காட்டுகிறது. எனக்கும் பலமிருக்கிறது.

சட்டென்று எழுந்து கொள்கிறேன்.

எல்லா இடத்தையும் இருள் ஆக்கிரமித்திருந்தது. மூச்சு வாங்கியது. உடலிலிருந்து வெப்பமெல்லாம் பறக்க, குளிர் பரவிக் கொண்டிருந்தது. தள்ளாடியபடி இருளுக்குள் கை பரவி நடந்தேன்.

"நீயொரு ரோசக்காரியெண்டால் என்ரை காசை வையடி... எழுவதாமாண்டு ரண்டாயிரம்... இப்ப கூட்டிப் பாத்தாலும் பதினையாயிரம் வரும்"

அப்பாவின் கண்களின் சிவப்பு நிறம் அக்கினியாய் எரித்தது. ஒரு குத்துச்சண்டைக்காரனின் முன்னால் நிற்கும் கூழங்கையன் நான் சீ... இந்தக் காசை எடுத்து முகத்தில் வீச வேண்டும்.

எங்கு போவது? நான் கூழங்கையன்தான்!

மேசையுடன் தட்டுப்பட்டுப் போய் விழுந்தேன். சத்தத்தில் தங்கைகளுள் ஒருத்தி விழிப்படைந்திருக்க வேண்டும். அவளது முனகல் ஒலி மெல்லக் கேட்டு அழிந்து போனது.

தாத்தா பாவம்! சீதனத்திற்குப் புறம்பாக திருமணச் செலவையும் அப்பா வீட்டார் கேட்டபோது ஓமென்று சொல்லியவர், அதைக் கொடுக்க முன்னரே உயிரிழந்து விட்டார். அவருக்கெங்கே தெரியப் போகிறது அது அம்மாவைத் தாக்குகிறதென்று?

அம்மா கிழம். சுருங்கிப் போய்க் கிடந்தாள். கன்னத்தசைகள் எல்லாம் சுருங்கி தோல் மூடிய மண்டையோடாய் இருந்தாள். கண்கள் உட்குழிந்திருந்தன. முறுக்கேறிய அவள் உடல் இப்போது பஞ்சாய் ஆகி விட்டிருந்தது. மரணத்துக்கான நாளை எதிர்பார்க்கத் திராணியற்றிருந்தாள். நேற்றுக்கூட அவளது பற்களுள் மேலுமொன்று கழன்று விட்டது.

மீன் முள்ளுப் போல முள்ளந்தண்டும் விலா எலும்புகளும் வெளியே துருத்தத் தொடங்கி விட்டன. மீன் முள் வளையுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கிட்டத்தட்ட ஒரு குழந்தையின் நிலைக்கு வந்திருந்தாள். பேச்சுக் கூடத் திசை கெட்டிருந்தது. எல்லாம் அவள் பார்வையில் விநோதமாயிருந்தன. அவளுக்கு நிறைய ஞானம் புகட்ட வேண்டும்.

வெளியில் பெய்த மெல்லிய பனியும் அவளுடலை நடுங்க வைப்பது போலிருந்தது. இருட்டுக்குள்ளும் முகத்தின் சுருண்ட தசைகள் தம்மை இனங்காட்டின.

ஒரு பௌர்ணமி நிலா நாளில்தான் அவள் இப்படியானாள். அன்று - நிலவு நிசப்தமே முனகலாக அழுதுகொண்டிருந்தது. ஊரெல்லாம் மயங்கிக் கிடந்தது. பனி மெல்லியதாய்ப் பெய்தது. வெட்டுக்கிளிகளின் ர்... ர்... ர்... ஒலிதான் காதைக் குடைந்து கொண்டிருந்தது. எங்கோ கிட்ட இருந்து பயிர்களை அழித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அப்பா ஆடியாடி வந்தார். பார்வை சூழலைப் புலப்படுத்தாதது போல இருந்திருக்க வேண்டும். தெரு நெடுகிலும் நின்று கத்தினார். அடிக்கடி தரையில் விழுந்தும் வேலிகளை மோதியும் தெரு நாய்களை மிரள வைத்தும் வந்தார். வாசலுக்கு வந்த போது அப்பாவின் சத்தம் வெட்டுக்கிளிகளின் சத்தத்தை மேவியிருந்தது. தகரம் சத்தமிட விழுந்தார். வீட்டு நாய் குரைத்து, குழைந்து கத்தியது.

மிகக் கொடிய வார்த்தைகள் அவரிலிருந்து பிறந்தன. மாமரத்தில் உறக்கம் கெட்ட கோழிகள் தீனமாய்க் குரல் கொடுத்தன. தன் குஞ்சுகளைப் பிடிக்கவரும் மரநாயைக் கண்டலறுவது போல மிகப் பெரும் தவிப்பாக இருந்தது.

அம்மா வாசலுக்குப் போனாள். பிறகு பதைப்புடன் ஓடி வந்தாள். சைகையால் என்னை அழைத்தாள்.

“ஓடிப்போ... போய் அவரைத் தூக்கியா”

உடல் உஷ்ணமாயிருந்தது. அம்மாவின் இதயஒலி எனக்குக் கேட்டது. கால்கள் நகர மறுத்தன.

எனது இதய ஒலி கூட அம்மாவை எட்டியிருக்கலாம். அப்பா அருகே போகும் வரை முற்றத்து மல்லிகை மணத்தது. பிறகு பனம்பூ மணத்தது. பங்குனி கடந்து விட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் வாய் கோண அதற்குள் வார்த்தைகள் புது வடிவம் எடுத்தன. அப்படியே ஒன்று வந்து என்னைத் தாக்கியது; நிலை குலைந்தேன். திரும்பவும் போனேன்.

"அப்பா வாங்கோ"

கைகளை நீட்டும் போது, அவர் நெற்றிக் கண் கனல் கக்கியது. "போடா நாய் வேசமோனே"

அப்பாலும் நிறையப் புதுச் சொற்கள் தெறித்தன. மீண்டும் வீட்டுக்குள் கால்கள் சென்றன. அம்மா வாசலில் இதயத்தை இடித்துக் கொண்டு நின்றாள்.

"போ... போ" என்று துரத்தினாள். தங்கைகள் பின்னால் நின்று விழித்தனர். மூத்தக்கா அம்மாவை எதிர்க்கவும் தலைப்பட்டாள்.

"போராசா... போ. கொப்பரல்லே"

பரிதாபத்தின் அதியுச்ச எல்லையில் நின்று அம்மா இரந்தாள். அப்பாவின் இடியின் நடுவிலும் அம்மாவின் குரல் வலிமையாக ஒலித்தது.

கறையான் துளைத்த வேலியை மூடிச் சில கண்கள் தோற்றம் எடுத்தன. கால்களை ஏதோ வலுவேற்ற - பனங் கள்ளின் மணத்தையும் மேவிக் கொண்டு அப்பாவின் கைகளைப் பற்றினேன்.

"ஆரடா? என்னைத் தூக்காதை"

அவரது எகிறலில் விழப் போனேன்.

"சே..." உச்சக் கோபம் என்னில் இப்படித்தான் கரைந்தது. மீண்டும் இரண்டு கைகளையும் நீட்டித் தூக்கினேன். மூச்செறிந்தது. கும்பகர்ணன் பிறந்த நாட்டில் தானே அப்பாவும் பிறந்தார். அம்மா பலமுள்ளவள்தான். என்னால் முடியாது.
வீட்டிற்குள் நுழைய, அம்மா மீண்டும் கெஞ்சினாள்.

"மாட்டன்"

அம்மா என்னிடம் தோற்றாள். மூத்தக்காவின் பேச்சைப் பொருட்படுத்தாமல் அப்பாவருகே போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எழும்புங்கோவன்”

“உப்பிடி மண்ணுக்கை கிடக்கிறதே”

அம்மாவின் குரல் அழிந்து போனது. அப்பா மயங்கித்தானிருக்க வேண்டும். வேலியில் எத்தனை கண்கள் முளைத்து விட்டன? திடீரென்று பேரொலி.

“ஆரடி என்னைத் தூக்கிறது”

வேலிக் கறையான்கள் கொட்டுப்பட்டன.

“வாருங்கோ அப்பா... ஊர் சிரிக்கப் போவுது”

தகரம் சடக்கென்றது. அம்மாவும் நிலை குலைந்து விழுந்திருக்க வேண்டும். அம்மாவின் கூந்தல் குலைந்து அப்பாவின் கையில் கெட்டியாய் இருக்க- அவள் அலறினாள்.

“என்ரை காசிலை அம்பாளிச்சுக்கொண்டு... என்னடி கொண்டு வந்தனி... நாய்”

தகரம் அடிபடப் பேரொலி எழ, அம்மாவின் முனகலும் கேட்டது. எனது கால்கள் எப்படி ஓடின? அக்காளும் பின்னால் வந்தாள்.

“வாடா இஞ்சாலை அவவுக்கு வேணும்”

நான் போன போது அம்மா எழ முடியாமல் எழுந்து, மீண்டும் அப்பாவை எழுப்ப முயன்றாள். எறும்பு போல.

இப்போது அப்பாவின் கை அம்மாவில் படவில்லை. அவரது கை இறுகப் பற்றி இருந்தது.

“ஐயோ... அதை விடுங்கோ”

அப்பாவின் கை இழுக்க அவரின் நெஞ்சுக்கு நேரே அம்மா; சடக்கென்றது. அம்மா நிலைகெட்டு வீழ்ந்து கத்தினாள்.

“ஐயோ... என்ரை என்ரை”

அம்மா அதைப் பறிக்க முயன்று தோற்று விழ, அப்பா எழுந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் கட்டினது... என்ரை”

“அதை மட்டும் தந்திடுங்கோ”

அம்மாவின் குரல் பரிதாபமாக இருந்தது. அப்பா அப்பால் போக நான் முன்னே வந்தேன். என்னைப் பிடித்த அம்மா “தொடாதை அவரிலை” எனத் தள்ளினாள்.

அப்பா தெருவை நோக்கிப் போனார். தெரு நாய்கள் குரைத்து அடங்கின.

அம்மா வந்தவுடன் படுக்கையில் வீழ்ந்தாள். தலையணை முழுக்க நனைந்து போக, நீண்ட நேரம் விழித்திருந்தாள். அதன் பின்...

மெல்ல மெல்ல உருமாறி இப்பிடி, அடிக்கடி இருமி மஞ்சள் சளியைக் கொட்டிக் கொண்டு...

“சாகப் போறன்” என அரற்றிக் கொண்டு...

அப்பாவுக்கு இன்னமும் காசு தேவைப்படுகிறது. அடிக்கடி பனை பூத்துத் தள்ளுகிறது. நெடுக அம்மாவை நிந்தித்தபடி அவர்.

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிராமே! எவன் சொன்னான்? களை தொடுக்க வேண்டும் அவனுக்கு.
வரும் சித்திரைப் பௌர்ணமியில் விரதமிருக்க நேருமோ என்ற பயத்தில் நான்.

0

(தாயகம் : ஆவணி - புரட்டாதி, 1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தயக் குதிரை

வகுப்பறையில் கடைசி வாங்கின் ஓரத்தில் ஓரமாக எப்போதும் அவனைக் காணலாம். உற்சாகம் கரை புரண்டு சத்தமிட்டபடி வகுப்பிற்குள் ஓடியாடித் திரியும் மாணவர்களிடையே எந்த வித சலனமுமில்லாமல் புத்தகமொன்றைப் புரட்டியபடி அவனிருப்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

குழப்படிக்காரர்கள் அவனது புத்தகத்தைப் பறித்துச் சீண்டினார்கள். அவ்வாறு சீண்டிய மாணவர்கள் பலரும் என் முன்னால் நிறுத்தப்பட்டனர். அவர்கள் தொடர்பில் அவன் என்னிடம் எப்போதும் குற்றச்சாட்டுக்களை முன் வைத்ததில்லை. சக மாணவர்கள்தான் அதை முன் வைத்தார்கள்.

அவன் அமைதியாக, தன்னடக்கமாக இருந்தான். அவனிடம் உற்சாகமான மன நிலையிருக்க வில்லையென்று நான் கருதினேன். ஆனால், அவனது உற்சாகம் அவனது கண்களில் இருப்பதாகவே எனக்குத் தோன்றியது. புத்தகங்களைப் படிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவனது விழிகளில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுவதை நான் அவதானித்திருக்கிறேன்.

எனது வகுப்பிலுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் நகரத்தின் பெரும் புள்ளிகளது பிள்ளைகள். மருத்துவர்கள், பொறியியலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், பெருவணிகர்கள் போன்றோரின் பிள்ளைகளாகவே அவர்கள் இருந்தனர். ஆடம்பரமும் கம்பீரமும் மிடுக்கும் அவர்களிடம் குடியிருந்தன. எல்லா வகையிலும் அவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர்.

புதிது புதிதாகப் புத்தகப்பைகளும் பயிற்சிப் புத்தகங்களும் சப்பாத்துக்களும் வாங்கி வருவார்கள். அவை பற்றித் தமக்குள் பெருமை பாராட்டுவார்கள். ஒருவன் வாங்கியதை விடச் சிறந்ததொன்றுடன் மற்றொருவன் வந்து அடுத்த நாள் அது பற்றிப் பெருமையாகக் கூறுவான். இப்படியே புதிய புதிய சங்கதிகள் ஒவ்வொரு நாளும் என் காதுக்கும் எட்டும்.

பெரும்பாலான மாணவர்கள் வீட்டில் பெற்றோருடன் அலசிய விடயங்களைச் சொல்வார்கள். அவை சுய தம்பட்டங்களாகவோ, மற்றவரை ஏளனப்படுத்துவனவாகவோ இருந்தன. பிள்ளைகளின் கதைகளை நான் அலட்சியம் செய்வதில்லை. அதிக ஆர்வம் காட்டுவதுமில்லை.

ஆனால், மற்றவர்கள் போல அவன் ஒரு போதும் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. தன்னைப் பற்றியோ, வேறு சம்பவங்கள் பற்றியோ கூட அவன் எதையும் சொன்னதில்லை. மற்றவர்கள் பிரலாபிக்கும் வேளைகளில் அவற்றில் அவன் ஆர்வம் காட்டியதில்லை.

நான் கற்பிக்கும் வேளைகளில் தீட்சண்யத்துடன் அவன் என்னை நோக்குவதை அவதானித்திருக்கிறேன். மற்றவேளைகளில் தலையைக் குனிந்தபடி புத்தகங்களில் கண்களை மேயவிட்டிருப்பான். இல்லையென்றால் சாளரங்கள் ஊடாக நேரே தென்படும் மைதானத்தையோ, அதன் ஓரமாக நெடிதுயர்ந்து நிற்கும் புளியமரத்தையோ பார்த்துக் கொண்டிருப்பான்.

ஆரம்பத்தில் ஓரிரு தடவைகள் அப்படிப் பார்ப்பதையிட்டு அவனைக் கடிந்து பேசியிருக்கிறேன். அந்தக் கணங்களில் திடுக்குற்று மிரள விழித்து, என்னைப் பார்ப்பான். பிறகு தலையைக் குனிந்து கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன சேர்... உங்கடை வகுப்பிலிருக்கிற சைதன்யன் பாட்டுப் பாடுறானில்லை. கல்லுளி மங்கன் போலை பேசாமல் நிற்கிறான்” என்ற குற்றச்சாட்டை அழகியல் கற்பிக்கும் மேரி ரீச்சர் முதலில் முன் வைத்தார்.

பின்னர் சிறுவர் நாடகப் போட்டிக்கு மாணவர்களைத் தேர்வு செய்த ஆசிரியரும் அவனிடமிருந்து எந்த வெளிப்பாடுமில்லையென்று குறை கூறினார். வரவுப் பதிவின் போது “பிறசன்ற் சேர்” என்று கூறுவதைத் தவிர அவனது குரலைக் கேட்க முடியவில்லைத்தான்.

அதன் பின்னர் அவனுடன் வாய்மொழித் தொடர்பாடலை அடிக்கடி மேற்கொண்டேன். வினாக்களை எழுப்பி,
“ம்... சைதன்யன்... சொல்லும்” என்பேன்.

பல வேளைகளில் திடுக்கிட்டு “ம்...” என இழுத்திருக்கிறான். காலப் போக்கில் வினாக்களைக் கேட்டவுடன் விடையளிக்கும் தயார் நிலைக்கு முன்னேறியிருந்தான். வகுப்பறையில் பேச்சுக்களைப் பேசும் சந்தர்ப்பங்களில் தனது கீச்சுக் குரலால் உரத்துப் பேசும் நிலைக்கு வந்திருந்தான்.

அவனது அமைதிக்குப் பின்னால் ஒளிரும் திறமையை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் அவன் என்னை ஆகர்ஷித்தான். ஆனாலும், வகுப்பில் அவனால் முன்னணிக்கு வரமுடியவில்லை.

தனது பிள்ளைகளின் வினாப்பத்திரங்களைத் தூக்கி வைத்துக்கொண்டு ஒற்றைப் புள்ளிக்காகச் சண்டையிடும் நிலையில் பெற்றோர்கள் இருந்தார்கள். குறித்த பிரபலங்களின் பிள்ளைகளின் நிலை என்ன என்று வினவி, அவர்களை முன்னணிக்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை அதிபரும் உபஅதிபரும் பகுதித் தலைவரும் அடிக்கடி இடித்துரைத்துக் கொண்டிருந்தார்கள்.

எனவே சைதன்யனால் முன்னணிக்கு வரமுடியவில்லை. நிலை அடிப்படையில் கடைசியிலிருந்தாலும் புள்ளிகளில் அவன் உயர் நிலையில் இருந்தான் என்ற அளவில் மகிழ்ச்சியாக இருந்தது.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைதன்யன் இப்போது ஐந்தாம் வகுப்பிலிருந்தான். படுக்கையைத் தவிர ஓய்வொழிச்சலில்லாமல் எல்லோரும் படித்துக் கொண்டிருந்தனர். புலமைப் பரிசில் பரீட்சையோடு தனது சீவன் அடங்கிவிடும் போலுள்ளதென்று சக ஆசிரியை புலம்பினார்.

காலை நான்கு மணிக்கே தானும் எழுந்து மகனையும் எழுப்பிப் படிக்க வைக்க வேண்டும். பின்னர் பாடசாலை. அது முடிய பிரபல ஆசிரியரது ரியூசன். அடுத்து வீட்டில் பிரத்தியேக வகுப்பு. பின்னர் இரவு பத்து மணிவரை படிப்பு. பிள்ளைகளுடன் தானே மாய்வதாகவும் கணவர் வங்கியையே கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதாகவும் சலிப்புடன் சொன்னார்.
“ஸ்கொலர்ஷிப் முடியுமட்டும் பாணும் கடைச் சாப்பாடுந்தான். இல்லையெண்டால் சேவன்ற் கேளை அரேஞ் பண்ணுங்கோ” என்று கணவனிடம் தீர்மானமாகக் கூறிவிட்டதாகவும் அவர் சொன்னார்.

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் கெட்டிக்காரரர் எனப் பெயரெடுத்தவர். பாடசாலைக்குப் புறம்பாக பல ரியூசன்களிலும் கற்பித்து வருபவர். பல இடங்களிலுமிருந்து அவரிடம் படிக்க வருபவர்களுக்கு வசதியாக பிரத்தியேக ரியூசன் சென்ரர் ஒன்றையும் நிறுவியிருந்தார். சென்றமுறை கூட அவரிடம் படித்த சிலர் சித்தியடைந்திருந்தனர்.

பாடசாலையில் தன்னிடம் கற்பவர்களைக் கட்டாயம் தனது ரியூசனிலும் படிக்குமாறு வற்புறுத்துவார். ஆரம்ப நாட்களில் சைதன்யன் ரியூசனுக்குச் செல்லவில்லை. அதற்காகப் பலமுறை வகுப்பாசிரியரிடம் ஏச்சு வாங்கியிருக்கிறான். பின்னர் ஏனையோர் போலவே அவனும் அவரது ரியூசனுக்குச் சென்றான். சிறிது காலத்தில் அதிலிருந்து விலகி விட்டான்.

“ஏன் விலகினாய்?” என்று அவனிடம் கேட்டேன்.

பாடசாலையை விட ரியூசன் மோசமாக இருப்பதாக அவன் சொன்னான். தினமும் கடுமையான அடிகளை வாங்க வேண்டியிருப்பதாகவும் நிறையச் செலவு செய்ய வேண்டியிருப்பதாகவும் அவன் கூறினான்
.
“வீட்டிலிருந்தபடி ஸ்கொலஷிப்புக்கு படிக்க முடியாதா சேர்?” என்று அவன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் முடியாது! என்றாலும் ரியூசனிலும் மேலதிகமாகப் படிக்கலாம்... இல்லையா?" என்றேன்.

"என்னால் இப்பிடிப் படிக்க முடியாது சேர்"

அவனது விழிகளின் தீட்சண்யம் என்னைத் தைத்தது. அவனது சுதந்திர உணர்வை அது வெளிப்படுத்தியது. நான் வற்புறுத்தவில்லை. அவன் போய் விட்டான்.

*

புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சில நாள்களே இருந்தன. பந்தயக் குதிரைகளோடு களத்தில் நிற்பவர்கள் போலப் பெற்றோரும் ஆசிரியர்களும் ரியூசன்காரரர்களும் இயங்கிக் கொண்டிருந்தனர். மாணவர்களுக்கு மூச்சு விடவே நேரமில்லை. எல்லோரும் ஏதோவொரு போதையில் மிதப்பதாக எனக்குப்பட்டது. எல்லோருக்கும் பந்தயக் குதிரைகளின் வெற்றியில் உரிமை கொண்டாடும் ஆர்வமே மேலோங்கியிருந்தது.

ஒரு நாள் சைதன்யனின் வகுப்புக்குப் போனேன். அங்கே ஒரே அமர்க்களம். வகுப்பாசிரியர் தனது மானத்தைக் கெடுக்க வேண்டாமென்று வேண்டி, பிள்ளைகளை வைது கொண்டிருந்தார். சைதன்யன் சலனமேதுமின்றி ஒரு புத்தகத்தில் ஒன்றியிருந்தான். ஆசிரியருடன் பேசிவிட்டுப் புறப்படும் போது அவர் சொன்னார்.

"உங்கடை சைதன்யனும் வேறை மூன்று பேருந்தான் இந்த முறை என்ரை கழுத்தை அறுக்கப் போறாங்கள்"

நான்காம் வகுப்பு வரை எல்லோருந்தான் எனது மாணவர்களாக இருந்தனர். மற்றவர்களை விட்டுச் சைதன்யனைச் சுட்டியது கேலியாகத் தோன்றியது. ஒரு புன்னகையுடன் பேசாமல் வந்து விட்டேன்.

*

புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. பலரும் முண்டியடித்து இணையத்தில் பார்த்துக் கொண்டிருந்தனர். எனக்குச் சைதன்யனின் பெறுபேற்றைப் பார்க்க ஆவலாயிருந்தது. அவனோ அதைப் பற்றிப் பொருட்படுத்தவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வருந்தானே" என்ற ஒற்றை வார்த்தையுடன் பேசாதிருந்தான்.

மாலையில் பாடசாலை தனக்கான பெறுபேற்றைப் பெற்றிருந்தது. வகுப்பாசிரியர் முதலில் பார்த்துவிட்டு மகிழ்ச்சியோடு வந்தார். என்னைக் கண்டதும் முகத்தைத் திருப்பி வேறுபக்கம் பார்த்தபடி சென்றுவிட்டார். பாடசாலையில் சைதன்யனே அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தான். மாவட்டத்திலும் அவனே முதலிடம். தேசிய ரீதியில் மூன்றாமிடம். கேட்கவே மகிழ்ச்சியாக இருந்தது.

அதிபர் பத்திரிகைகளுக்கு தமது பெருமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

நான் அங்கிருந்து புறப்பட்டு சைதன்யனுக்கு விருப்பமான புத்தகப் பொதியொன்றுடன் அவன் வீட்டிற்குச் சென்றேன். அங்கே அவனது வகுப்பாசிரியர் உட்கார்ந்திருந்தார்.

சைதன்யனில் தான் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்ததாகவும் அவன் முதலாவதாக வருவானென்று தான் முன்னரே எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் கூறினார். என்னைக் கண்டதும் "வாங்கோ சேர்" என விளித்த அவர், சைதன்யனின் பெற்றோரைப் பார்த்து,

"இந்த வெற்றிக்கு நான் மட்டுமில்லை, மூன்றாம் நான்காம் ஆண்டில் படிப்பித்த இந்த சேருந்தான் காரணம்" என்றார். அதைக் கேட்க அருவருப்பாக இருந்தது. கூடவே கோபமும் வந்தது. முகத்தைக் கடுமையாக்கியபடி பேசாமல் இருந்தேன்.

"சே..என்ன மனிசர்கள்" மனதுக்குள் சொல்லிக் கொண்டேன். அவர் புறப்பட்ட பின்னர் சைதன்யனைப் பாராட்டினேன்.

"இந்த வெற்றி உனது தனியாற்றலுக்குக் கிடைத்த வெற்றி. இதிலை நாங்கள் யாரும் உரிமை பாராட்ட முடியாது" என்று சொன்னேன்.

ஆனால், அவனோ அதை மறுத்து ஆசிரியரும் பெற்றோருமே தனது வெற்றிக்குக் காரணமென்று பணிவோடு கூறினான்.

நான் புறப்பட்டு வந்து விட்டேன். மறுநாள் காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் அவனது படம் வந்திருந்தது. கூடவே பாடசாலை பாராட்டி வாழ்த்திப் பெருமையை வெளிப்படுத்தியிருந்தது. வகுப்பாசிரியரது பிரத்தியேக ரியூசனும் தமது நிறுவனத்தின் சிறந்த மாணவனாக சைதன்யனை இனங்காட்டி, அவனது சாதனையைப் பாராட்டி விளம்பரம் தேடியிருந்தது.

*

சைதன்யன் இப்போது தேசியப் பாடசாலையொன்றில் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிரபலங்களின் பிள்ளைகள் பலரும் அவனுடன் கூடப் படித்தனர். அவனிடம் முன்பை விட உற்சாகமும் துருதுருப்பும் கூடியிருந்தன. எனினும், புத்தக வாசிப்பும் அவனுடன் கூடவேயிருந்தது.

"உனது நண்பர்கள் யார்?" என்று ஒருமுறை அவனிடம் கேட்டேன்.

"எனக்கு எல்லோரும் நண்பர்கள்தான். ஆனால் அவர்கள்தான் என்னைத் தங்கடை நண்பர்களாகக் கருதவில்லை" என்று அவன் பதிலிறுத்தான்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. மீண்டும் அவன் தொடர்பில் அக்கறை காட்டினேன். அப்போதுதான் அவனது பெறுபேறே அவனுக்கு எதிரியாயிருந்ததைக் கண்டு கொண்டேன்.

அவனுக்குக் கற்பிக்கும் ஆசிரியரொருவரும் ரியூசன் சென்ரர் வைத்திருந்தார். அதில் சேருமாறு சைதன்யனைப் பலமுறை கேட்டும் அவன் சேரவில்லை. அதனால், அவர் அடிக்கடி அவனை இகழ்ந்து பேசுவதாகச் சக மாணவனொருவன் என்னிடம் சொன்னான்.

"காசு கட்டியா நீ ஸ்கொலர்ஷிப் பாஸ்பண்ணினாய்?" என்றும் அவர் கேட்டாராம்.

எனக்கு அதைக் கேட்கும் போதே கோபம் ஏற்பட்டது. கண்களும் கலங்கின. தவணைப் பரீட்சையில் அந்த ஆசிரியரது பாடத்தில் அவன் புள்ளிகளில் பின்தள்ளப்பட்டான்.

உயர் புள்ளி பெற்றவனோ "நீ காசாலை என்னை முந்தினாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப நான் உண்மையாய் முந்தீட்டன்... பார்த்தியா? என்று ஏளனஞ் செய்தான். அவனைப் போலவே சக மாணவர்கள் பலரும் சைதன்யனை பொறாமையோடுதான் நோக்கினர்.

எனக்குச் சங்கடமாயிருந்தது. இப்படியே விட்டால் அவனது உளநிலை பாதிக்கப்பட்டுவிடும். வேறு பாடசாலைக்கு அவனை மாற்றுவது நல்லதெனப்பட்டது. அவனை அணுகி ஆறுதல் கூறினேன். வேறு பாடசாலைக்கு மாறி விடுமாறு வற்புறுத்தினேன். அவனோ அதைப் பொருட்படுத்தாமல் சிரித்தான்.

"சேர், நல்ல மனப்பாங்கு பற்றி இந்தச் சேர்தான் எனக்குச் சொல்லித் தந்தவர். என்னட்டை அது இருக்குது. இவரிட்டையும் மற்ற மாணவரிடத்திலையும் அது குறைவாக இருக்குப் போலை... அதுக்காக நான் ஏன் மாறவேணும்?" அவனது முதிர்ந்த வார்த்தைகளினூடே விழிகளின் தீட்சண்யம் ஒளிர்ந்து, சூரியக் கதிர்களாகப் பிரகாசித்து என்னை நிலை குலைய வைத்தது.

*0*

*(கலைமுகம் ஜூலை - செப்ரெம்பர் 2008)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாகம்

"நீ எனக்கு மகனைப் போலை" என்று அவர் சொன்னதும் இவன் தனக்குள் பூரித்துப் போனான். உடலெல்லாம் சிலிர்த்தது. அங்கமெங்கும் ஏதேதோ சுரப்புகள் நிகழ்ந்தது போல இருந்தது.

இத்தனை காலமும் இவன் நினைத்திருந்த, நினைக்கப் பழக்கப்பட்டிருந்த மரபு வழி வம்ச உறவுகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அவையெல்லாம் எத்துணை போலியாகி விட்டன என எண்ணும்போது மனது கனத்தது. இவற்றுக்கு அப்பாலான மனித உறவுகளை இப்போதுதான் இவன் ஆத்மார்த்தமாக உணர்ந்துள்ளான்.

அவரை இவனுக்குக் கடந்த சில நாள்களாகத்தான் தெரியும். அண்மையில் இந்தப் பிரதேசத்தில் நடந்த சனசமூக நிலையத் திறப்பு விழாவில் இவனும் அதிதியாகக் கலந்து கொண்டிருந்தான். அப்போது தான் அவர் இவனுக்கு அறிமுகமானார்.

தாம் காங்கேசன்துறையிலிருந்து இடம் பெயர்ந்து, தற்போது இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ளதாக அவர் அப்போது, தனது அறிமுகத்தில் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறப்புவிழா நிகழ்வில் இவன் உரையாற்றிய பாணி தன்னைக் கவர்ந்ததாகவும் எளிமையாக, இலகுவாகப் பேசும் தன்மை இவனிடம் உள்ளதாகவும் அவர் அப்போது சொல்லியிருந்தார்.

அதன் பின்பு - இப்போதுதான் அவரைச் சந்திக்கிறான். இவ்வளவு காலத்தில் இவன் அவரை மறந்து விட்டான். அந்த இடம்பெயர்ந்தோர் முகாமிற்குள் இவன் தனது சக நண்பனுடன் நுழைந்தபோது, அவர்தான் இவனை அடையாளங் கண்டு, அறிமுகமானார். அந்தப்பகுதியில் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு, இவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கென வந்த இவனையும் சக நண்பனையும் அவர் அழைத்துச் சென்றார். அடுக்கடுக்காக கோழிக்கூடுகள் போல இரு கரைகளிலும் சிறு சிறு குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. நடுவே ஆறடி அகலமான பாதை நீண்டு, இறுதிக் குடிசையுடன் முடிவடைகிறது. தரிசாய்க் கிடந்த நிலத்தைச் சீராக்கி, முகாம் அமைத்துள்ளனர். இப்போது அந்த இடம் புதிதாகத் தெரிகிறது.

வீட்டின் முன்னால் ஆண்களும் பெண்களும் சிறுசுகளுமாய் அமர்ந்திருந்தனர். கீழை அடிவானிலிருந்து நிமிர்ந்த நிலவு, ஒளியை எங்கும் சிந்திக் கொண்டிருந்தது. இவனையும் நண்பனையும் கண்ட அவர்கள், எழுந்து கொண்டனர். ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.

"இவர்தான் இந்தப் பகுதிப் பொறுப்பாளர்" என அவர் இவனை அறிமுகப்படுத்தினார். இப்போது இவனைச் சூழக் குழுமி நின்ற சிறுசுகள், இவனது இடது தோளில் இருந்து இடுப்புக்குக் கீழாக முனை கீழ்த் தெரியத் தொங்கிய எம் செவின்டி ரைபிளை ஆவலுடன் பார்த்தனர். சில துணிச்சல்காரரர்கள் கிட்ட வந்து, அதனைத் தொடவும் செய்தனர்.

அந்தத் துணிச்சற்காரன் ஒருவனை இவன் எட்டிப்பிடித்துத் தூக்கி தோளில் இருத்தினான். அதைப் பார்த்து ஏனைய சிறுசுகள் கூவிச் சிரித்தனர்.

அதற்குள்ளாக - வாங்கொன்றை எடுத்துக் கொண்டு ஒருவர் வந்தார்.

"வேண்டாமண்ணை. நானும் உங்களோடை நிலத்திலை இருக்கிறன்." என்று சொல்லியபடி, தோளிலிருந்தவனை இறக்கி விட்டு, நிலத்தில் அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உடுப்பெல்லாம் ஊத்தையாகப் போகுது” ஆச்சி ஒருவர் சொன்னார்.

அவர் எங்கோ சென்று விட்டார். இவனும் நண்பனும் அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினர். அவர்களது வாழ்க்கைநிலை பற்றி, வாழ்வுப் பிரச்சினைகள் பற்றி, விடுதலைப் போராட்டம் பற்றியெல்லாம் இவன் அவர்களுடன் கலந்துரையாடினான். நிறையத் தெரிந்து கொண்டான்.

ஒவ்வொரு தினமும் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களை இவன் அளந்து கொண்டான்.

சற்றுத் தள்ளி இருந்தவர் தனது மனைவியின் காதிற்குள் ஏதோ சொல்வதும், அவள் கையை விரித்து, குரல் வராமல் சீனி இல்லை எனச் சொல்வதும் இவனுக்குப் புரிந்தது. தேநீர் தருவதற்குக்கூட வழி இல்லாமல் வாழும் இவர்களது வாழ் நிலையை இவன் புரிந்து கொண்டான்.

சற்று முன்னர் காணாமற்போன அவர், இப்போது இரண்டு சில்வர்களில் தேநீரை நிரப்பி எடுத்து வந்தார். “ஏனையா! சீனி, தேயிலை இல்லாமல் நீங்கள் கஸ்ரப்படேக்கை, பிறகேன் எங்களுக்கும்..” என்றான் இவன்.

அப்போது அவர் இவனருகே வந்து,

“நீ என்ரை மகனைப் போலை. அவரும் அப்பிடித்தான். நாங்கள் குடிக்காட்டாலும் எங்கடை பிள்ளையளுக்குக் குடுக்காமல் விடமாட்டம்” என்று சொன்ன போது இவன் உடலெல்லாம் பூரித்தது. நெஞ்சகப் பரப்பில் ஏதேதோ சுரப்புகள் நிகழ்ந்தன. கூடவே அம்மாவினதும் அப்பாவினதும் ஞாபகம் வந்தது.

இவன் கடைக்குட்டி என்பதால் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் அப்போது தனிக் கரிசனை இருந்தது. அப்பா இவனைச் சந்திரன் என்பார். அம்மாவோ உதயன் என்பார். இவனும் அப்போது தான் சந்திரனாயும் சூரியனாயும் இருப்பதாய்ப் பெருமைப்பட்டிருந்தான். அன்பு, பாசமெல்லாம் போலியாகிப் போன பின்னர், இவனும் போலிப் பெருமைகளைப் புறந்தள்ளி விட்டான்.

இப்போது இவனது பெயர்கூட அப்பாவையும் அம்மாவையும் கடந்து விட்டது. இவன் இப்போது இசையமுதனாகி விட்டான். உதயனும் சந்திரனும் இவனிலிருந்து மறைந்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது - இவன், வம்ச உறவில் தன்னைத் தந்த அப்பாவையும் அம்மாவையும் நினைத்துப் பார்த்தான்.

கனடாவின் மொன்றியல் நகரில் எங்கோ ஒரு மூலையில் சின்னதொரு பெட்டி வீட்டில் அவர்கள் வாழக்கூடும். இப்போது மொன்றியலில் காலை ஏழரை மணியாயிருக்கும். சூரியக் கதிர்கள் பனிமூட்டத்தைக் கலைத்துப் பாயத் தொடங்கியிருக்கும். இரவில் கொட்டப்பட்ட ஸ்னோக்கள் தொழிலாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும்.

அம்மா இங்கு போல அகப்பையைத் தூக்கி, அடுப்பை எரிப்பதற்குப் பதிலாக சில்வர் கரண்டியால் கொட் பிளேட்டில் சமையல் செய்து கொண்டிருக்கலாம். அப்பா தொட்டியில் வந்து விழும் குளிர்ந்த நீருடன், கொதி நீரையும் கலந்து குளித்து முடித்திருப்பார்.

இங்கே மின்சாரம் இல்லாததால் இந்த வாழ்க்கையை வெறுத்துத் தனது அதிபர் பதவியை உதறி எறிந்து விட்டுச் சென்ற அவர், அங்கு இதை விடக் கூடிய சம்பளத்தில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் தொழிலாளியாகப் பணி புரிகிறாராம். இனி அவர் வேலைக்குக் கிளம்பக் கூடும்.

அக்கா, சின்னண்ணா, பெரியண்ணா எல்லோருமே அடுத்தடுத்து அருகேதான் உள்ளனராம். அக்காவின் புருசன் இங்கேயே சிறந்த விளையாட்டு வீரன். சிலவேளை அவர் அங்கு விளையாட்டுக் கழகமொன்றை உருவாக்கியிருக்கலாம். றெப்றியாகவும் இருக்கக்கூடும்.

இவர்களெல்லாம் தன்னை நினைப்பார்களா? என இவன் தனக்குள் கேட்டுக்கொண்டான்.

இங்கே - மார்கழிப் பனியிலும் அதிகாலையில் குளித்து விட்டுக் கோவிலுக்குச் செல்லும் அம்மா அங்கே - வீதியில் படர்ந்திருக்கும் ஸ்னோவைக் கண்டு பயந்திருக்கலாம். சிலவேளை, விடியற்காலையில் தான் முன்பு குளித்துவிட்டுக் கோவிலுக்குப் போனதை அம்மா நினைத்திருப்பாளானால் தன்னையும் இந்த ஊரையும் கூடச் சில வேளை தனது மனக்குறிப்பில் பதிக்கக்கூடுமென இவன் நினைத்தான்.

அவர் ஞாபகமூட்டிய பின்னர் தேநீரை எடுத்து அருந்தினான். நிலவு சற்று மேலெழுந்து, கூடிய இடங்களுக்குள் ஊடுருவி இருளை விரட்டி விட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னண்ணாவும் பெரியண்ணாவும் அகதி அந்தஸ்துக் கோரிக் கனடாவிற்குள் நுழைந்து, அங்கு தம்மை ஸ்திரப்படுத்திக்கொண்ட பின்னர் அவர்கள் இவனை அழைத்தனர். அந்த அழைப்புக் கடிதம் கிடைத்த இரண்டு தினங்களுக்குள், இவன் வீட்டை விட்டு வெளியேறி, இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

அதன் பின்னர் பயிற்சி எடுத்து விட்டு, ஆனையிறவில் காவலரணில் காவல் கடமை புரிந்து விட்டு, ஆறுநாள் விடுமுறையில் வீட்டிற்குச் செல்லும் வரை இவனுக்கு எதுவுமே தெரியாது.

வீட்டிற்குச் சென்றபோது, அக்காவும் அத்தானும் கனடாவிற்குள் நுழைந்து விட்டதை அறிந்தான். எவ்வளவு செலவு செய்தேனும், இவனை விடுவித்து கனடாவிற்கு அனுப்ப அப்பா சதா முயன்றும், தோற்றுப் போய்விட்டதாக அம்மா சொன்னாள்.

"உன்னைக் கையெடுத்துக் கும்புடுறன் ராசா! உதுகளை விட்டிட்டு அண்ணாவையோடை கனடாவுக்குப் போய் நல்ல பிள்ளையாய் இரு" என்றும் அவள் வேண்டினாள்.

இவன் ஒன்றுமே சொல்லவில்லை. அப்பா முதலில் ஆவேசத்துடன் பேசினார். பிறகு-

"உதுகளையெல்லாம் மறந்திட்டு, அங்காலை போறதுக்கு றெடியாய் இரு. நானும் கொம்மாவும் பாஸ்போர்ட் எடுத்திட்டம். எல்லாருமாய்ப் போவம்" என்றார்.

இவன் எதுவுமே பேசாமல் வானையளந்தான். அப்பாவும், அம்மாவும் மாறி மாறி நிறைய ஓதினர். இறுதியாக இவன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான் -

"என்ரை முடிவிலை எந்தவித மாற்றமுமில்லை. நான் தொடர்ந்தும் போராடப் போறன்"

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் திடீர் அதிர்ச்சி!

"நானும் அவளும் போறது போறதுதான்" எனக் கத்தினார். அம்மா எதுவுமே பேசாது நின்றாள். இவன் அங்கிருந்து தூரத்தை நீட்டி வந்துவிட்டான். அப்பாவும் அம்மாவும் கூட, மேலும் தூரத்தை நீட்டி - எந்தக் கூக்குரலுக்கும் செவிசாய்க்காமல் சென்று விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நிலவு நன்றாக மேலெழுந்து விட்டது. சிறுசுகள் மடியில் தூங்கி விட்டன. அகதி முகாமில் இருந்த பொது வானொலிப்பெட்டி, சைக்கிள் டைனமோ இயக்கத்தில் புலிகளின் குரல் செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. ஓ... நினைவுகளில் நனைந்தொழுகும் போது, சூழல் மறக்கப்பட்டு விடுகிறதே!

"சேர்பியர்களின் தாக்குதல்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும், பொஸ்னியாவின் செபறனிக்கா நகரில் வாழும் பொஸ்னிய முஸ்லிம்கள், ஐ.நா. சபை வாகனங்கள் மேற்கொள்ளும் மீட்பு வேலைகளின் போது, அங்கிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர். தாம் அங்கிருந்து வெளியேறினால் சேர்பியர்கள் தமது நாட்டை முற்றாக ஆக்கிரமித்து விடுவார்கள் என்பதாலேயே அவர்கள் வெளியேற மறுப்பதாக, ஐ.நா. அதிகாரியொருவர் தெரிவித்தார்" காற்றில் கலந்து வந்த செய்தி, இவனை ஒரு கணம் நிறுத்தி மீளச் செய்தது.

இவன் மீண்டும் அம்மாவையும் அப்பாவையும் அவர்களைப் போன்றவர்களையும் நினைத்தான். இடைவெளிகளையும் கணித்துக் கொண்டான்.

"ஐயா, தாகமாயிருக்குது... கொஞ்சம் தண்ணி தருவீங்களா?" என்று இவன் கேட்டான். இப்போது நிலவு மேலும் உயர்ந்திருந்தது.

*0*

*(ஈழநாடு 1996)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிவு

இதை ஏன் நம்ப மறுக்கின்றீர்கள்? இது ஒரு வீடுதான்.

இதன் சாரங்களில் நான் தொங்கியிருக்கிறேன். வழுக்கும் தூண்களில் ஏறிச் சறுக்கியிருக்கிறேன். உயர்ந்த அத்திவாரத் தரையிலிருந்து நிலத்தில் பாய்ந்திருக்கிறேன். சதுரமிட்ட தரையில் கெந்தி விளையாடியிருக்கிறேன். ஓடும் மழை நீரில் காகிதக் கப்பல்கள் விட்டிருக்கிறேன்.

வெள்ளைக்காரர்கள் ஆண்ட ஏதோவொரு வருடத்தில் இது கட்டப்பட்டது. நாற்சார வீடு. சுண்ணாம்பு குழைத்துக் கட்டியது. இறுக்கமான ஒரு முழ அகலமான சுவர்கள். வைரம் பாய்ந்த காட்டு மரங்களில் சாரங்கள். கூரை மரங்கள் கூட, தேர்ச்சி மிக்க தச்சரால் போடப்பட்டன. சுழிப்பான அலங்காரங்கள், வேறு ஏதேதோ அலங்காரங்கள் வெட்டிய வாளிப்பான மரத்தூண்களில் சாரங்கள் நிலைத்திருந்தன. வேம்பிலும் முதிரையிலும் கதவுகளும் சாளரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கதவுகளில் யாழியும் வேறு வஸ்துக்களும் செதுக்கப்பட்டிருந்தன.

ஊரிலேயே பழமையான வீடு இதுதான். கம்பீரமானதும் கூட. ஊர் நடுவில் பெரிய வளவுக்குள் தென்னையும் மா, பலாவும் சூழ்ந்த சோலைக்குள் தலைநிமிர்த்தி நின்றது.

உடையார் வீடு என்றுதான் ஊராருக்குத் தெரியும். சுற்று வட்டாரத்தில் யாரும் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள். பூதப்பிள்ளை உடையார்தான் இந்த மாளிகையைக் கட்டினார்.

உடையார் கம்பீரமானவர், பரந்த முறாய்த்த முகம், இராவணனின் மீசை. நாலு முழ வேட்டியை மடித்துக் கட்டியபடி, மிதியடியை “டக் டக்” என ஓசை எழுப்பியபடி நடந்து வந்து வில்லு வண்டியில் ஏறி வெற்றிலையில் சிவந்த இதழ்களைச் சுழித்தபடி, ஊர் கோலம் போவார். வழியில் எதிர்ப்படுபவர்கள் தங்கள் சால்வைகளைத் தோளிலிருந்து எடுத்து கக்கத்துக்குள் செருகி மரியாதை செய்வதில் புன்னகை பூத்துச் செல்வார்.

அந்தக் குறிச்சியிலேயே அடிமை குடிமைகளை வைத்துக் கட்டியாண்டவர் அவர்தான். சண்டித்தனத்தில் பிரபலம். சால்வையைத் தோளிலிருந்து அகற்றாததற்காக கணவதியனை வெளுத்துக் கட்டியதிலிருந்து நிறையக் கதைகள் உண்டு. ஆனாலும், வழக்கு வல்லடிகளில் மாட்டிக்கொள்ளாத சூழியன். தென்னந்தோப்புகளும் பனங்காடுகளும் வயற்புலங்களும் அவருக்குச் சொந்தமாயிருந்தன. காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவற்றை ஒரு சுற்றுச் சுற்றி வந்து வேலையாட்களைக் கண்காணித்து முடிய மதியம் திரும்பி விடும். உடன் பனங்கள்ளில் தாகசாந்தி தீர்த்த பின்னர் வீட்டிற்கு வருவார். மதிய உணவை முடித்த பின் குட்டித்தூக்கம் போடுவார். இது வழமை. மாலையில் தான் மற்றதெல்லாம்.

உடையாருக்கு ஒரே மகள்தான். செல்லாச்சிப்பிள்ளை என்று பெயர். கந்தப்ப முதலியார் வழியும் கந்தன் கனகராஜ முதலியார் வழியும் சேர்ந்து இரு மரபுந் துய்ய வந்தவள் என்ற சிறப்பு அவளுக்கு. அதனால் கர்வமும் பெருமையும். சின்னநாச்சியார், சின்னக்கமக்காறிச்சி, சின்ன உடையாரம்மா என்றெல்லாம் அழைப்பார்கள். கட்டளையிடுவதில் மகள் அப்பரைப் போல என்பது உடையாரம்மாவின் எண்ணம்.

செல்லாச்சிப் பிள்ளைக்குத் தேர்வடம் போல உருண்டு திரண்ட உடல். மைக்கறுப்பென்றில்லா விட்டாலும் கறுப்புத்தான். சற்றுப் பருத்த சரீரம் என்றாலும் வடிவுதான்.

காதில் அணிந்திருக்கும் தோடும் முருதுகட்டையும் வாளியும் சங்கிலியும் கழுத்திலிருக்கும் இரட்டைப் பட்டு மோறாச் சங்கிலியும் மூக்குத்தியும் அவரது அழகை மிகையாக்கின என்பது உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சின்னனிலை இப்பிடியில்லை. சமைஞ்ச பிறகு தான் இவ்வளவு தொக்கை” எனச் சொல்லி, பத்தியம் பார்த்தவர்களை எத்தனையோ முறை திட்டிச் சபித்திருப்பார் உடையாரம்மா.

திடீரென ஓர் இரவில் உடையார் - உடுப்பிட்டிக்குச் சென்று வந்தவர் - இரத்தங் கக்கிச் செத்துப் போனார். கைரகப் பேய் அடித்து விட்டதாகவே எல்லோரும் பேசிக்கொண்டார்கள். கைரகப்பேய் தொற்றிய குடும்பமே நாசமாய்ப் போகும் எனப் பலரும் அச்சப்பட்டனர். அதிலும் பஞ்சமியில் இறந்து போனார். பஞ்சமியில் இறப்பவர் சுற்றத்துக்குள் ஐந்து பேரையாவது பலியெடுத்துத்தான் ஓய்வாரென்னும் போது அதுவே பயம்.

உடையார் குடும்பமோ அச்சாணி இல்லாத் தேரானது. கையொடிந்து போன உடையாரின் மனைவி காணி பூமிகளைப் பார்த்துக்கொள்ள முடியாமல் திண்டாடினார். காதுங் காதும் வைத்த மாதிரி மகளுக்கு ஒரு கல்யாணத்தை நடத்தி முடித்துவிட்டால் எல்லாம் தீர்ந்து விடுமென மனதார நம்பினார்.

ஆனால், மாப்பிள்ளை தங்கள் குடும்பத்திற்கேற்ற விதத்தில் சுண்டியெடுத்த உயர் சாதியனாய் இருக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார்.

உடையாரின் ஆண்டுத்திவசம் முடிந்த பின்னர்தான் அது கை கூடியது. மாப்பிள்ளையும் முதலியார் பரம்பரைதான். சீனியர் கேம்பிறிஜ் படிப்புப் படித்து இடையில் சறுக்கி விழுந்து அத்தோடு அதற்கு முழுக்குப் போட்டுவிட்டுச் சீமைக்குப் போக இருந்தவர்.

சற்று அடக்கமாகவே திருமணம் நடந்தது. என்றாலும் பட்டிகள் அதிகந்தான். முதலியாரும் ஏசென்டு துரையுங்கூட திருமணத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் வந்ததில் உடையாரம்மா மிகவும் பூரித்துப் போனார். திருமணத்துடன் தன்னுடைய பாரமெல்லாம் நீங்கி விட்டதாக நிம்மதியடைந்தார்.

“இனிச் சிவனேயெண்டு கண்ணை மூட வேண்டியதுதான்” எனப் பலரதும் காதுபடச் சொல்லிக் கொண்டார்.

மாப்பிள்ளை உயரம். வெள்ளை அழகன். மெல்லிய வலிய உடம்பு. குறுமீசைக்காரன். உடையாருக்கு நிகரான கம்பீரமானவன் என்பது உடையாரம்மாவின் கணிப்பு. ஜோடிப் பொருத்தந்தான் வாய்க்கவில்லை. சாதகப் பொருத்தம் இருக்கிறதே, பிறகென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை படித்தவரென்பதால் ஆடம்பரம் அதிகம். குதிரை வண்டியில் ஆடம்பர உடையணிந்து சென்று வருவார். தன்னைக் கூட்டிச் செல்வதில்லை என்ற கவலை செல்லாச்சிப் பிள்ளைக்கு. கேட்கும் போதெல்லாம் எல்லா இடத்திலும் வாய் நனைக்காத அவரின் தன்மையைச் சொல்லி அடக்கி விடுவார். சீமைச் சாராயந்தான் அவருக்குப் பிடித்தது. பலரையும் அழைத்து விருந்தும் கும்மாளமுமாய்ப் பொழுது கழிந்தது.

கொஞ்சக் காலத்திலேயே சீமைக்குப் போக முடிவெடுத்தார். செல்லாச்சிப்பிள்ளை சொல்லி அலுத்துவிட்டார். சன்னாப்புலம் முழுவதையும் கொஞ்சங் கொஞ்சமாக விற்று முடித்தார். தோட்டக்காணி பரப்பு பதினொரு ரூபாவுக்கு விலை போனது. கலட்டுக் காணிகளெல்லாம் ஐந்தாறு ரூபாவுக்கு மேல் போகவில்லை.

கையில் ஐம்பது பவுணளவில் சேர்ந்ததும் அந்தக் காசுடன் மலேசியா போனார். தன் மகளின் வயிற்றில் ஒரு புழுப் பூச்சியைத்தானும் எதிர்பார்த்திருந்த உடையாரம்மாவுக்கு அது நிராசையாகிப் போனமைதான் எல்லாவற்றையும் விடத் துக்கம்.

மீண்டும் பெண்புரசுகளே வீட்டை ஆளவேண்டியதாயிற்று. செல்லாச்சிப் பிள்ளையே வயல் வேலைகளைக் கவனித்துக் கொண்டார். சித்தப்பா - உடையாரின் தம்பி - கூடமாட மேற்பார்வை செய்தார்.

மலேசியாவிலிருந்து கடுதாசிகள் வந்தன. வேலை தேடுவதாயும் வேலை கிடைத்து விட்டதாகவும் அதை விடுத்து வேறு வேலை தேடுவதாகவும் அவை சொல்லின. அடிக்கடி பணங் கேட்டு எழுதப்பட்டது. காணிகளை விற்று விற்று செல்லாச்சிப்பிள்ளையும் அனுப்பிக் கொண்டிருந்தார். மலேசிய உத்தியோகஸ்தரின் மனைவி என்ற பகட்டிலும் அவருக்கென்னவோ உள்ளூரப் பெருங் கவலைதான்!

உள்ளே அழுது வெளியே சிரித்து வாழ்ந்தார். உடையாரம்மாவுடன் சேர்ந்து கோயில் குளமெல்லாம் அலையத் தொடங்கினார்.

ஒரு நாள் உடையாரம்மாவும் கண்ணை மூடினார். சன்னி கண்டு இழுத்து இழுத்து அனுங்கி அவரது உயிர் பிரிந்தது. தனது உலகம் இருள் மூடித் துவண்டொழிந்து விட்டதாக, செல்லாச்சிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங் குரலெடுத்து அலறினார். ஊர் கூடி மரண வீட்டை நடத்தியதுடன் தகப்பனைப் போலவே தாய்க்கும் கொள்ளி வைக்க வேண்டியதாயிற்று.

இதெல்லாம் கைரகப் பேயின் வேலை என்றே ஊரார் பேசிக்கொண்டனர். சாவதற்குக் கிட்டவாய் முகம் அதைச்சுப் பேய் போல உடையாரம்மா இருந்ததாக தமக்குள் கதைத்தனர். பெரிய வம்ச விருட்சத்தில் செல்லாச்சிப்பிள்ளை தனிமரமானார். ஆறுதல் சொல்ல ஒரு சீவனுமில்லை. தகவலறிந்து கணவர் - அப்புத்துரை - புறப்பட்டு வந்தார். வந்தவர் மனைவியையும் அழைத்துக்கொண்டு மலேசியா போக முடிவெடுத்தார். ஆனால் செல்லாச்சிப்பிள்ளையோ தொடுவிலும் மாட்டன் என்று சொல்லி விட்டார். மீண்டுமொரு காணியை விற்றுக்கொண்டு அப்புத்துரை மலேசியாவுக்குச் சென்று விட்டார்.

மீண்டும் தனிமை. தங்களுடன் வந்திருக்கும்படி பலரும் அழைத்தனர். யாரோடும் போயிருக்க மறுத்து விட்டார். தனது வீட்டைவிட்டு எங்கும் செல்வதில்லை என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

கடைசியாக உறவினர்கள் சுப்பையாக் கிழவனைத் துணைக்கு அமர்த்தி விட்டனர். கிழவனுக்குத் திருப்தியாகச் சாப்பாடு விழுந்தது. வறியவனானாலும் உடையாரம்மா - வீட்டுக் காவலாளி என்பதில் நிறைவு வேறு.

செல்லாச்சிப்பிள்ளை அரசியானார். தனியே வீட்டை ஆண்டார். சுப்பையாக்கிழவனும் மற்றவர்களும் கட்டளைகளைச் செயற்படுத்திக் கொண்டிருந்தனர்.

வயல்கள் குத்தகைக்கும் ஒற்றிக்கும் போனது. பனைகளும் சீவலுக்கு விடப்பட்டன. அதிலிருந்து கிடைப்பவை வாழ்க்கைக்குப் போதுமானவையாக இருந்தன.

செல்லாச்சிப்பிள்ளை - உடையாரம்மா - கல்லு வைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டுத் திரிந்தார். மாதத்தில் விரதம் இல்லாத தினங்கள் அவர் வாழ்வில் மிகக் குறைவாக இருந்தன.

ஜப்பான் சண்டையுடன் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு அப்புத்துரை மீண்டும் வந்தார். சீமைச் சாராயங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
292717

“பார்” ஆரம்பித்து சைனாக்காரனுடன் அடிபட்டு முன்பல்லையும் உடைத்துக்கொண்டு கந்தறுந்து போய் வெறும் கையோடு இலங்கை மீண்டார். வந்ததும் இனிச் செல்வதில்லை என்றும் முடிவெடுத்தார்.

மீண்டும் உடையார் வீடு கொடியேறியது. செல்லாச்சிப்பிள்ளைக்கோ அளவற்ற ஆனந்தம். தனது வேண்டுதல்கள் இப்போதுதான் பலிப்பதாக இறைவனுக்கு நன்றி கூறினார்.

அப்புத்துரையர் மலேசிய அந்தஸ்தை நிலைநிறுத்தவே விரும்பினார். வந்தவுடன் வீடெல்லாம் திருத்தியமைத்தார். சீமெந்துத் தரையமைத்தார், வர்ணம் பூசினார். வீட்டு முகப்புச் சுவரில் *UDAYAR HOUSE* என ஆங்கிலத்தில் எழுதி வைத்தார். ஊரைவிட்டு எங்கு செல்வதாயினும் காரிலேயே சென்றார். நக்கி நாகலிங்கத்தின் கார் அவருக்கு எப்போதும் தயாராக இருந்தது.

இருந்த தென்னங்காணிகளும் பனை வளவுகளும் கலட்டுக் காணிகளும் விற்றுத் தீர்ந்தன; வயல் நிலந்தான் பாக்கி. அதில் கை வைக்க உடையாரம்மா இடந்தரவில்லை. கார் பிடித்து சின்னக் கடைக்குப் போய் பெரிய கூறாய் வாங்கி வரும் மீனைச் சமைப்பதற்கும் அவர் மறுத்து விடுவார். அப்புத்துரையின் உறவு வட்டத்தில் நடக்கும் நல்லது கெட்டதுகளுக்கு வாய் நனைக்கவும் அவர் ஒருப்படுவதில்லை. இவற்றால் அடிக்கடி சண்டை சச்சரவுகளுக்குக் குறைவில்லை.

“உன்னோடை இருக்கிற நேரம் பரதேசியாய்ப் போகலாம்” என்று வெளிப்படையாகவே பேசத் தொடங்கினார் அப்புத்துரையார். செல்லாச்சிக்கோ கவலையான கவலை; மனுசனைத் திருத்தி வழிப்படுத்தும்படி கடவுளில் பழி போட்டார்.

“ஒரு பிள்ளை இருந்தாலாச்சும் இந்தாளின்ரை போக்கை மாத்தலாமெண்டால் சிவனே!...”

வயது நாற்பதைக் கடந்த பிறகு பிள்ளை எங்கே என்ற கவலையும் அவருக்குள் குடைந்தது. ஒட்டியும் வெட்டியும் குடும்ப வாழ்க்கை கழிந்தது.

அப்புத்துரைக்கு எல்லாந் தோல்விதான். அவரைப் பொறுத்தவரை திருமணமும் மோசமான தோல்வியே. தனது திணைப்புலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியில் குடியிருந்த குடிமைகளை எழுப்புவதில் ஏற்பட்ட தோல்வியே எல்லாவற்றிலும் பெரிது.

அதிலும் கருவாட்டுக் கந்தையனின் மகன் திருப்பி அடிக்க வந்தது அவரளவில் தாங்கிக் கொள்ள முடியாத அவமானம். ஊருக்குள் செய்தி கசிந்ததும் அது பற்றியே அடிக்கடி சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருந்தார். சில நாள்களிலேயே நெஞ்சுவலியில் இறந்தும் போனார்.

அதன் பின் உடையாரம்மா மிகவும் ஒடுங்கிப் போனார். உப்புச்சப்பற்ற வாழ்க்கை. வெள்ளை உடைக்குள் புகுந்து நகை நட்டின்றி நரை திரையுடன் தளரத் தொடங்கினார். காதில் மட்டும் பெரிய கடுக்கனொன்றை மாட்டியிருந்தார்.

கோயிலும் வீடுமாய்க் கழிந்தது வாழ்க்கை. உடம்பு மெதுவாக இளைக்க ஆரம்பித்தது. வீட்டுக்குள் புகுந்து தொட்டாட்டு வேலை செய்வது வரை எல்லா வேலைகளையும் பொன்னியே செய்ய வேண்டியதாயிற்று. பொன்னி அரிசி இடிக்கும் போதும் ஏதனங்கள் கழுவும் போதும் அட்டணக் காலிட்டுக் கொண்டிருந்து உடையாரம்மா தனது சாதிப் பெருமைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார். எப்படிச் சொன்னாலும் அந்தப் பெருமை சொல்லி மாளாது அவருக்கு.

உடையாரம்மா வீட்டுப் பலாப்பழங்கள் மிகவும் ருசியானவை. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு ருசி. சிறுவர்களாக இருந்தபோது அங்கு போவோம். அவரை நாங்கள் அப்புத்துரைப் பாட்டி என்போம். சிங்கப்பாட்டி, அப்பா வீட்டுப் பெத்தாச்சி என்றும் அவரைச் சொல்வார்கள். எங்கள் வீட்டுக்குத் தவறாது பலாப்பழங்கள் தருவார். புளுக்கொடியலும் கோயில் பிரசாதங்களும் கிடைக்கும். அந்தப் பெரிய வீட்டின் சதுரமிட்ட நிலத்தில் கெந்தி விளையாடுவதிலும் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடுவதிலும் எங்களுக்கு ஆனந்தம் அதிகம்.

ஏதோவொரு தினத்தில் அவரும் இறந்து போனார். இரவு பாயில் இறந்து போயிருக்க கதவை உடைத்துப் போய்த்தான் சடலத்தைக் கண்டெடுத்தார்கள். உடையாரம்மா மெல்ல மெல்லக் கனவாகி, பழங்கதையாய்ப் போனார்.

பின்னர் அந்த வீட்டில் ஒரு சிலர் குடிவந்து மீண்டனர். அதிககாலம் ஒருவரும் இருக்கவில்லை. கைரகப்பேயால் இரப்புப் பிடிச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடென்றே எல்லோரும் பேசிக்கொண்டனர். நீண்டகாலமாகத் தூசிபிடித்துக் கிடந்தது அந்த வீடு.

பின்னர் அது போராளிகளின் முகாமாக மாறியது. அத்துடன் வீடும் வனப்புப் பெற்றது. ஆள்களின் கும்மாளமும் கலகலப்புமாக வீடு மாறியது. அயலவர்கள்கூட அவர்களுடன் கதைப்பதற்காக அடிக்கடி அந்த வீட்டிற்குச் சென்றனர்.

ஒரு நாள் எல்லோரும் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. அதன் பின்னர் அந்த வீட்டில் ராணுவத்தினரும் இருந்திருக்கலாம். ஊரிலேயே பிரமாண்டமான வீடல்லவா? எப்படியோ உடைந்து இப்படி வெறுந்தரையாகி விட்டது. சற்றுத் தள்ளி நீளமாகச் செல்லும் மண் அணைக்கு உரமான உள்ளீடாக அந்த வீடு மாறி விட்டது.

அந்த நிலத்தைப் பாருங்கள்! ஒரு சந்ததி நின்றுலாவிய பாதச்சுவடுகள் இதிலே புதைந்திருக்கிறது, தேடுங்கள், தயவு செய்து.

*0*

*(சஞ்சீவி: 13-09-1997)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடவன் நடை

நிலம் வெளுக்கவும் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வாசலில் அம்மா "முழுவியளம்" பார்த்து வழியனுப்பினாள். யாழ்ப்பாண நகரம் ஏழு மைல் தொலைவிலுள்ளது. எதிர்க்காற்றை வலித்துச் செல்ல வேண்டும். அங்கிருந்து முதல் பஸ்ஸில் போனால்தான் பருத்தித்துறையிலிருந்து அன்றைக்கே திரும்ப முடியும்.

வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு ஏறும் பாதை மூடப்பட்டு விட்டதால், வீடுகளுக்கிடையே ஏற்படுத்திய புதிய ஒற்றையடிப் பாதையாலேயே பயணங்கள். கிளியண்ணை வீட்டின் கேற்றைத் திறந்து கொண்டு இவன் போகும்போது, தூக்கக் கலக்கத்துடன் படியில் அமர்ந்திருந்த அவரது மகன் பெயர் சொல்லி அழைத்தான். இவன் திரும்பிச் சிரித்துவிட்டுச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியிலேறி தடையணையருகே வந்தபோது வரிசையில் நிறையப்பேர் காத்திருந்தனர். மரக்கறிச் சுமையும் வாழைக்குலைகளுமாக விவசாயிகள்தான் அதிகம்.

ஏழு மணிக்குப் பாதை திறக்கப்பட்டது. சைக்கிளை வேகமாக மிதித்தான். வீதியில் மெல்ல மெல்ல ஆட்கள் தலைகாட்டத் தொடங்கியிருந்தனர். இராணுவ ரோந்து அணியொன்று இருகரைகளாலும் சீரான இடைவெளியில் சென்று கொண்டிருந்தது. இடையில் எதிர்ப்பட்ட முகாம்களில் இறங்கி, சைக்கிளை உருட்டியபடி போய் பின் ஏறிச் சென்றான்.

நகரத்து நுழைவாயில் தடையரணிலும் நிறையக் கூட்டமிருந்தது. அரச ஊழியர் வரிசையிற் சென்றதால் விரைவாகவே சோதனையிடப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டான். உள்ளேயும் பல இடங்களில் இறங்கி ஏறிச் செல்ல வேண்டியிருந்தது. பாதுகாப்பு நிலையமொன்றில் சைக்கிளை விட்டுவிட்டு, பஸ் நிலையத்துக்கு வந்தபோது பஸ்ஸைத் தவற விட்டிருந்தது தெரிந்தது. இரண்டு மணி நேரங் கழித்தே அடுத்த பஸ். காலை உணவை முடிப்பதற்காக இவன் கடையொன்றுக்குள் நுழைந்தான்.

திரும்பி வந்தபோது மினிபஸ்ஸொன்று நின்றது. எட்டரைக்குப் புறப்படுமென்றார்கள். இவனைப்போல - அரச பேருந்தைப் பார்த்து விட்டு பலரும் ஏறிக்கொண்டனர். பஸ் புறப்பட எட்டே முக்காலாயிற்று.

வின்ஸர் சந்தியில் இறங்க வேண்டியிருந்தது. இவன் ஒன்று என எண்ணிக் கொண்டான். சோதனைச் சாவடியில் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு சற்றுத் தள்ளிப்போய் மற்றவர்களுடன் நின்றுகொண்டான். பஸ் வந்து எல்லோரையும் ஏற்றிப் புறப்படுகையில் கையைக் காட்டியபடி பெண்ணொருத்தி - அறுபது வயதிருக்கும் - அவசரமாக ஓடி வந்தாள். பருத்த உடலைத் தூக்கி அவள் வருவது சுவாரஸ்யமாய்ப் பட்டது இவனுக்கு. யாரையோ திட்டியபடி ஏறிக்கொண்டாள்.

இவனுக்கருகே கைக்குழந்தையுடன் இருந்தவளைக் கண்டுவிட்டு அவளருகே வந்து “எடி கலாப்பெட்டை” என்றாள். அவள் சிரித்தபடி அழைத்து இவனுக்கும் தனக்குமிடையில் அமர்த்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுக் காலையில் வந்து சுவிஸிலிருக்கும் தனது மகனுடன் ரெலிபோன் கதைக்கப் பதிவு செய்து விட்டு இரவெல்லாம் விழித்திருந்து "கோல்" கிடைக்காததையும் அப்பெண் புலம்பித் தீர்த்தாள். அடிக்கடி கோதாரி விழுவான்கள் எனத் திட்டினாள். அடுத்த சென்றியில் இறங்கினார்கள். அறுபது வயதுக்காரி திட்டியபடி இறங்காமலே இருந்தாள். இவன் இரண்டு என எண்ணிக் கொண்டான். சோதனை முடிந்து அப்பால் போய் நின்றபோது கொண்டக்டர் ஓடி வந்தான்.

" ஆற்றையப்பா அந்த உரைப்பை?"

ஒருவர் தன்னுடையதுதானென்றார்.

" ஓடப்பா கெதியா... ஆமிக்காரன் கேக்கிறான். கழட்டிக்காட்டு" மீண்டும் அனைவரும் ஏறிக்கொள்ளப் பஸ் புறப்பட்டது. கல்வியங்காட்டில் எல்லோரும் இறங்கவேண்டுமென்று ட்றைவர் நச்சரித்தான். அறுபது அவனை ஏசியபடி இறங்கினாள். உரப்பைக்காரன் இம்முறை பையைச் சுமந்துகொண்டு வந்தான். பஸ் புறப்படும்போது இரண்டு இராணுவத்தினரும் ஏறி புட்போட்டில் நின்று கொண்டனர். இவனருகே இருந்தவளின் பிள்ளை அவர்களைப் பார்த்து வீரிட்டு அலறியது.

அறுபது அவளிடமிருந்து குழந்தையை வாங்கிப் பலத்து "ஆராரோ" சொன்னாள். அது மேலும் அலறியது. மீண்டும் குழந்தை அவளிடம் போனது. இப்போது முதல் முறையாக அவள் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்த சென்ரியில் இராணுவத்தினர் இறங்கிக் கொண்டனர். பெண்ணொருத்தி கையில் ஒரு குழந்தையுடன் ஏறினாள். மறுகையில் பெரிய பையொன்றையும் வைத்திருந்து ஏறமுடியாமல் தத்தளித்து தூக்கித் தருமாறு குரல் கொடுத்தாள். ஒருவன் பையைத் தூக்கி உதவினான். பின்னால் ஐந்து பிள்ளைகளும் ஏறிக்கொண்டனர். மூத்த பையனுக்கு ஒன்பது வயதிருக்கும். ஒரு பெண் பிள்ளையைத் தூக்கி வைத்திருந்தான். ஓரிரு வயது இடைவெளிகளில் பிறந்த பிள்ளைகளாய் இருக்க வேண்டும்.

இடமில்லாமல் தவித்தாள் அப்பெண். இவன் எழுந்தபோது-
"நீங்கள் இருங்கோ அவ இருந்திட்டா" என்றாள் இளம்பெண். பிள்ளைகளையும் கூப்பிட்டு பைகளையும் வைத்து அந்த இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் அடைத்திருந்தாள் அப்பெண். பக்கத்தில் இருந்தவர் சினத்து ஏதோ சொல்லி ஏசினார். அவளும் பதிலுக்கு ஏதோ சொல்லிச் சமாளித்தாள். கொண்டக்டர் காசு வாங்கினார்.

"என்ன அநியாயம்... சீ.ரீ.பி.யிலை போயிருக்கலாம்" என்றாள் பெண்.

"போயிருக்கலாந்தானே" என்று சொல்லிவிட்டு, தாள்காசை வாங்கி விரல்களுக்கிடையே புதைத்துக் கொண்டான்.

புத்தூர் கழிந்து இறங்கி ஏறியபோது இவனது சீற்றை வேறொரு பெண் ஆக்கிரமித்திருந்தாள். இவனைப் பார்த்துவிட்டு தெரியாதது போல வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். இளம் பெண் இவனை நோக்கி பரிதாபந் தொனிக்க முறுவலித்தாள்.

வாகனம் பெரும்பாலும் நிறைந்துவிட்டது. இந்த நெரிசலுக்கிடையேயும் ஏழெட்டுப்பேர் ஏற்றப்பட்டனர். அவர்களது உடைகள் மங்கல நிகழ்வொன்றிற்குச் செல்வதைப் பறைசாற்றின.

நேரே முன்சீற்றில் இன்னும் திருமணக்களை மாறாத இளங்குடும்பமொன்று இருந்தது. இருவரும் கிறக்கத்துடன் ஒருவரையொருவர் நோக்கியும் சீண்டியும் கொண்டிருந்தனர். இவன் திரும்பி இளம்பெண்ணைப் பார்த்தான். நிமிர்ந்து பார்த்தவள் இவன் பார்ப்பதைக் கண்டுவிட்டுச் சிரித்தாள். பின் தலைகுனிந்தாள்.

"எங்கை போட்டு வாறியள்?" இவன் கேட்டான்.

நிமிர்ந்து வினாக்குறிப்புடன் சிரித்தாள். இவன் மீண்டும் கேட்டான்.

"போன்லை கதைச்சிட்டு வாறன்"

"ஆரோடை...?"

"அவரோடை"

"எந்த நாடு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜேர்மனியிலை நிண்டவர். இப்ப போடர் கடந்து சுவிஸிக்கை போட்டாராம். அதாலை அவரோடை கதைக்க முடியேல்லை"

"இரவு எங்கை தங்கினீங்கள்...?"

"ரெலிபோன் கதைக்கிற இடத்திலைதான். நிறையப்பேர் இருந்தினை. நித்திரையுமில்லை. நுளம்பு வேறை. பிள்ளையோடை சரியான கரைச்சல் பட்டிட்டன். இனி வீட்டை போய்த்தான் எல்லாம்" சிரித்தாள் அவள்.

வல்லையில் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் வாங்கிக் கொண்டனர். பதிலுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட அட்டையொன்றைத் தந்தனர். மீண்டும் பயணம். சனநெரிசலில் வியர்த்துக் கொட்டியது.

இந்த நேரம் பார்த்து "காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்" என்ற பாடலைப் போட்டு எரிச்சலூட்டினான் ட்றைவர். பிறகு இவன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

மந்திகைக்கருகே இறங்கி ஏறும்போது இதுதான் கடைசி என்றான் கொண்டக்டர். இவன் பதினொன்று என்று எண்ணிக் கொண்டான்.

பருத்தித்துறையில் இறங்கி வழக்கமான கடற்கரைப்பாதை மூடப்பட்டுள்ளதால் குச்சொழுங்கைகளுக்கால் வளைந்தும் நெளிந்தும் ஒரு மைல் தூரம் சென்று, அந்த வீட்டிற்குள் நுழைந்ததும் "கொஞ்சம் தண்ணி தாங்கோ" என்றான் ஆவலுடன், துக்கம் விசாரிக்காமலே.

*

சுகதுக்க விசாரிப்புகள், நாட்டுநிலைமை, அரசியல் எதிர்காலம் பற்றிய பகிர்வுகள் என ஒரு மணி நேரமிருந்து விட்டு ஒன்றரை மணிக்குப் புறப்பட்டான்.

"ஒரு மணித்தியாலம் இருக்கவே வந்தனீர்?" எனக் கனகண்ணை கேட்டார். இவன் பதிலேதும் சொல்லாமல் சிரித்துவிட்டுப் புறப்பட்டான்.

பருத்தித்துறையில் பஸ்ஸேதுமில்லை. இப்போதுதான் பஸ் சென்றது எனக் கூறினார்கள். இவனைப் போலவே வேறுமிருவர் சோர்வு மேலிட நின்றனர். பக்கத்தில் ஒரு சிறு வான் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனைக் கண்டதும் "அண்ணை யாழ்ப்பாணமா?" என்றான் ஒருவன். அவன்தான் வானின் சொந்தக்காரனாயிருக்க வேண்டும். இவன் தலையசைத்தான்.

"அண்ணையும் அம்பது ரூபா தருவார். அரை மணித்தியாலத்தாலை போவம்"

ஐம்பது ரூபா என்றதும் இவன் ஏற்கவில்லை. அவன் பல்வேறு நியாயங்கள் சொன்னான். விவாதப்பட்டுக் கொண்டிருந்தபோது ஆபத்பாந்தவனாக ஒரு சீ.ரீ.பி. பஸ் வந்தது. இவனும் மற்றவர்களும் அதில் ஏறிக்கொண்டனர்.

இரண்டரைக்கு பஸ் புறப்பட்டது. இடையிடையே பலரும் ஏறிக்கொண்டனர். பல்கலைக்கழகப் பிள்ளைகள்தான் அதிகம். வல்லை வெளியில் அட்டையைக் கொடுத்து விட்டு அடையாள அட்டையை வாங்கிக்கொண்டான். ஆவரங்காலில் இராணுவத்தினர் சிலரும் ஏறிக்கொண்டனர்.

"டேய், சிறீ!" குரல் கேட்டு இவன் திரும்பிப் பார்த்தான். இவனோடு சிறுவகுப்பில் படித்த நண்பன். ஆவலோடு விசாரித்தான். இவன் அவனை அழைத்து அருகமர்த்தினான். அவன் சுவாரஸ்யமாய்க் கதைத்துக் கொண்டே வந்தான். திடீரென பஸ் கிறிச்சென பிறேக் போட்டு நின்றது. என்னவெனப் பலரும் பதைப்புடன் பார்த்தனர். இராணுவத்தினரில் ஒருவரது தொப்பி கழன்று விழுந்து விட்டமை தெரிய வந்தது.

"அட இதே" நண்பன் சலிப்புடன் சிரித்தான்.

யாழ்ப்பாணம் வந்து சேர ஐந்தே முக்காலாகி விட்டது. இந்நேரம் "பண்ட்" மூடப்பட்டிருக்கும். இனி பலாலி வீதி வழியாகவே செல்ல வேண்டும். பார்க்கில் இவனது சைக்கிள் மட்டுமே நின்றது. அங்கு வேலைசெய்யும் கிழவன் இவனையே எதிர்பார்த்திருந்ததாகக் கூறினான். இவன் காசைக் கொடுத்துவிட்டு சைக்கிளேறி மிதித்தான். ஒரு நாள் பொழுது வீணாகி விட்டதாக இவன் சலிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆரியகுளச் சந்தியைத் தாண்டும் போது பெருமாள் கோயிலடிப் பக்கமாக வேட்டுச் சத்தங்கள் கேட்டன. சென்றிகளுக்குள் நின்ற படையினர் துப்பாக்கிகளுடன் வெளியே வந்து அங்குமிங்குமாக நிலையெடுத்தனர். அந்த வழியால் செல்லாததற்காகத் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சியபடி இவன் வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினான்.

வீட்டையடைந்தபோது நன்றாக இருண்டிருந்தது. வாசலில் அம்மா நின்றாள்.

"ஒரு இடத்துக்குப் போனா வேளைக்கு வாறேல்லையே! நானிஞ்சை நெஞ்சிடிச்சுக் கொண்டு நிக்கிறன்" என்று சொல்லி மேலும் ஏசினாள். இவன் வெறுமையுடன் சிரித்தபடி சைக்கிளை நிறுத்தினான். சோர்வுடன் போய் குந்தில் அமர்ந்து கொண்டான்.

*0*

*(சஞ்சீவி: 05-07-1997)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கும்

வருசம் பிறந்திட்டுது. இது புதுசுதான். இதப்போலை ஒவ்வொரு வருசமும் புதுசுதான். ஆனா, பஞ்சாங்கந்தான் அதை அறுபதாய்ப் பிரிச்சு, அறுபது பேர் வைச்சு, அறுபது வருசத்துக்கொவ்வொண்டாய் வருசம் திரும்பத் திரும்ப வருமெண்டு சொல்லுது.

இந்தப் பஞ்சாங்கத்தைப் பற்றியே ஆரும் இப்ப நினைக்கிறேல்லை. பஞ்சாங்கங்கள் கூட ஒவ்வொண்டும் ஒவ்வொரு போக்கிலை போய்க் கொண்டிருக்குதுகள். அதாலை, அது கூட இப்ப பெரிசாய்த் தெரியுறேல்லை. நான் பிறந்ததிலையிருந்து இப்ப வரைக்கும் பதினெட்டு வருசத்தைக் கண்டிட்டன். இருந்தாலுமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா ஒவ்வொரு வருசமும் புதுப் புதுச் சட்டையள் எடுத்துத் தருவா. அக்கம் பக்கத்து வீடுகளிலை பொங்கல் நடக்கும். கோவிலுகளிலை திருவிழாக்கள் நடக்கும். நானும் தங்கச்சியும் புதுப் புதுச் சட்டையளோடை கோவிலுகளுக்கும் சொந்தக்கார வீடுகளுக்கும் போவம். வெடி கொளுத்தியும் கிட்டி, கிளித்தட்டு விளையாடியும் திரிவம். அவ்வளவுதான்.

எனக்குச் சின்னனாய் இருக்கேக்கை ஒண்டும் தெரியாது! அம்மா உடுப்பு எடுத்துத் தருவா. பலகாரங்கள் சுட்டுத் தருவா. பூவாணம் வெடியெல்லாம் வாங்கித் தருவா. எங்களுக்குச் சந்தோசமாயிருக்கும். துள்ளிக் கொண்டு திரிவம்.

அம்மா கூட நாளிலை வெள்ளைச் சீலைதான் உடுப்பா. மாமி மாதிரியோ, மற்றப் பெரிய பொம்புளையள் மாதிரியோ அம்மா சிவப்புப் பொட்டுப் போடமாட்டா. கழுத்திலை, கையிலை நகை நட்டொண்டும் போடமாட்டா. ஒரு இடத்துக்கும் வரவும் மாட்டா.

கேட்டால் "நான் வரேல்லை" என்பா. "ஏன் வரேல்லை?" எண்டால் "அப்பிடித்தான்" என்பா. நாங்கள் நெடுக ஆய்க்கினைப்படுத்தினால் "நான் வரக்கூடாது. அப்பா இல்லாட்டால் நான் கோயில் குளமொண்டுக்கும் போகக் கூடாது. நீங்கள் கவனமாய்ப் போட்டு வாங்கோ" என்பா. அப்பா சாமியிட்டைப் போயிட்டாரெண்டுதான் அம்மா சொன்னா.

நான் கொஞ்சம் வளந்தாப் பிறகுதான் தெரியும் அப்பா செத்ததும், அப்பா இல்லாமல் அம்மா கஷ்ரப்பட்டதும், அந்த நேரம் வெளியிடத்திலையிருந்து இஞ்சை வந்து வேலை செய்த பொம்பிளைப் பிள்ளையளுக்கு அம்மா சமைச்சுக் குடுத்ததும், அந்த வருமானத்திலை எங்களை வளர்த்ததும். இன்னும்... இன்னும்...

அதுவரையிலை அந்த அக்காமார் வருவினை, சாப்பிடுவினை, ஏதாவது கேட்பினை, போவினை. அவ்வளவுதான்!

இப்ப நினைக்கேக்கை மனதுக்குள்ளை ஏதோ குமையுது.

"அவள் நெருப்புத் திண்டு உங்களை வளத்தவள். நீங்கள் ஏதோ அதை உணந்து படிச்சு ஒரு தொழில்துறையிலை சேந்திட்டியளெண்டால்தான் அவள் பாடுபட்டதுக்குப் பலனாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு நாகம்மா ஆச்சி நெடுகச் சொல்லுறது இப்பதான் முழுசாய்ப் புரிஞ்சிருக்குது.

இனியாவது நாங்கள் அம்மாவைக் கஸ்ரப்படுத்தக் கூடாது எண்டு என்னை நினைக்க வச்சிருக்குது.

வருசம் பிறந்தால் ஊரெல்லாம் வெடி வெடிக்கத் தொடங்கி விடும். வருசம் பிறக்க முதலே வெடி வெடிக்கத் தொடங்கி, வருசம் பிறக்கிற நேரம் உச்சக் கட்டத்திலை நிக்கும். மொத்தமாய் வெடிச் சத்தம் ஓய ஒரு கிழமையாவது செல்லும்.
வருசப் பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, கிறிஸ்மஸ் எண்டு வந்தாலே போதும்! எங்கடை ஒழுங்கையெல்லாம் வெடி வெடிச்ச கடுதாசித் துண்டுகள் மழை காலத்து ஈசல் இறகுகள் போலை குவிஞ்சு கிடக்கும். சின்னச் சின்னத் தகரப் பேணியள் எல்லாம் சப்பையாய்ப் பிரிஞ்சு போய்க் கிடக்கும். பட்டணசபைக்காரரர் பார்வையிலை படாவிட்டால் அதுகள் மாதக் கணக்காய்க் குவிஞ்சு போய்க் கிடக்கும்.

ஒரு சில வீட்டுக்காரரர்கள் மட்டும் தங்கடை வீட்டுக்கு முன்னாலை வீதியில் குவிஞ்சு போய்க் கிடக்கும் குப்பையளைக் கூட்டி, தங்கடை எல்லை கழிய வீதியிலையே குவிச்சு விடுவினை.

வருசம் பிறக்க முதலே அம்மா எங்களுக்குச் சொல்லிப் போடுவா.

"வருசப் பிறப்பா நாத்துக் குழப்படியேதும் செய்யக்கூடாது. சண்டை பிடிக்கக்கூடாது. அழக்கூடாது. விளங்குதோ? வருசப் பிறப்பிலை குழப்படி செய்தால் அந்த வருசம் முழுக்க அதைத்தான் செய்வீங்கள். அதை விட்டிட்டு நல்ல பிள்ளையளாய் இருக்க வேணும். நல்லாய்ப் படிக்க வேணும்... விளங்குதோ?" எண்டு அவ சொல்லச் சொல்ல நாங்களும் ஓமெண்டு சொல்லுவம்.

அம்மா சொன்னபடி நடக்க வேணும் எண்டுதான் விடிய எழும்பினவுடனையே நினைப்பம். ஆனா, அண்டைக்கு ஏதோ ஒரு விதத்திலையெண்டாலும் குழப்படி விடாமலிருந்ததாய் ஞாபகமில்லை.

நான் கொஞ்சம் வளந்தாப் பிறகு வருசப் பிறப்பு நாளிலை கொஞ்ச நேரம் படிக்கிறது... கொஞ்ச நேரம் விளையாடிறது... கொஞ்ச நேரம் பாட்டுப் பாடுறது எண்டு கொஞ்சக் கொஞ்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையளைச் செய்து கொண்டிருப்பன். ஏனெண்டால் வருசம் முழுவதும் அப்பிடிச் செய்யலாம் எண்ட நம்பிக்கையிலை!

இந்த முறையும் ஏதோ ஒரு வருசம் பிறந்திட்டுது. அந்த வருசத்தின்ரை வடமொழிப் பெயர் மனசுக்கை நிக்குதில்லை. இப்ப நினைக்கிற போதுதான் தமிழ் எவ்வளவு மொழியளைத் தனக்குள்ளை இரவல் வாங்கி வச்சிருக்கெண்டு தெரியுது. அதாலைதான் நாங்களும் இண்டைக்கு நடுத்தெருவிலை நிக்கிறமோ?

இப்ப கொஞ்சக் காலமாய் வருசப் பிறப்புகள் சோபையில்லாமலேயே வந்து போகுதுகள். வெடி கொளுத்திறேல்லை; பொங்கிப் படைச்சு, புது உடுப்புகளோடை உல்லாசமாய்த் திரியுறேல்லை. ஒவ்வொரு வீட்டிலையும் ஒவ்வொரு பிரச்சினையள்! ஒரு வீட்டிலை பொம்பர் அடிச்சு, வீட்டிலை சமைச்சுக் கொண்டிருந்த பொம்பிளை செத்திருப்பா.

ஒரு வீட்டிலை ஷெல் விழுந்து இன்னொருத்தர் செத்திருப்பார். இன்னொண்டிலை அடுத்த நேரக் கஞ்சிக்கு வழியில்லாமல், உலருணவு நிவாரணத்தை மட்டும் பாத்துக் காத்திருப்பினை.

இப்பிடியே வீட்டுக்கு வீடு வாசல் படியாய்ச் சனம் ஒவ்வொரு பாடாய் இருக்கேக்கை வருசமென்ன... தீபாவளியென்ன...

இந்த வருசம் இறுக்கம் கொஞ்சம் கூட. சாமானுகளின்ரை விலையள் சாதாரணமாய் எங்களைப் போலை வறிய சனங்கள் எட்டிப் பிடிக்கேலாத அளவுக்கு உயர்வாயிருக்குது. இப்பவெல்லாம் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் சாமான்களின்ரை விலை ஏறிக் கொண்டே போகுது. கொஞ்சம் பிரச்சினையெண்டு கேள்விப்பட்டாலே அந்தண்டு சாமான்கள் - முக்கியமாய் மண்ணெண்ணெய்- காணக் கிடைக்காது.

நாங்கள் ஏதாவது பிரச்சினை இருக்கோ இல்லையோ எண்டதைப் பேப்பரைப் பாக்க முன்னமே மண்ணெண்ணெய்க் கடையைப் பார்த்தாலே தெரிஞ்சு போகும். பிறகு அடுத்த நாள் இருபதோ முப்பதோ ரூபாயாலை சாமானுகளின்ரை விலை கூடியிருக்கும்.

இந்த முறை சனத்தின்ரை கை நல்லாய் வறண்டு போச்சுது. அதாலை புது வருசம் எண்டது கூடப் பல பேருக்குத் தெரியாமலே போச்சுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டிரண்டு வெளிநாட்டுப் பணக்காரற்றை வீடுகளிலைதான் வருசத்தின்ரை அடையாளத்தைக் காணேலும்.

எங்கடை வீட்டிலையும் இந்த முறை வருசப் பிறப்புக் கொண்டாடேல்லை. பொங்கலுமில்லை. புது உடுப்பும் எடுக்கேல்லை. விடிய வெள்ளணவே ஐயரிட்டை ரண்டு ரூபா தெட்சணை குடுத்திட்டு, ஒரு செம்பு மருத்துநீர் வாங்கியந்து தோஞ்சிட்டு, அக்கம் பக்கத்திலையுள்ள கோவில்களுக்குப் போட்டு வந்ததோடை சரி.

ஆனால், மாமா வீட்டுக்காரர் வருசப் பிறப்புக் கொண்டாடினவை. அவையிட்டை கனடாப் பணமிருக்குது. அதாலை விதம் விதமாக உடுப்புக்களைப் போட்டுக் கொண்டு வந்து போச்சினம்.

இதைப் போலைத்தானே நாங்களும் விதம் விதமான உடுப்புக்களைப் போட்டுக் கொண்டு வெடியளையும் பூவாணங்களையும் கொளுத்திக் கொண்டு திரிஞ்சனாங்கள். ஆனா, இந்தப் பிரச்சினையளாலை இப்ப இதையெல்லாம் எங்களாலை கொண்டாடேலாமல் போச்சுது.

எண்டைக்கோ ஒரு நாளைக்கு இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ந்து நாங்கள் இதுகளையெல்லாம் சந்தோசமாய்க் கொண்டாடுவம்தானே எண்டு நான் எனக்குள்ளை ஆறுதல் பட்டன். வீட்டு நிலைமை புரிஞ்சதாலை என்னாலை பேசாமலிருக்க முடிஞ்சுது. ஆனால், தங்கச்சிக்கு அது புரியேல்லை. அவள் சின்னப் பிள்ளைதானே! அதாலை "மச்சாளவையெல்லாம் புதுப் புதுச் சட்டையளோடை வரேக்கை நான் மட்டும் இந்தப் பழசோடை நிக்கிறதே?" எண்டு அம்மாவோடை சண்டைக்குப் போனாள். அவள் அப்பிடிக் கேக்கேக்கை கண்ணீரும் வந்திட்டுது. அதைப் பார்க்க எனக்கும் பரிதாபமாய்த்தான் கிடந்தது. அதை விட அம்மாவைப் பார்க்க...

அம்மாவுக்கும் கண் கலங்கி விட்டுது. அவளுக்குப் பதிலொண்டும் சொல்ல ஏலாமல் நிண்டா. என்னாலை கூடத்தான் எதுவும் செய்ய முடியேல்லை. பிறகு நான்தான் அவளைக் கூப்பிட்டு "புது வருசத்திலை புது உடுப்புப் போடுறதாலை ஒண்டும் வந்திடாது. நாங்கள் எங்கடை மனங்களைப் புதுசா... வெள்ளையா வச்சிருந்தாலே போதும். அதுதான் உண்மையான புது வருசம்" எண்டு சொன்னன். ஆனால், அவள் சமாதானம் அடையேல்லை.

என்னாலையுந்தான் அவளுக்கு ஒரு உடுப்பை எடுத்துக் குடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியேல்லை. அம்மாதான் அப்பா இல்லாதவ. அவவாலை என்னதான் செய்யேலும்? பாழாய்ப் போன ஆமியள் அப்பாவைச் சுடாமல் இருந்திருந்தால் இந்தப் பத்து வருசத்திலையும் எவ்வளவு முன்னேறியிருப்பம்? இப்பதான் எனக்கு கொஞ்சம் உலகம் பிடிபடுகுது. இனி நான் கொஞ்சம் கொஞ்சமாய் வீட்டுப் பாடு பயனுகளைப் பார்க்க வேணும்.

வீணாய் நாளுகள்தான் ஓடிப் போகுது. ஓடி ஓடி அது இண்டைக்கு என்னட்டையிருந்து பதினெட்டு வருசத்தையும் இழுத்துக் கொண்டு போயிட்டுது. இந்தப் பதினெட்டு வருசத்திலையும் நான் எதையும் உருப்படியாகச் செய்யேல்லை. செய்ய முடியாமல் போச்சுது. இதுக்காண்டி நான் ஆரைக் குறை சொல்லுறது? காலத்தையா?

கடந்த காலங்கள் கசப்பாயே கழிஞ்சு போயிட்டுது. அம்மா கஸ்டப்பட்டுப் படிப்பிச்சா. நானும் படிச்சன். இடையிலை பிரச்சினையள்... மனக் குழப்பங்கள்... இப்பிடியே காலம் கழிஞ்சு போக திடீரெண்டு பரீட்சை அறிவிப்பு வரும். திடீரெண்டு நிக்கும். பிறகு கொஞ்சக் காலம் செல்லத் திரும்பவும் பரீட்சை அறிவிப்பு வரும். பரீட்சைக்கு ஆயத்தம் நடக்கும். அந்த நேரம் ஊரடங்குச் சட்டமும் அமுலுக்கு வரும். ஊரடங்குச் சட்டம் அமுலிலை இருக்கேக்கையே பரீட்சையும் நடக்கும்.

இதுக்குள்ளை கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பாய்ப் போனது போலை எங்கடை மூளைக்குள்ளை கிரகிச்சு வைச்சவையெல்லாம் மறந்து போயிடும். பரீட்சையிலை எதிர்பார்த்த றிசல்டும் கிடைக்காது.

வரும் வரும் எண்டு றிசல்டை எதிர்பார்த்தும் நாங்கள் களைச்சுப் போனம். இனி அது வந்தாலும் என்னென்ன சோதினையளுடன் வருமோ தெரியேல்லை. அது வரைக்கும் இனிமேல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

வருசப் பிறப்பாநாத்து தங்கச்சிக்கு ஒரு உடுப்பு எடுத்துக் குடுக்கக் கூட வக்கில்லாத நிலையிலை நான் றிசல்டைப் பார்த்து, அது வந்தாப் பிறகு ஒவ்வொரு மனக் கோலங்களைக் கட்டிக் கொண்டிருக்கேலாது.

இவ்வளவு காலந்தான் பேசாமல் இருந்திட்டன். இனியாவது உருப்படியாய் ஏதாவது செய்ய வேணும். இந்தப் படிப்பு இண்டைக்கிருக்கிற நிலையிலை எனக்கு என்னத்தைத் தந்திட்டுது? அப்பா இல்லாமல் அம்மா எங்களை வளர்த்து ஆளாக்கின பிறகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்பிடியே மரக்கட்டையாய் இருந்து என்ன செய்யுறது?

இண்டைக்கிருக்கிற நிலமையிலை படிப்பும், படிப்புக்கேற்ற தொழிலும் எண்டிருந்தால் அடுத்த வருசப் பிறப்புக்குள்ளை காணாமல் போயிடுவம்.

அடுத்த வருசப் பிறப்பிலையாவது நான் கட்டாயம் தங்கச்சிக்கு ஒரு உடுப்பு எடுத்துக் குடுப்பன். உடுப்பு எடுத்துக் குடுக்கிறதோடை மட்டும் எங்கடை பிரச்சினை தீர்ந்து போகுமா?

*0*

(வெளிச்சம்: புரட்டாதி 1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகை

இந்த இடத்தில் இப்போது பல குடிசைகள் முளைத்து விட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு புகையிரதப் பெட்டிகள் போல இந்தப் பாதை நீளத்திற்கு அணிவகுத்து நிற்கின்றன.

பனை வடலி முடக்கைக் கடந்து வடக்குத் தெற்காக நீண்ட மண் பாதையில் ஏறிய கந்தையர் திருப்பத்தில் நிமிர்ந்து பார்த்தார். தனது குடிசை புகையிரத எஞ்ஜின் போல நிமிர்ந்து நிற்பது தெரிந்தது.

இணுவில் சீவுகாம்புப் புகையிலைச் சுருட்டு அரைவாசி எரிந்து அணைந்திருந்தது.

"இந்தமுறை வல்லியன் ஏமாத்தி வேறையெதையோ தந்திட்டான்"

மடிக்குள் இருந்த தீப்பெட்டியை எடுத்து மேற்கே திரும்பி நின்று சுருட்டை மூட்டினார். இந்தக் குடிசைகள் முளைத்தும் இரண்டு போகம் கழிந்திருக்கும் என அவர் எண்ணினார். மாவிட்டபுரத்திலே புகையிரதப் பாதையைப் பார்த்த படி இருந்த வீடும் தோட்டமும் இல்லாமல், அவற்றை அப்படியே விட்டு விட்டு வர வேண்டியதில் அவரால் எதுவுமே செய்ய முடியாமல் போய் விட்டது.



292717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு வயதிலிருந்தே கரிக் கோச்சியையும் யாழ்தேவியையும், இன்ரசிற்றியையும் கூட்ஸ் வண்டிகளையும் இன்னும் எத்தனையோவற்றையும் அந்த நேரிய இரும்புப் பாதையில் கண்டு விட்ட அவருக்கு அதன் மீதே வாழ நேர்ந்து விட்டமை தவிர்க்க இயலாததாகி விட்டது.

அகதி வாழ்க்கை எப்படியெல்லாம் மனிதர்களை மாற்றி விட்டது! கௌரவங்கள், பிடிவாதங்கள், மனப்பாங்குகள் எல்லாவற்றையும் நிலைமாற்றி, வேரோடு பிடுங்கி எறிந்து விட்டது. வாழ்வில் எத்தனையோ சுழிப்புக்களைத் தோன்றச் செய்து விட்டது.

கடைசிக் கட்ட வாழ்வின் நிலைபேறாக நம்பிக்கை விதைகள் மேலோங்கி முளை விடும் போது மனித மனப்பாங்குகளும் பிறழ்ந்து விடுகின்றன.

கந்தையரின் வயதையொத்த பனைமரம் இப்போது முப்பது அடிக்கு மேல் வளர்ந்து விட்டது. ஏதோவொரு வருடத்தில் இலுப்பைப் பூ பூத்த காலத்தில் பிறந்த அவருக்கு எண்பது வயதென நிவாரண மட்டையில் போட்டிருக்கிறார்கள். தலைமயிரும் வெண்மையாகி, உடலிலும் முகத்திலும் சுருக்கங்கள் விழுந்து விட்டன. நிமிர்ந்து கொஞ்சத் தூரம் நடந்தாலும் கால்கள் வலிக்கின்றன.

"என்ன கந்தையாண்ணை.. வெய்யில் எப்பிடி?" இங்கிலண்ட் றலி சைக்கிளைப் பத்திரமாக உருட்டி வந்த ரத்தினம் கேட்டான்.
"காலுக்க உழைவிருக்கடா ரத்தினம். முதுகுக்கையும் பிடிக்குது. அதுதான் உந்த டிப்பஞ்சறிக்குப் போட்டு வாறன். அங்கையும் மருந்துகளில்லை. துண்டெழுதித் தந்து கிடக்குது. வெளியிலை வாங்கட்டாம்"

"ஓ... இனியென்ன? போற காலந்தானே... பூட்டப் பிள்ளையையும் கண்டிட்டாய்தானே!"

ரத்தினத்தின் கதைக்கு மறுமொழி சொல்லாமல் நடந்தார் கந்தையர்.

நேற்றுப் போலிருக்கிறது. அடிபாடு தொடங்கியும் மூன்றாண்டுகளுக்கும் மேலாகி விட்டது. பலாலியில் சண்டை தொடங்கி, எல்லோரும் வீடுகளை விட்டு ஓடிக் கொண்டிருந்த வேளை, மூத்த மகன் குணத்தின் பெடியன் மச்சாள் பெட்டை ஒன்றைக் கூட்டிக் கொண்டு ஓடிப் போனதும், அந்த ஓட்டத்திற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகள் இரண்டையும் தேடி அலைந்ததும், பின்னர் இருவரையும் பிடித்து வந்து எழுத்து எழுதி வைத்ததும்... எல்லாம் நேற்றுப் போல் இருக்கிறது.

அதற்குள் அவர்கள் இரண்டு பூட்டப் பிள்ளைகளையும் தந்து விட்டனர். பூட்டப்பிள்ளைகளுக்கென வாங்கி வந்த எள்ளுருண்டை கிடக்கிறதா என மடியைத் தடவிப் பார்த்தார்.

"மெய்யே ரத்தினம்... இந்தப் பாதையிலை எத்தினை ரயிலைக் கண்டிருப்பம். எத்தினை பேருக்குக் கை காட்டியிருப்பம். வெள்ளைக்காரன் காலத்திலையிருந்து... உனக்குத் தெரியுமே எங்கடை தோட்டத்துக்கு முன்னாலை இளம் பெடியன் ஒருதன் கழுத்தைக் குடுத்துச் செத்தவன். அப்பிடியெல்லாம் வாழ்ந்த நாங்கள் கடைசியாய் ரெயில் பாதையிலையே வாழ வேண்டியதாய்ப் போச்சுது"

ரத்தினம் சிரித்தான்.

"உதே இல்லாமல் இருக்கேக்கை இப்பிடி வாழக் கிடைச்சதே பெரிசு"

"அது சரியடா... கடைசியாய் அந்த வளவுக்காரன் வெளிக்கிடு எண்டாப் பிறகு ஒரு சின்னக் குடிசையெண்டாலும் போட இதுதானே உதவிச்சுது"

இங்கே வந்தும் ஆறு மாதமாகி விட்டது. மாவிட்டபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து அளவெட்டியில் தங்கியிருந்த போது அளவெட்டியிலும் பிரச்சினை தொடங்கியது. பின்னர் அங்கிருந்து வந்து கந்தரோடையில் வளவொன்றைத் துப்புரவாக்கி, அதில் குடிசையொன்றை அமைத்தார்கள்.

பனை வடலிகளுக்கிடையே மஞ்சமுன்னாவும் கடுகுநாவல் பற்றைகளும் படர்ந்திருந்த அந்த வெறும் காணியில் அவர்கள் குடிசை போட்ட பின்னர் மேலும் நான்கைந்து குடிசைகள் முளைத்தன.

இரண்டு மாதம் கழிந்திருக்கும். வெப்பமான ஒரு உச்சிப் பொழுதில் காணிச் சொந்தக்காரன் வந்தான்.

"நாங்களும் உங்களைப் போலைதான் இடம்பெயர்ந்து இருக்கிறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் துறையளும் இல்லை. உதைத் திருத்தித்தான் தோட்டம் செய்யப் போறம்" என்றான்.

"இப்பதான் வந்திருக்கிறம். அதுக்குள்ளை என்ன செய்யிறது?" கந்தையர் திகைப்புடன் கேட்டார்.

"என்னைக் கேட்டிட்டோ உதிலை வந்து குந்தினீங்கள்... அடாத்தா வந்து இருந்து போட்டு இப்ப என்ன செய்யிறதெண்டால் நானென்ன செய்யிறது?"

கந்தையரின் நெஞ்சம் சல்லடையாக்கப்பட்டது.

"இஞ்சரும் தம்பி... நாங்கள் அவசரத்துக்கு ஆத்தாக் கொடுமையாலைதான் இதிலை வந்திருந்தனாங்கள். அடாத்தா இருந்ததெண்டு மட்டும் சொல்லிப் போடாதையும்... வீடு, வாசல், தோட்டம், துரவு எல்லாத்தையும் விட்டிட்டு வந்து நிக்கிறம். எங்களுக்கு உங்கடை காணி வேண்டாம்" கரகரத்து ஒலித்தது கந்தையரின் குரல். அவனை ஆழமாய்ப் பார்த்தார்.

"தம்பி, ஒரு அஞ்சு நாள் பொறுத்துக் கொள்ளும். அதுக்கிடையிலை இடத்தை விடுறன்"

"ம்... அஞ்சு நாளைக்குள்ளை இடத்தை விட்டிடுங்கோ"

அவன் போய் விட்டான். இதற்குப் பின்னர் அங்கே இருப்பது நல்லதல்ல என அவர் தீர்மானித்து விட்டார். எங்கு போகலாமெனச் சிந்தித்தார்.

கடைசியாக, சிலிப்பர் கட்டைகள் எதுவுமில்லாமல் பாதை போல விரிந்து கிடந்த இந்த இடத்தைத்தான் தேர்ந்தெடுத்தார். மாலை மங்கி, வானில் நிலவு தோன்றிய பொழுதில் மண்வெட்டியையும், கோடரியையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு பேரப் பிள்ளைகளுடன் வந்து இந்த இடத்தைச் சுத்தமாக்கினார். அடுத்த நாள் கந்தரோடையில் பிடுங்கப்பட்ட குடிசை இந்த இடத்தில் மீள நிர்மாணிக்கப்பட்டது. அந்தத் துரிதமான செயல் அவருக்கு இப்போதும் வியப்பைத் தருகிறது. அவரைத் தொடர்ந்து ரத்தினம், சுப்பு, கனகசபை என ஒவ்வொருவராய் குடிசைகள் அமைத்து, இந்த இடத்தில் இப்போது இருபத்தைந்து குடிசைகள் புகையிரதப் பெட்டிகள் போல நிமிர்ந்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது குடிசை குறுக்காக ஓடும் பிரதான வீதிக்கு அண்மித்ததாக, புகையிரத எஞ்ஜின் போலக் காட்சியளிக்கிறது.

இணுவில் புகையிர நிலையத்தில் மூத்த மகனும் மகளும் குடிசையமைத்து வாழ்கின்றனர்.

குடிசை அண்மித்து விட்டது. வாசலில் கடைசி மகனது சைக்கிள் நின்றது. விறகு வியாபாரத்தை முடித்து விட்டு வந்திருக்கிறான் போலிருக்கிறது. அவன் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் நிற்கும் பழுதடைந்த புகையிரதப் பெட்டியொன்றைக் குடிசையாக்கி, அதில் வாழ்கிறான். அவனும் மனைவியும் மூன்று குழந்தைகளும் அதற்குள்தான். மேற்கு மூலையில் ஒரு சாய்ப்பை இறக்கி அதில் சமையல் செய்கிறார்கள். பெட்டியைச் சுற்றிக் கட்டியிருக்கும் பரணில் சமையல் பாத்திரங்களும் விறகுகளும் வைக்கப்பட்டிருக்கும்.

"பொயிலைச் சுத்தொண்டிருந்தால் தாவன்" ரத்தினம் கேட்டான்.

"அழுகல் பொயிலையைத் தந்திருக்கிறான். இந்தா பிடி" என்று மடிக்குள் இருந்த சுருட்டொன்றை எடுத்துக் கொடுத்தார். அவன் தீப்பெட்டியையும் வாங்கி சுருட்டை மூட்டி விட்டுத் திருப்பிக் கொடுத்தான்.

" இந்த முறை நிவாரணம் அடுத்த மாதமாம் கந்தையாண்ணை... கப்பலிலை மா வரேல்லையாம்"

"எட, போன மாதமும் தரேல்லை. இந்த மாதமும் அப்பிடியே?" இந்த மாதத்தை எப்படி ஓட்டுவதென்ற கவலை கந்தையருக்கு. தோட்டம் துரவிருந்தாலும் செய்யலாம். எல்லாத்தையும் விட்டிட்டு வந்து... ம்... கிழடு கட்டையளாய்ப் பிறந்த நாங்கள் எங்கடை கையைக் காலை ஆட்டித்தானே சீவிக்க வேணும் பெருமூச்சின் பின்னால் வீட்டிற்குள் நுழைந்தார்.

பேரப்பிள்ளையின் மடியில் இருந்த பூட்டப்பிள்ளை "ஐயா சொக்கா" என்றபடி ஓடி வந்தது. உள்ளே அவரது மனைவி தங்கம்மா பாயில் சுருண்டபடி கிடந்தாள். பக்கத்தில் கடைசி மகன் இருந்தான்.

"பழையபடி ஆச்சிக்கு முட்டிழுக்குது" பேரப்பிள்ளை சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காலமை ஒண்டுமில்லை. இதென்ன திடீரெண்டு?” துவாயை உதறி எறிந்து விட்டு தங்கம்மாவுக்கு அருகே போனார்.

சரிந்து சுருங்கிப் போய், கஷ்ரப்பட்டு மூச்சிழுத்தபடி அவள் கிடந்தாள். இயலாமையுடன் அவளைப் பார்த்தார்.

சுருங்கியிருந்த அவளின் முகம் நோய் வலியால் மேலும் கோணிப் போய் அலங்கோலமாய்க் கிடந்தது.

“டொக்டரிட்டைப் போகலாமெண்டால் காசில்லை” வெளியே வந்து குந்தில் அமர்ந்து கொண்டார்.

வானம் தெளிந்து நீலமாய்த் தெரிந்தது. சூரியக் கதிர்கள் வெம்மையை இறைத்தன.

தென்னை வட்டுக்குள்ளிருந்து தவறி விழுந்த அணிற் குஞ்சொன்றைத் துடிக்கத் துடிக்கக் கொத்தியபடி காகமொன்று பறந்து சென்றது.

இயலாமையால் கந்தையர் துடித்தார். கண்களில் நீர் நிறைந்தது.

“பாவம் தங்கம்... நாப்பது வரியமாய் எனக்காகவே வாழ்ந்து ஓடாய்த் தேஞ்சவள். அவளுக்கு ஒண்டும் செய்யேலாமல் போட்டுதே! ஆரிட்டைப் போய்க் கடன் கேக்கிறது?”

நீல வானம் அவரை வெறித்துப் பார்ப்பது போலிருந்தது. கடைசி மகன் வெளியே எழுந்து வந்தான். அவனை நிமிர்ந்து பார்த்தார். அவனது கன்னங்களில் நீர் கோடிட்டிருந்தது.

உள்ளே பேரப்பெட்டையின் அலறல் எழுந்து அந்த இடமெங்கும் வியாபித்தது.

“தங்கம் பாவமில்லை... நாங்கள்தான் பாவியள்” கந்தையர் எழுந்தார்.

*0*

*(தாயகம்: கார்த்திகை - மார்கழி, 1993)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிந்த ஒரு இரவும் முடியாத ஒரு பகலும்

யாழ்ப்பாணப் பரவைக் கடல் தூங்கிக் கொண்டிருந்தது. கடல் நீரில் முகத்தை அலம்பி விட்டு, கழுத்தில் சுற்றியிருந்த துவாயை இழுத்து முகத்தைத் துடைத்தான் றொபேட். பனிப்புகார் மண்டியிருந்தது. புள்ளிகளாய் கரை நீளத்துக்கு ஆட்களும் கட்டுமரங்களும்...

இரவு தொழிலுக்குப் போயும் எதுவுமில்லாமல் ஆகி விட்டது. அகன்ற கடலையும் புகை மண்டித் தெரியும் இராணுவக் காவலரணையும் வெறித்துப் பார்த்தான். எரிச்சலாயிருந்தது.

*

இரவு தொழிலுக்கு இவனுடன் அன்ரனும் வந்திருந்தான். இருவருமாக வலைகளைச் சரி செய்தனர். வலைகளில் அதிகம் சிக்குகள் இருந்தன. சில பிரிந்தும் போயிருந்தன. பொத்தல்களைத் தைத்து, சிக்கெடுத்து முடிய இருள் சூழ்ந்து விட்டது.

வெள்ளிகள் தெரியத் தொடங்க அவர்கள் புறப்பட்டனர். வானிலும் மண்டைதீவிலும் ஒளிப் பொட்டுக்கள் தெரிந்தன. இருள் மண்டி, அச்சந் தருவதாய் கடல் நிசப்தமாயிருந்தது.
இவன் துடுப்பை வலித்தான். அன்ரன் சாய்ந்த படி பேசாதிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன யோசிக்கிறாய்?” இவன் குரலைத் தாழ்த்திக் கேட்டான்.

“ஒண்டுமில்லை”

இப்பான் கட்டினவன். அதுக்குள்ளை தொழிலுக்கு வந்திட்டான் இவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

திடீரென்று மண்டைதீவிலிருந்து இராணுவத்தினர் சேர்ச் லைற் அடித்தனர். கடலெல்லாம் துளாவி, ஆங்காங்கு தெரிந்த கட்டுமரங்களையும் சிறுவள்ளங்களையும் ஊடுருவி வெளிச்சம் படர்ந்தது. இவனது கட்டுமரத்தை வெட்டி வெளிச்சம் சென்ற போது அன்ரன் துடித்தெழுந்தான். கட்டுமரம் தள்ளாடியது.

வெளிச்சம் விழும் போதே கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இருளைக் கிழித்துக் கொண்டு எரிதணற் துண்டுகளாய் ரவைகள் பாய்ந்த போது அன்ரனும் இவனும் கட்டுமரத்திலேயே குப்புறப் படுத்துக் கொண்டனர். இவன் நங்கூரத்தைப் பாய்ச்சினான். இரண்டு மூன்று ரவைகள் கட்டுமரத்தைத் தாக்குவது போல வரத் தொடங்கியதும் இருவரும் கடலில் குதித்தனர்.

நீந்தும் போது அன்ரன் களைத்திருந்தான். பயமும் சேர அவன் மூச்சிழுத்து நீந்துவது இவனுக்குத் தெரிந்தது. அவனருகே வந்தான்.

“கஸ்டமாயிருக்கே?”

“இல்லை”

தலைக்கு மேலால் ரவைகள் பறந்தன. ஒளி ஊடுருவிப் பாய்ந்தது. கரைக்கு நீந்தி வந்ததும் அன்ரன் அப்பாடா என்று பெருமூச்செறிந்தான். குளிரில் உடல் சிலிர்த்தது.

இவன் சேர்ட் பையுக்குள் இருந்த பீடிக்கட்டையும் தீப்பெட்டியையும் எடுத்தான். பொலித்தீன் பையையும் மேவி நீர் உட்புகுந்து அவை நனைந்திருந்தன. பீடியை எடுத்து வாயில் செருகினான். தீப்பெட்டியிலிருந்து குச்சியை உருவித் தட்டினான். அது இளகி இருந்தது. பையுக்குள் மீண்டும் போட்டு விட்டுத் தலையைக் கோதினான்.

“சீ... இவங்களாலை நிம்மதியா ஒண்டுஞ் செய்யேலா”

ஒளிப் பொட்டுக்களாய்த் தெரிந்த மண்டைதீவுக் காவல் அரண்களைப் பார்த்தான். அன்ரன் வீட்டிற்குப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீப்பெட்டி எடுத்து வரும் வரை இவன் ஈரத் தலையைக் கோதிக் கொண்டிருந்தான். தீக்குச்சி உமிழ்ந்த நெருப்பு முகத்தில் பிரதிபலிக்க நெருப்பை மூட்டினான். இருவரும் பீடி புகைத்தனர்.

பிறைச் சந்திரன் மேலெழுந்து கொண்டிருந்தது. பீடிகளும் மாறி மாறிப் புகைந்து முடிந்திருந்தன. சேர்ச் லைற் தொடர்ந்து அடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இவன் பொறுமையிழந்து தவித்துக் கொண்டிருந்தான். அன்ரன் சீமெந்துக் கட்டில் படுத்திருந்தான். சேர்ச் லைற் ஓய பிறைச் சந்திரன் உச்சிக்கு வந்திருந்தது.

அதன் பின்னர் இருவருமாக நீந்திக் கட்டுமரத்தருகே போனார்கள். ஆட்களின்றிப் பல கட்டுமரங்கள் நின்றன. சற்றுத் தூரத்திலும் யாரோ நீந்திச் செல்கிறார்கள்.

இவன் கட்டுமரத்துள் ஏற அது சரிந்து ஆடியது. அன்ரனும் ஏறிக் கொண்டான். குளிர் உடலை நடுங்கச் செய்தது. இவன் வலைகளைச் சரி செய்தான். அன்ரன் நங்கூரத்தை எடுத்து விட்டு, துடுப்பை வலித்தான். அருகருகே கட்டுமரங்களும் வள்ளங்களும் ஆட்கள் இன்றி பிணங்கள் போல் மிதந்து கொண்டிருந்தன.

திடீரென மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் பேரோசையுடன் வீழ்ந்து வெடித்தன. அவர்கள் அதிர்ச்சியுடன் குலுங்க கட்டுமரம் ஆடியது.

அன்ரன் பயத்துடன் கட்டுமரத்தை கரையை நோக்கித் திருப்பினான்.

"ஏன் திருப்புறாய் அன்ரன்?" இவன் கத்தினான்.

அவன் முகத்தில் பயம் தெரிந்தது.

"அண்ணையாணை... இனியும் நிக்கேலாது"

"உது இப்ப நிண்டிடும். கொஞ்ச மீனெண்டாலும் பிடிச்சிட்டுப் போவம். கையிலை அஞ்சு சதம் காசுமில்லை. மனிசி இண்டைக்கோ நாளைக்கோ பிள்ளை பெறப் போறாள். கொஞ்ச நேரமெண்டாலும் பிடிப்பம்" இவன் சொல்லி முடிக்கவும் மீண்டும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசை நாளைக்கெண்டாலும் பாக்கலாம். உயிர்தான் பெரிசு. நீ வராட்டா விடு. நான் நீந்தியெண்டாலும் போறன்"

இவனுக்கு குடும்பக் கஸ்ரம் இன்னும் வரேல்லை எனத் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

"சரி.. வா!" இவன் வெறுப்புடன் சொன்னான்.

இருவருமாகக் கரைக்கு வந்தனர். மண்டைதீவுக் காவலரண்கள் கண்களை உறுத்திக் கொண்டு ஒளிப் பொட்டுக்களாய்த் தெரிந்தன. கட்டுமரத்தை இழுத்து விட்டதும் அன்ரன் வீட்டிற்குப் போனான். இவன் கொஞ்ச நேரம் நின்று கடலையும் இராணுவக் காவலரண்களையும் வெறித்துப் பார்த்தான். பிரசவ நாளை எதிர்பார்த்து பிள்ளை வயிற்றுடன் இருக்கும் மேரியின் முகம் நினைவில் வந்தது.

இவன்களாலை நாங்கள் வாழேலாது..சே.. சேர்ட் பையைத் தடவினான். வெறுமையாயிருந்தது.

பின்னர், கட்டுமரத்தைத் தள்ளி, அதிலேறி வலிக்கத் தொடங்கினான். அது ஊர்ந்து ஊர்ந்து போய்க் கொண்டிருந்தது. குளிரால் உடல் நடுங்கியது.

திடீரென்று ஒரு சத்தம். முன்னால் போன வள்ளங்கள் அவசரத்துடன் திரும்பி வந்தன. அதிலிருந்தவர்களின் கலவர ஒலி இவனுக்கும் கேட்டது. இரண்டு கடற்படைப் பீரங்கிப் படகுகளின் இரைச்சல் கேட்பதாக பதட்டத்துடன் சொல்லியபடி அவர்கள் இவனைக் கடந்து சென்றனர். இவனுக்கும் நெஞ்சு படபடத்தது.

நிதானிப்பதற்குள் பீரங்கிப் படகுகளில் இருந்து ஏவப்பட்ட குண்டுகள் கிட்டவாக கடலில் வெடித்தன. பதட்டத்துடன் இவனும் கட்டுமரத்தைத் திருப்பிக் கொண்டு கரைக்கு வந்தான். அதைத் தள்ளி விட்டு, கரையில் சீமெந்துக் கட்டில் வந்தமர்ந்தான். சேர்ட் பையைத் தடவினான்.

வெறுப்புடன் கடலைப் பார்த்தான். ஒளிப் பொட்டுக்களாய் காவலரண்கள் தெரிந்தன. விடிவெள்ளி நன்றாக உயர்ந்து விட்டது. இன்றைய தொழில் பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரிக்குப் பெறுமாசம். ஆசுப்பத்திரியிலை போட ஆன உடுப்பில்லையெண்டு கத்துறாள். சாமானுகளும் முடிஞ்சுதாம். கடைக்காரனிட்டைப் போக கடனேறீட்டுதாமெண்டு தரானாம். என்ன செய்யிறது?

ஒளி உமிழும் காவலரண்களை அடித்து நொருக்க வேண்டும் போலிருந்தது.

"இவங்களாலைதான் எல்லாம்.. இங்கையிருந்து துலைக்க வேணும்"

கரையில் தூரத்தே பலர் கதைத்துக் கொண்டிருந்தனர். பிடித்து வந்த கொஞ்ச மீன்களை வலைகளை விரித்துப் பறியுள் போடுவது தெளிவற்றுத் தெரிந்தது.

இவனது கண்கள் இருண்டன. இரவு சாப்பிடாதது வயிற்றில் புகைந்தது. துவாய்த் துண்டைத் தலையில் மூடி விட்டு, சீமெந்துக் கட்டில் படுத்தான். பெருமூச்சு வெளிப்பட்டது.

*

முகத்தைத் துடைத்து விட்டுக் கரையேறினான். நேரே தெரிந்த துறையில் நான்கைந்து பேர் தூண்டில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி இவன் நடந்தான். இங்கால் பக்கமாக மரியதாஸும் சூட்டும் தெரிந்தனர். சூரிய ஒளியில் அவர்களது முகங்கள் மஞ்சளடித்து இருந்தன.

இவனைக் கண்டதும் "என்ன படேல்லையே?" என்று மரியதாஸ் கேட்டான். இவன் வெறுமையுடன் தலையாட்டினான்.

"இரவு சத்தங் கேக்கேக்கையே நான் நினைச்சனான் தொழில் படுமெண்டு..."

தூண்டில் தக்கை ஆடியது. பிறகு இழுத்தது.

"வலிக்குது இழன்"

மரியதாஸ் சுண்டி விட்டு இழுத்தான். ஓரா ஒன்று திமிறிய படி தரையில் வீழ்ந்தது. புள்ளிகளும் வரிகளுமாய் கொஞ்சம் பெரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட் அதை எடுத்து ஒரு கையால் பிடித்த படி அதன் வாய்க்குள் குச்சியை விட்டுத் துளாவினான். அதன் நாக்குக்குக் கீழிருந்து வெள்ளைப் பூச்சியொன்று விழுந்தது. ஓராவைத் தூக்கிப் பறியுள் போட்டு விட்டு பூச்சியை எடுத்து தூண்டிலில் குத்தி விட்டான்.

"சூட்.. அந்த ஓராவை றொபேட்டண்ணையிட்டைக் குடு. கொண்டு போகட்டும்" சூட் அதைத் தூக்கிக் கொடுத்தான்.

"ஏன்? உனக்கே காணாது" என்றபடி வாங்கிக் கொண்டான். கைக்குள் கிடந்து அது துடித்தது.

நேரே நடந்து போய் குறுக்காக இறங்கும் பாதையால் சென்றான். நான்கு எட்டு வைத்தால் வீடு வருகிறது. இவன் சாரத்தை மடித்துப் பிடித்தபடி நடந்தான். வீட்டிற்கு வந்த போது அது பூட்டியிருந்தது.

"ஏ..புள்ள... எங்கை போய் நிக்கிறாய்?"

"...."

இவன் பின்பக்கமாகப் போனான். அங்கிருந்தபடி பலமுறை கூப்பிட்டான். அதன் பின்னர்தான் தூரத்தில் "ஓய்..வாறன்" என்ற குரல் கேட்டது. பிலோமினம்மா வீட்டடியில் இருந்துதான் குரல் கேட்கிறது.

இவளுக்கு எந்த நேரமும் ஊரலட்டல்தான் பின் பக்கத்தில் கட்டி நின்ற ஆடு இவனைப் பார்த்து அழுதது.

மேரி வருவது தெரிந்தது. அவள் முன்தள்ளும் வயிற்றுடன் றெஜியைத் தூக்கிக் கொண்டு வந்தாள். அவளின் பின்னால் நான்கு பிள்ளைகளும் வந்தனர்.

"எங்கையடி பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு திரியுறாய். வீட்டு வேலை செய்யாமல் விடிஞ்சா பொழுது பட்டால் ஊரலட்டித் திரிஞ்சாக் காணுமே" கோபத்தோடு கத்தினான்.

"ஐயோ, ஒரு சொட்டரிசியும் இல்லாமல் பிள்ளையள் கத்துதெண்டு புலோமினம்மாட்டைப் போய் வாங்கியாறன். நீங்கள் வாங்கித் தந்தனீங்களே? சும்மா சொல்லிக் கொண்டிருந்தால் காணுமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களென்ன சாகிறதே?" அவள் பொரிந்து கொண்டு வருவதை இவன் ஆத்திரத்துடன் பார்த்தான்.

அவள் உள்ளே போனாள். இவனும் பின்னால் போய் "இந்தா" என்று ஓராவை நீட்டினான்.

"இது மட்டும் இருந்தாக் காணுமே?"

"பின்ன எது வேணும்?"

"தூளில்லை... புளியில்லை"

"அப்ப பொரிச்சு விடன்"

"எண்ணையிருந்தாலல்லோ"

"அப்ப என்னதான் வச்சிருக்கிறாய்?" ஆத்திரம் வார்த்தைகளில் புரண்டது.

"வாங்கித் தந்தாலல்லோ! பெண்ணாப் பிறந்த நாங்கள் வீடு வழிய கடன் வாங்க வேண்டிக் கிடக்கு" இவன் அவளை முறைத்துப் பார்த்தான். மீசை நடுங்கியது.

"இவளவு நாளும் ஆரடி வாங்கித் தந்தவன்"

கைகள் இரண்டு மூன்று முறை அவளது முதுகில் இறங்கி ஏறின. அவள் "ஐயோ" என்று கத்தினாள். சத்தங் கேட்டு அன்னம்மாக்கா ஓடி வந்தாள்.

"ஏன்ரா உனக்கென்ன நடந்தது? ஏனவளை அடிக்கிறாய்?" இவன் ஆத்திரம் மாறாமலே விலகினான்.

"உதுகளோடை இருக்கிற நேரம் இல்லாமல் இருந்திடலாம்" அவளுக்குக் கேட்கக் கூடியதாகச் சொன்னான். பின்னர் அறைக்குள் நுழைந்து தூண்டிலையும் நூலையும் எடுத்துக் கொண்டு போனான். பின்னால் "அப்பா! நானும் வாறன்" என்றபடி மூத்தவன் வந்தான்.

"வேண்டாம்... நீ போ" இவனது அதட்டலில் அவன் திரும்பிச் சென்றான். இவன் நேரே போய்த் துறையில் குந்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைக் கட்டித் தூண்டிலைச் சரி செய்தான். பக்கத்தில் நிக்கலஸ் தூண்டிலை நீருக்குள் புதைத்து விட்டுக் காத்திருந்தான். அவனிடம் வெள்ளைப் பூச்சியொன்றை வாங்கிக் குத்தி விட்டு, தூண்டிலை நீருள் அமிழ்த்தினான். கட்டை நீரில் மிதந்தது.

சூரியன் மேலே எழுந்து கொண்டிருந்தது. புகை விலகி, தார்ப் பீப்பாக்கள் போன்று மண்டைதீவு இராணுவக் காவலரண்கள் தெரிந்தன. தலையைத் திருப்பிக் கொண்டான்.

கடல் மெல்ல முனகிக் கொண்டிருந்தது. நூல் ஆட, கட்டை தளம்பியது. இவன் இழுத்தான். சின்னக் கருந்திரளியொன்று துடித்து வீழ்ந்தது. தூண்டிலிலிருந்து அதனைக் கழற்றி, பையுள் போட்டான். மீண்டும் தூண்டிலை இறக்கி விட்டு, தூண்டில் தடியை நிலத்தில் வைத்து அடிக்காலால் அமத்திப் பிடித்தான். பசித்தது. நிக்கலஸிடம் பீடியொன்றை வாங்கிப் புதைத்தான். கொஞ்சம் கழிய மூத்தவன் வந்தான்.

“மீன் பொரிச்சுப் புட்டும் அவிச்சாச்சாம்.. அம்மா வரட்டாம்” இவன் அவனைப் பரிவுடன் நோக்கினான்.

“ம்..நீ போ”

அவன் நின்று இவன் மீன் பிடிப்பதைப் பார்த்தான்.

“நிக்காத.. மண்டைதீவிலையிருந்து சினைப்பர் அடிப்பான்”” அவன் இருந்தான். இவன் திரும்பினான்.

“சொன்னாக் கேக்க வேணும். போ ராசா! நான் நாலைஞ்சு மீன் பிடிச்சு சந்தையிலை வித்திட்டு வந்திடுறன் எண்டு அம்மாட்டைச் சொல்லு”

அவன் எழுந்து போனான். இவன் தூண்டில் ஆட, அதை இழுத்தான்.

*

இவன் தூண்டிலைக் கழற்றி நூலைச் சுற்றிக் கொண்டு எழுந்த போது சூரியன் இன்னும் மேலெழுந்திருந்தது. தவிர்க்க முடியாத படி காவலரண்கள் பார்வையில் பட்டன. வானில் உலங்கு வானூர்தி ஒன்றின் உறுமல் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் சந்தைப் பக்கமாகப் பையைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

இண்டைக்கு விலையாயிருக்கும். இருநூறாவது கிடைக்கும்

வேகமாக இவன் நடந்து கொண்டிருக்கும் போது மேலே குண்டு வீச்சு விமானமொன்று பறந்தது. சற்று நேரத்தில் குண்டு வெடித்து அதிர்ந்தது. இவன் திக்கித்து நின்றான். பிறகு சந்தையை நோக்கி நடந்தான்.

"எங்கை விழுந்தது?" என்று கேட்டபடி சிலர் போனார்கள்.

இவன் சந்தையடிக்குக் கிட்டப் போகும் போது விமானம் குத்தியது. இவன் பையைக் கீழே போட்டு விட்டு நிலத்தில் படுத்துக் கொண்டான். பயத்தால் உடல் நடுங்கியது. மீண்டும் ஒரு குண்டு வெடித்து அதிர்ந்தது.

கலவரத்துடன் பலர் ஓடி வந்தார்கள். என்ன என்று விசாரிக்கக் கூட முடியாமல், அலறியடித்தபடி பரபரப்புடன் அவர்கள் இவனைக் கடந்து ஓடினர். அன்ரனும் பாய்ந்து விழுந்து வந்தான். இவன் பையைத் தூக்கிக் கொண்டு எழுந்து குந்தியிருந்தான்.

"எங்கை அன்ரன்?"

"சந்தையடியிலை... திருப்பியும் அடிக்கப் போறான்.. ஓடி வா!" அவன் ஓடிப் போய் விட்டான். இவன் கொஞ்ச நேரம் நின்று விட்டுத் திரும்பி நடந்தான்.

ஊரே கலவரப்பட்டுக் கொண்டிருந்தது. பீதியுடன் எல்லோரும் வீடுகளை விட்டு வெளியே வந்து நின்றனர். இவன் கடல் அருகால் நடந்து சென்று, வீட்டிற்குச் செல்லும் பாதையில் இறங்கினான்.

ஒழுங்கை முழுவதும் சனக் கூட்டமாயிருந்தது. எல்லோரும் இவனை அனுதாபத்துடன் பார்த்தனர். பல பெண்கள் இவனைக் கண்டதும் தலையைக் குனிந்து கொண்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டும் நின்றனர். இவன் பையையும் தூக்கியபடி சாதாரணமாக நடந்து வந்தான்.

வீட்டடியில் பெருங்கூட்டம் நின்றது. இவனைக் கண்டதும் அழுதபடி ஓடி வந்தான் மரியதாஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்ரா அழுகிறாய்? என்ன நடந்தது?" கேட்கும் போது அவன் இவனைக் கட்டிப் பிடித்தான்.

"காலமை ஒரு மீன் தந்தனே அவளிட்டக் குடுத்துக் காச்சிச் சாப்பிடெண்டு... எல்லாம் வீணாப் போச்சுதே றொபேட்டண்ணை" அவன் ஒப்பாரி வைத்து அழுதான்.

"ஐயோ..மேரியக்காவும் பிள்ளையளும் போயிட்டினமே.." அவனது அழுகை கரைய முன்னமே, அவனில் இருந்து பிரித்துக் கொண்டு ஓடினான். மீன் பை தூரத்தில் எகிறி விழுந்தது. மீன்கள் சிதறுண்டன.

வீட்டருகே வந்த போது வீடு கற்குவியலாகக் கிடந்தது. எல்லாமே சிதறியிருந்தன. அடையாளங் காண முடியாதபடி மேரியும் பிள்ளைகளும் சதைத் துண்டங்களாக உருக்குலைந்து கிடந்தனர். இவன் குழற முடியாமல் திக்கித்துப் போய் நின்றான். உடலில் மின் வெட்டியது. தலை சுழன்றது. இவன் அப்படியே சரிய, யாரோ தாங்கிப் பிடித்தார்கள்.

*

எழும்பிய இவனை மரியதாஸ் சரித்து வளர்த்தினான்.

"கொஞ்ச நேரம் ஆறிக் கொண்டிரு" என்றான் அவன்.

இவனுக்கு கண்கள் நிறைய நீர் வந்தது. விக்கி விக்கி அழுதான். நீண்ட நேரமாக, மரியதாஸின் தேற்றலையும் மேவி அழுதான். "எல்லாமே போயிட்டுது. இனியென்ன இருக்கு" என்று அழுகையினூடே சொன்னான். எழுந்தான். மரியதாஸ் தடுக்க "வேண்டாம்" என்றபடி வெளியே வந்தான்.

"எங்கை போறாய்?"

"வீட்டடியைப் பாத்து வாறன்"

"பிறகு பாக்கலாம்"

"இல்லை. இப்ப பாக்கப் போறன்"

விடுவிடென வீதியில் இறங்கி வீட்டடிக்குப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான வீடு கற்குவியலாய்க் கிடந்தது. அக்கம் பக்கத்து வீடுகளும் இடிந்திருந்தன. சதைக் குவியல்களைக் காணவில்லை. விம்மி விம்மி அழுதான். அழுதபடி பின் பக்கம் போனான். எந்த நேரமும் மே என்றழைக்கும் ஆடும் இறந்து கிடந்தது. அதன் கழுத்தில் இருந்து பெருகிய இரத்தம் நிலத்தில் சிவப்பாய் உறைந்திருந்தது. கிட்ட வந்து இவன் ஆட்டைத் தடவினான். சில கணங்கள் அப்படியே இருந்தான்.

பின்னர் அதன் கழுத்தில் இருந்த கயிற்றைக் கழற்றினான். கழற்றிய கயிற்றைப் பின் மாமரத்தில் கட்டிச் சுருக்குப் போட்டான். கீழேயொரு வட்டச் சுருக்கிட்டான். அதற்குள் தலையை நுழைத்தான்.

"ஐயோ! என்னண்ணை செய்யிறாய்?" என்றபடி மரியதாஸ் ஓடி வந்தான். அவனின் பின்னால் நான்கைந்து பேர் ஓடி வந்தனர். சுருக்கை அவிழ்த்து அதிலிருந்து இவனை விடுவித்தனர். விடுவிக்கும் போது-

"என்னை விடுங்கோ... அவளையும் பிள்ளையளையும் விட்டிட்டு என்னாலை இருக்கேலாது. என்னை விடுங்கோ" என்று கத்தினான்; திமிறினான். பிறகு விம்மல் வெடிக்க, அழுதான். மரியதாஸ் இவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கூட்டி வந்தான். இருவருமாகக் கூட்டிச் சென்று அன்ரன் வீட்டில் இருக்க வைத்தனர். அன்ரனின் மனைவி இவனைக் கண்டதும் அழுதபடி பின்னால் சென்றாள்.

"அழுது அவரைக் கலக்காமல் சுறுக்கா கோப்பி போட்டா" அன்ரன் அவளைப் பார்த்துச் சொன்னான்.

அவள் முகத்தைத் துடைத்தபடி கோப்பியைப் போட்டுக் கொண்டு வந்து இவனிடம் நீட்டினாள். இவன் குனிந்தபடி வேண்டாமென்றான்.

அன்ரன் அதை வாங்கிப் பருக்கி விட்டான்.

"நீ சாகிறதாலை உனக்கு என்ன வரப் போகுது?"

"ஏன் றொபேட்டண்ணை.. நாங்கள் உங்களைப் பாக்க மாட்டமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சாகிறதாலை குண்டு போட்டவனுக்குத்தான் லாபம். எங்களுக்கு நீ இல்லாட்டி எவளவு நட்டந் தெரியுமே?" மரியதாஸ் இவனது தலையைத் தடவி விட்டான்.

"அண்ணையாணை.. கர்த்தர் மேலாணை.. உப்பிடியொரு முடிவுக்கு இனி வராதை. இது எவளவு கோழைத்தனந் தெரியுமே.. இப்பிடி வீணா உயிரை விடுகிறதே.. எங்கை சத்தியஞ் செய்து தா"

"..."

நீண்ட நேரத்தின் பின் நிமிர்ந்தான். சத்தியம் செய்து தந்தான். "நீ எங்கையும் போக வேண்டாம்.. எங்களோடை இரு"

அன்ரன் சொன்னான்.

*0*

*(வெளிச்சம்: மார்கழி, 1994)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிப்பு

வானில் நிலவு அழுது கொண்டிருந்தது. சோளகக் காற்று சுழன்றாடி வீசியதால், முற்றத்தில் நின்ற உயர்ந்த தென்னை மரம் பயமுறுத்தியபடி அசைந்தாடியது. தற்செயலாக மரம் விழுந்தால் அந்தக் குடிசை பொம்மர் குண்டால் சாய்ந்த கட்டிடங்கள் போலத் தரையில் படுத்து விடும்.

வாணி என் மார்பில் தூங்கி விழுந்து கொண்டிருந்தாள்.

"கணேஸ்... அவளைத் தூங்க விடாதை. சாப்பாடு குடுக்க வேணும்" சமையலறைக்குள் இருந்து அக்கா குரல் கொடுத்தாள். என் தோளில் முகம் புதைத்துக் கிடந்த வாணியைத் தட்டி எழுப்பி, நிலத்தில் இறக்கி விட்டேன்.
கண்களைக் கசக்கியபடி அவள் மாறி மாறி என்னையும் சுற்றுப்புறத்தையும் ஆச்சரியத்துடன் பார்த்தாள். பின்னர் என்னருகே வந்து தூக்கச் சொல்லிக் கையைத் தந்தாள்.

"நாங்கள் சாப்பிட்டுப் படுக்க வேணுமல்லே.. இப்பிடியே நிப்பம். என்ன"

மீண்டும் அவள் தூக்கச் சொல்லிச் சிணுங்கினாள்.

"அங்கை நிலாவல்லே.." நான் அவளைத் தூக்கி வைத்தபடி, அவள் நித்திரை கொள்வதைத் தவிர்க்க முனைந்தேன்.

அவள் நிலாவைப் பார்த்தாள். பின் என்னைப் பார்த்தாள். முகத்தில் புன்னகை படர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நெலா நெலா வா வா... நெலா நெலா வா வா” எனக் கையை நீட்டி அழைத்து, பாவனை பண்ணிக் கத்தினாள். அந்த ஐந்து வயதுக் குழந்தையின் குரலில்தான் எத்தனை இனிமை?

“அச்சா நிலா என்ன? வடிவான நிலா என்ன?”

“ஊம்” அதே கொஞ்சும் குரல்!

பாவம் அக்கா! அவள்தான் என்ன செய்வாள்? அத்தானில்லாமல் அவள் படும் வேதனைகள் சொல்லி மாளாதவை. அதற்குள் வாணி வேறு!

“அப்பா எங்கை? அப்பாவைக் கொண்டா என்கிறாள். எத்தனை நாளைக்குத்தான் அப்பா நிலாவிட்டை போட்டார்; வந்திடுவார் என்று அவளைப் பேய்க்காட்டுறது. ஒரேயடியா அவர் செத்துப் போனாரெண்டு சொல்ல எனக்கு மனங் கேக்குதில்லை. எப்பிடி நான் அவளுக்குப் புரிய வைக்கிறது?” அன்றைக்கு அக்கா சொல்லி அழுதது இப்போதும் நெஞ்சில் குத்துகிறது.

அத்தானின் உடலை அக்கா கூடப் பார்க்கவில்லை; யாருமே பார்க்க முடியவில்லை. பொம்மர் குண்டுச் சிதறல்களோடு அவருடலும் சேர்ந்து விட்டது.

எதெதன் உடலுக்குள் அவரின் சிதைவுகள் உள்நுழைந்தனவோ? யார்தான் இங்கே இருப்பை நிச்சயப்படுத்தி விட முடிகிறது? வாணி ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறாள். நிலவொளியில் தெளிவாகத் தெரிந்த அந்தப் பிஞ்சு முகத்தில் ஏதோ புதிர் தொக்கி நிற்பது போல ஒரு பிரமை!

“வாணிக்குட்டி... என்னம்மா பாக்கிறாய்?”

அவள் திரும்பி என்னைப் புதிருடன் பார்த்தாள்.

“மாமா! அப்பா நெலாவிலையோ இருக்கிறார்?”

“ஓம்” பொய் என் வாயில் புரண்டது.

“நாங்கள் போய்ப் பாப்பமா?”

“அது.. வந்து.. இப்ப அங்கை போகேலாதம்மா”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏம் மாமா”

“ …”

”மாமா!… எம் பாக்கேலாது?”

“நிலாவைப் பாக்கிலி பிளேனிலைதான் போக வேணும்”

“மேலாலை பறக்கிற பிளேனோ?”

“ம்.. அதுதான்”

“அது குண்டு போடும். நான் மாட்டன்”

“இல்லையம்மா… அந்தப் பிளேன் குண்டு போடாது”

“ம்கூம்… நான் மாட்டன். எனக்குப் பயமாயிருக்குது. நான் அம்மாட்டப் போப்போறன்”

எனது பிடியை விடுவித்துக் கொண்டு ஓட எத்தனித்தாள். “மாமா இருக்கிறனல்லே. நான் குண்டு போட விட மாட்டன். நீங்கள் இருங்கோ”

“ம்கூம்…. அ..அ…அ…” அவள் அழுதபடி எனது பிடியை விட்டு விலகி அக்காவை நோக்கி ஓடினாள்.

எனக்குள் முட்கள் குத்துவது போல….ஈட்டிகள் பாய்வது போல…. எல்லாம் ஒன்றாகி என்னை மீறிய வெறி! யாராரையோ எதையெதையோ ஓங்கி உதைக்க வேண்டும் போல… உணர்வு மீறிய வெறி!

மனதில் வாணியின் பிஞ்சு முகம். வானில் நிலவு அழுதபடி.

0

(அறத்தமிழ் ஞானம்: ஜனவரி, 1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயினும் நல்ல

"அம்மாவென்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காது உயர்வில்லையே" எங்கோ தொலைவில் இருந்து காற்றின் வீசலுக்கேற்ப காதுள் நுழைந்த இந்தப் பாடல் அவனை இவனது நினைவுள் கொணர்கிறது.

இந்த நான்காண்டுகளில் இவனோடு சமர்க் களங்களில் நின்றவர்களில் பலரில்லை. அவர்களுள் ஒருவனாக, எப்போதுமே நினைவுக்குத் தட்டுப்பட்டு நிற்கும் ஒரு பாத்திரமாக அவன் நின்றான். ஏனையோரில் இருந்து மாறுபாடான அவனது சுபாவம், இவனுக்கு அவனில் பிடிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்

மெல்லிய அரிசிப் பற்களுக்குள் முளைத்த தெத்திப் பல்லை வெளிக்காட்டி, கண்களைச் சிமிட்டி நீண்ட ஒல்லியான உடலை வளைத்து அவன் சிரிக்கும் போது, அது கூட காலமெல்லாம் அவனை ஞாபகத்தில் வைத்திருக்கும்

கடைசியாக நடந்த பெருஞ் சமரொன்றில் எறிகணைச் சிதறல்கள் உடலைத் தாக்க, குருதி தோய அவன் மரணித்த அந்தக் கணத்தில், இவன் அவனருகே நின்றான். இன்னும் நான்கைந்து ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு வெற்றியுடன் இவர்கள் திரும்பிய போது அதைப் பாட அவனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் அவனது உடலைத் தூக்கி வந்தான். மௌனத்தில் பொங்கிக் கொண்டு வழியெங்கும் சோக விதைகளைத் தூவித் தூவி எல்லோரும்.

அவனுடைய உடல் விதைகுழியில் நடப்பட்ட பின்னர், அவனது குறிப்புப் புத்தகத்தை இவன் தனதாக்கிக் கொண்டான். விலை மதிக்கவியலாத அவனது நேசத்திற்கு அடையாளமாய் அது இருந்தது. அதற்குள் இரு படங்கள் இருந்தன. ஒன்றில் அவனது அம்மா சிரித்தபடி இருந்தார். மற்றதில் சிரித்தபடி தலைவர். அப்போதுதான் இவனுக்கு அழுகை பீறிட்டு வந்தது. கண்ணீர் பெருக, ஓவென அழுதான். உடலோடு ஒட்டியிருந்த ஒன்று இல்லாமல் போனது போல... இதயத்தின் ஒரு பக்கத்தில் உதிரம் உறையும் படியாக எதையோ இழந்து தவிப்பது போல...

நீண்ட நேரம் அவனது நினைவுகள் அறுபட முடியாதனவாகப் பற்றிப் படர்ந்திருந்தன.

ரைபிளைத் தூக்கிக் கொண்டு காவலரணுக்குப் போகும் போதும், சாப்பிடும் போதும், குளிக்கும் போதும் அருகே அவன் துணையின்றி மனம் அவஸ்தைப்படும். நினைவில் அவன் முகம் தோன்றி உயிரைத் துவட்டும்.

அநேக வேளைகள் தனது ரி 56 - 2வை மடியில் வைத்து கால்களைப் பரவி, காவலரண் மண்மூடைகளில் உடலைச் சாய்த்து அமர்ந்திருந்து அவன் பாடுவான்.

“தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை, எனக்கொரு தாய் இருக்கின்றாள், என்றும் என்னைக் காக்கின்றாள்”

உடலைச் சிலிர்க்கச் செய்து மயிர்க்கால்கள் ஊடாக நுழைந்து என்பைக் கிச்சுமூட்டுவதாக அவன் பாடல் இவனைப் புரட்டும். எக்காலத்திலும் அவனது ஞாபகத்தை நீக்க முடியாதது போன்ற உணர்வை அவனது பாடல் தொற்ற வைக்கும்.

மிகச் சன்னமாய் கைகளை அசைத்து, உடலைக் குலுக்கி புலிகளின் தாகம் பாடும் போது கைதட்டி இணையாதவர் இல்லை. தாயினும் மேலான காவலன் யாரடா என்று அவன் பாடும் போது அதை முடித்து வைத்துப் பாடாதவன் எவனுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் உற்சாகமாக இரவுக்காவல் விழிப்பின் அசதி சற்றுமின்றி, அவன் பாடல்தான் இவர்களைத் துயிலெழுப்பும். மார்கழியின் விடிகாலைப் பொழுது. பனி சொட்டுச் சொட்டாய் இலைகளில் இருந்து வடியும். வெயில் புகாரை ஊடறுக்க முனையும்.

எப்போதுமே நிசப்தம் குடிகொண்ட அந்தச் சூனியப் பிரதேசத்தில் எப்போதாவது எழும் பறவைகளின் சத்தத்தைத் தவிர, இடையிடையே எழும் வெடியோசையை விட அவனது குரலுக்கு ஒரு வலிமையிருந்தது என்பது இவன் எண்ணம்.

காவலரணுக்கு மேலே தலை நீட்டினால் இராணுவத்தினரின் குறிபார்த்தலில் இருந்து மீள முடியாத அந்த இடைவெளிக்குள் அவனது பாடல் இராணுவத்தினரையும் எட்டி இருக்கும். இரவு வேளைகளில் தம் பீதியைப் போக்க அவர்கள் காதை அடைக்குமாறு சிங்கள பைலாப் பாடல்களைப் போட்டிருப்பார்கள். அது ஓயும் பொழுதில் வேண்டுமென்று இவன் பாடும் இயக்கப் பாடல் கூட அவர்களை எட்டியிராமல் போகாது.

ஒரு தேவதையின் அழகு அவன் பாடலுக்கு இருக்கும் என்பது இவன் எண்ணம்.

ஒரு காவலரண் தாக்குதலுக்குத் தயாராகும் போதுதான் அவனது அம்மா இறந்தார். தகவல் வந்ததும் சண்டைக்குச் செல்வதை நிறுத்தி வீட்டிற்குச் செல்லுமாறு பொறுப்பாளர் பணித்தார். அவன் போகவில்லை. இரவுச் சண்டையை முடித்த பின்பே போவதாக உறுதியாக நின்றான். இவனது வற்புறுத்தலைக் கூட அவன் ஏற்கவில்லை.

சண்டைக்குப் போகும்போது வாகனத்தில் இருந்தவாறு தனது ரி 56 - 2வை துப்பாக்கியை அழுந்தப் பற்றியபடி மௌனமாக இருந்தான். எவருடனும் எதுவும் பேசவில்லை. நள்ளிரவில் காவலரண் மீதான தாக்குதல் நடந்தது.

அரைமணி நேரத்தில் எல்லாவற்றையும் முடித்து விட்டு வரும் போது "அம்மா அம்மா எந்தன் ஆருயிரே" பாடினான். விம்மல் வெடிக்க அழுதான். பின்னர் வீட்டிற்குப் போனான்.

இவனுக்கு ஒரு சகோதரனுக்குரிய வாஞ்சையுடன் அவன் தனது வீட்டுக் கதையைச் சொன்னான். தனது சின்ன வயதிலேயே அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போனதையும், அம்மா தானே உழுதும் விதைத்தும் வயலைச் செய்து தங்களை வளர்த்ததையும் அதற்காக அம்மா பட்ட கஸ்டங்கள் பற்றியும், இன்னும்...

ஒரு லீவின் போது இவன் அவனது வீட்டிற்குப் போனான். வயல்கள் சூழ்ந்த அந்தப் பகுதியில் சிறியதொரு கல்வீடு. அம்மாவின் உழைப்பால் உருவானதாம்! அதற்குள் இவன் சென்ற போது அம்மா ஆஸ்த்மாவால் பீடிக்கப்பட்டிருந்தார். இங்கும் அங்குமாய்ப் புரண்டு, மூச்சிழுக்க முடியாமல் பேரவஸ்தைப்பட்டார். அவனது அக்கா அவரருகே இருந்து விசுக்கிக் கொண்டிருந்தார்.

இவன் அப்போது அவனை நினைத்தான். அவன் அம்மாவின் மீது வைத்திருக்கும் அன்பு அளவிடத்தக்கதல்ல என்று இவனுக்குத் தெரியும்.

“என்ரை வாழ்க்கையிலை ஆக உயர்ந்ததெண்டு நினைக்கிறது எவறெஸ்ரையில்லை. என்ரை அம்மாவையும் என்ரை தேசத்தையுந்தான்” என்று அவன் சொல்லிக் கொள்ளும் போது அவனைப் போல இயல்பாய் ஏன் பேச முடிவதில்லையென இவன் நினைப்பதுண்டு.

மஞ்சள் சூரியன் மேற்கில் படுத்த ஒரு பொழுதில் தாக்குதல் ஒன்றிற்காய் அணி சேரும் போதுதான் அவன் இவனைச் சந்தித்தான். மிக இயல்பாய்.

“தாய் மேலாணை தமிழ் மேலாணை” பாடிக் கொண்டு, கண்களை வெட்டிப் புன்னகை சிந்திக் கொண்டு. காலாதி காலத்தில் மறக்கக்கூடியதா அவன் நினைவுகள்?

*0*

*(வெளிச்சம்: ஆவணி, 1994)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலம்

வானில் நிலவு நெளிந்தது. புதிராகத் தொக்கி நிற்கும் நிசப்தத்தை அழித்து பெருங்குரலொன்று அவலமாய் எழுந்து அந்தப் பகுதியெங்கும் எதிரொலித்தது. யன்னல் இடுக்குக்குள்ளால் வந்து என் செவிப்பறையில் மோதி எதிரொலித்த அந்தக் குரலுக்குரியவர் யாரென்பதை சில விநாடிகளிலேயே புரிந்து கொண்டேன்.

மீண்டும் அந்தக் குரல் அவலமாய் ஒலித்தது. “ஐயோ, என்ரை மகனை வெட்டுறாங்கள்... சுடுகிறாங்கள்... கொல்லுறாங்கள்”

மீண்டும் மீண்டும் அச்சொற்கள் காற்றைக் கிழித்து வந்து மோதின.

சத்தங் கேட்டு வீட்டுநாய் சிறிது நேரம் வாசலில் நின்று குரைத்து விட்டு மீண்டும் வந்து கடகத்துக்குள் படுத்துக் கொண்டது. மாசி மாதக் குளிரில் இருந்து தன்னைப் பாதுகாக்க அது தெரிவு செய்தது இந்தக் கடகத்தைத்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா அக்கா சில மாதங்களாக இப்படித்தான்! தானே ஏதாவது யோசிப்பார். ஏதேதோ சொல்லிப் புலம்புவார். பெருங்குரலில் கத்துவார். இராசம்மா அக்காவுக்கு விசர் பிடித்து விட்டது. இப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள்.

நான் இங்கு வந்த போது எனக்கு இதொன்றும் தெரியாது.

"தம்பி, நடேசற்றை ராசம்மாவுக்கல்லே விசர் பிடிச்சிட்டுது. அநியாயம். என்ன மாதிரி இருந்தவள். அவளின்ரை கதியைப் பார். மனிசர் எதெதுக்காலையெல்லாம் தப்ப வேண்டியிருக்கு... ம்..." என்று சொல்லி அம்மா ஆதங்கப் பெருமூச்சு விட்ட பின்னர்தான் விசயமே புரிந்தது.

அதன் பின்? அனுதாபம். வெறும் அனுதாபம்! அனுதாபப்படுவதால் அவருக்கு என்ன கிடைத்து விடப் போகிறது. என்றாலும்...

இராசம்மா அக்கா நான் தொட்டிலை விட்டுக் கீழ் இறங்கி, வண்டிலைப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்த காலத்தில் எனக்கு அறிமுகமானவர். இதையே அவர்தான் எனக்குச் சொல்லியிருந்தார். அதன்பின் பன்னிரண்டு வயது வரை அவரது அணைப்பில் வளர்ந்தவன் நான்.

திருமணம் செய்து சுன்னாகம் வந்ததும் நான்தான் அவருக்கு முதல் குழந்தை. என்னைத் தூக்கிச் சீராட்டி, ஆராட்டி வளர்த்ததாலோ என்னவோ எனக்கு பத்து வயதாகும் வரை அவளுடைய வயிற்றில் குழந்தையேதும் தோன்றவில்லை. எனவே, அவளின் செல்லக் குழந்தையாக அப்போது நான் இருந்தேன். அதன் பின் அவரளுக்கு குழந்தைகள் பிறந்து... வளர்ந்து... காலம் விரைவாகக் கடந்து விட்டது. எல்லாம் இப்போது போலிருக்கிறது.

தொழில் கிடைத்து நான் பல்வேறு இடங்களிலும் சுற்றித் திரிந்து வாழ்ந்து விட்டு, குடாநாட்டுக்குள் நுழைந்த பின்னர்தான் இந்தக் கிராமத்தின் மாற்றங்களைக் கண்டுணர முடிந்தது. ஒவ்வொரு தனி மனிதர்களும் எவ்வளவு மாறி விட்டனர்?
அவர்களில் ஒருத்தி இராசம்மா அக்கா.

அவரது மாற்றம் என்னால் ஜீரணிக்க முடியாதது. இப்படி எத்தனை இராசம்மா அக்காக்களோ என எண்ணும் போது மேலும் மேலும் ஜீரணம் இன்றி மனதுக்குள் அஜீரண நிலை தோன்றி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பி, அவள் நல்லாய் வயக்கெட்டுப் போனாள். சாப்பாடுகளுமில்லைப் போலை கிடக்கு. ஒருக்காப் போய்ப் பாத்திட்டு வாவன். உன்னை வளத்தவளல்லே!”

நான் நினைத்து வைத்திருந்ததை அம்மாவே சொன்னார். அம்மாவுக்கு என்ன தெரியும்? எனக்கல்லவா தெரியும் அவர் என்னைச் சீராட்டி வளர்த்த வளர்ப்பை!

*

நான் இராசம்மா அக்காவைப் பார்க்கப் போனேன். என் அன்பையோ அந்தஸ்தையோ காட்டுவதற்கென்றோ என்னவோ அவருக்கு ஏதையாவது வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும் போலிருந்தது. அவருக்குச் செஞ்சோற்றுக் கடன் செலுத்த இதுதான் சமயம் என்பது போலவும் மனது அரற்றியது.

“அவரது அன்புக்கு, என்னைச் சீராட்டிச் சொரிந்த பாசத்திற்கு விலை கொடுக்க என்னால் இயலுமா?

என்றாலும்... நெஸ்ரமோல்ட், குளுக்கோஸ், பிஸ்கட் பெட்டிகள் சிலவற்றை வாங்கி ஒரு பையில் போட்டுக் கொண்டு அவரிடம் சென்றேன்.

“அக்கா... இராசு அக்கா” வாசலில் நின்று குரல் கொடுத்தேன். சில நிமிடங்களின் பின் முன்வேலிக்கு மேலால் ஒரு தலை தெரிந்தது.

மறுகணம் பெருங்குரல் கேட்டது.

“ஐயோ! செல்வம்... சிவம்... சின்னத்தம்பி... ஓடுங்கோ... வெட்டப் போறாங்கள்... சுடப் போறாங்கள்... ஓடுங்கோ”
எனக்கு என்ன செய்வதென்று புரியாத நிலை.

இராசு அக்கா என்னைக்கூட மறந்து விட்டார்.

விடிந்ததும் விடியாததுமாய் என்னைப் பார்க்க வீட்டிற்கே ஓடி வந்து, இடுப்பில் வைத்துத் தூக்கிக் கொண்டு திரிந்தவர்...

“பாபுக்குட்டி... பாபுக்குட்டி..” தினசரி நூறு தடவையாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அழைக்கத் தவறாதவர்... மாறி விட்டார். எல்லாம் மாற்றந்தான்! இந்த மாற்றத்தை உருவாக்கிய மதிநுட்பக்காரர்கள் யாரோ?

உள்ளே போகவும் சங்கடமாயிருந்தது. திரும்பிச் செல்லவும் முடியாதிருந்தது. இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் இராசம்மா அக்காவின் கடைக்குட்டி சின்னத்தம்பி வந்து கொண்டிருந்தான்.

"சின்னா என்னைத் தெரியுதா?"

ஒருமுறை மேலுங் கீழும் பார்த்து விட்டுச் சிரித்தான்.

"ஓம் தெரியும்"

"நான் ஆரெண்டு சொல்லு பாப்பம்"

"எங்கையோ கண்ட முகமாயிருக்குது. பேர்தான் தெரியேல்லை"

சில விநாடிகள் வானத்தைப் பார்ப்பதும் என்னைப் பார்ப்பதுமாக யோசித்தான். விடை கிடைக்கவில்லைப் போலும்! இல்லையென்பது போலத் தலையாட்டினான்.

"நான் பாபு அண்ணா"

சொன்னவுடன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"நீங்கள் சரியா மாறிப் போட்டீங்கள். ஆளை மட்டுக் கட்ட முடியேல்லை"

அவர்கள் மட்டுமல்ல நான்கூட மாறி விட்டேன் போலத்தானிருக்கிறது. எங்களுக்குத் தெரியாமலேயே ஏதேதோ மாற்றங்கள் நடந்தேறுகின்றன. சின்னாவுடன் உள்ளே போனேன்.

"சின்னத்தம்பி... அவங்கள் வாறாங்கள். ஓடிப்போடா! வெட்டிப் போடுவாங்கள்... சுட்டுப் போடுவாங்கள்... ஓடிப்போடா... தம்பி நீயும் ஓடிப்போ" இருவரையும் பார்த்துச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பேசாமலிரணை” என்று அதட்டி விட்டு, என்னை அழைத்தான் சின்னா. நான் எதுவுமே பேசாது அவ்விடத்திலேயே நின்றேன். நான் சின்னாவிடமா வந்தேன்?

இராசு அக்கா என்னையும் நான் கொண்டு வந்த பையையும் மாறி மாறிப் பார்த்தார். அதற்குள் சின்னா முற்றத்தில் கதிரையொன்றைக் கொண்டு வந்து வைத்தான். கதிரையில் அமர்ந்தவாறே இராசு அக்காவைப் பார்த்துக் கேட்டேன்.

“இராசு அக்கா! என்னைத் தெரியுதே?”

“ஓம்”

“ஆர்... சொல்லுங்கோ பாப்பம்”

“ஆர் நீதான்... சிவத்தோடை முந்தி வந்தனிதான்”

என் கண்களில் நீர் நிரம்பியது.

“நா... நான் உங்கடை பாபுக்குட்டி”

“எந்த பாபுக்குட்டி... ஆர் பாபுக்குட்டியோ?”

வெகுசாதரணமாக அவர் கேட்டது என்னையும் மீறி அழுகையைக் கொண்டு வந்தது.

“உ... உ... உங்களுக்குத் தெரியாது? ராசு அக்கா... உங்கடை பாபுக்குட்டியை மறந்திட்டீங்களே?” தொண்டைக்குள்ளால் குரல் உடைந்து விம்மல் வெடித்தது. கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

நான் கொண்டு வந்தவற்றை அவரிடம் நீட்டினேன். முதலில் தயங்கியவர் பின்னர் அதனை வாங்கிக் கொண்டார்.

அப்போதுதான் முழுமையாக அவரை உற்று நோக்கினேன். கண்கள் குழி விழுந்து தாழ்ந்திருந்தன. கண்களில் ஒளியில்லை. முகத்தில் சோகத்தின் தேக்கங்கள். தலைமயிர்கள் குலைந்து கிடந்தன. அவர் உடுத்திருந்த சேலை ஐந்தாறு நாள்களோ அதற்கு அதிகமாகவோ தோய்க்காது அழுக்குப் படிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தியிருந்த அவரது இடது காலில் முழங்காலுக்குக் கீழே பெரியதொரு புண். அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்தேன்.

"நீயும் கவனமாயிரு மேனை. அவங்கள் எல்லாரையும் சுடப்போறாங்களாம். வெட்டப் போறாங்களாம்"

"ஆர் சுடப்போறாங்களாம்" பீதியுடன் சொன்ன அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"அவங்கள்தான்... வெளியாலை வெளிக்கிட்டு எல்லாரையும் சுடப் போறாங்களாம்" அவரது பேச்சைக் கேட்கச் சிரிப்பாய்த்தானிருந்தது.

அந்தச் சிரிப்பிற்குள் விரக்தி... வேதனை கலந்திருந்தது.

"சரி, வாறன்" புறப்பட எழுந்தேன்.

"கவனமாப் போ மேனை! வழிதெருவிலை அவங்கள் வந்தாலும் சுட்டுப் போடுவாங்கள்" இராசம்மா அக்கா வழியனுப்பினார். அதுவரை உள்ளே நின்ற சின்னா என்னை வழியனுப்ப வெளியே வந்தான். அவன் தாயின் நிலைக்கான காரணத்தைச் சொன்னான்.

*

அன்று, அதிகாலை வேளை. வானில் இயந்திர வல்லூறுகள் நடமாடின. சுற்றிச் சுழன்று வட்டமிட்ட அவற்றின் பேரொலி கேட்டு, உறக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அலறியடித்துக் கொண்டு பாதுகாப்பிடங்களில் பதுங்கிக் கொண்டனர். ஒரு குண்டு பெரும் அதிர்வுடன் விழுந்து வெடித்தது. தொடர்ந்து அடுத்தடுத்து ஆறு குண்டுகள்.

விமானங்கள் சென்றபின் மரண ஓலங்கள் கேட்டன. துடித்துப் பதைத்த வண்ணம் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி அனைவரும் ஓடினர். அவர்களில் ஒருவராக இராசம்மா அக்காவும் ஓடினார்.

அங்கே அவர் கண்ட காட்சிகள்! துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த உடல்கள்... அங்கங்களற்று குற்றுயிரில் முனகிக் கிடந்த உயிர்கள்... சிதறிய கட்டிடங்கள்...

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காட்சிகள்தான் அவரை இப்படியாக்கி விட்டன. இந்த மாற்றத்துக்குக் காரணமான மதிநுட்பகாரர்கள் எக்காளமிடுகிறார்கள். எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த எக்காளங்கள் நீடிக்கப் போகின்றனவோ?

அதன் பின் ஒருநாள் நான் புத்தூருக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் இராசம்மா அக்கா வேகமாக எங்கோ போய்க் கொண்டிருந்தார்.

"எங்கை ராசு அக்கா போறீங்கள்?" அவரை வழிமறித்துக் கேட்டேன்.

"அதையேன் ராசா கேக்கிறாய்... அவங்கள் என்ரை செல்வத்தைச் சுட்டுப் போட்டு கொத்தியாலடிச் சுடலையிலை எரிச்சுப் போட்டாங்கள். அதுதான் பாக்கப் போறன்" என்று சொல்லி விட்டு, என்னை விலத்திக் கொண்டு சுடலைப்பக்கமாக நடந்தார்.

"ராசு அக்கா நீங்கள் வாங்கோ! நான் கொண்டு போய் விடுறன். வழியிலை செக்கிங்குக்கு ஆமிக்காரர் நிண்டாலும் நிப்பாங்கள்"

"நிப்பாங்களோ?" எனக் கேட்டு விட்டு, எனது சைக்கிள் பின் கரியரில் ஏறி அமர்ந்தார்.

ஏற்றிக் கொண்டு வந்து இறக்கி விட்டு, சின்னாவிடம் சொல்லி விட்டுச் சென்றேன். பாவம் சின்னா! அவன்தான் எல்லாத்தையும் கவனிக்க வேண்டும். செல்வம் கனடா போய் விட்டான். சிவம் களத்துக்குப் போய் விட்டான். தாயைக் கவனிப்பது சின்னாதான். அவன் எத்தனையைப் பார்க்க வேண்டும்? சமையல்... படிப்பு... தாயின் பணிவிடை..

அவனது வாழ்வும் அப்படியாகி விட்டது.

சற்று அயர்ந்து தூங்க முயன்ற என்னை மீண்டும் இராசம்மா அக்காவின் குரல் எழுப்பியது.

"ஐயோ! என்ரை மக்களை வெட்டுறாங்கள்... சுடுகிறாங்கள்... கொல்லுறாங்கள்! காப்பாற்றுவாரில்லையா?"

இரவின் நிசப்தத்தைக் கிழித்து அக்குரல் செவிப்பறையில் மோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
92717

எதிரொலித்தது. அதனைத் தொடர்ந்தாற் போல் தூரத்தே ஊர் நாயொன்றின் ஊளையொலி எழுந்தது.

இராசம்மா அஃக்காவிற்காக அனுதாபப்பட்டேன். வெறும் அனுதாபம்... அனுதாபப்படுவதால் அவருக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது? என்றாலும்... இப்போதைக்கு இதைவிட வேறென்ன செய்ய முடியும்?

*0*

*(1991இல் எழுதியது. வெள்ளிமலை: மார்கழி, 2008)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

14298

புலர்காலையின் வலி/இயல்வாணன்/112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




photo: saanthakunam

இந்தக் கதைகளுடன் அறிமுகமாகும்போது கடந்த காலத்தின் சில கதவுகள் திறபடுகின்றன. அதன் வழியே நம் நினைவுகள் பின்னோக்கிச் செல்கின்றன. அதிலே நாம் வாழ்ந்த, அறிந்த வாழ்க்கை மீளக் காண்பிக்கப்படுகிறது. காலச் சித்திரத்தைத் தம்முள் கொண்டுள்ள இந்தக் கதைகளில் வரலாற்றின் முகம் தீர்க்கமாகப் பதிவாகியுள்ளது. சமகாலம் மட்டுமல்ல, கடந்த காலம், எதிர்காலம் என முக்காலமும் திறந்து பார்க்கப்படுகிறது. முக்காலத்தையும் திறந்து பேசுவதினூடாக முக்காலத்தின் ஊடும் ஒரு பயணம் நிகழ்கிறது. இந்தப் பயணத்தில் காலம், இடம், பொருள், ஏவல் என்பவற்றோடு மனிதர்களின் நடத்தைக் கோலங்களையும் பார்க்க முடிகிறது. இந்த நிகழ்ச்சிகள் நம் வாழ்விலும் அதன் அருகிலும் நிகழ்ந்தவை. நிகழ்ந்து கொண்டிருப்பவை.



தாயதி

cover rashmy

ISBN 978-624-98471-6-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org